உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 28 புதன்கிழமை (12-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:106

## மிகப் பாரதூரமான சம்பவம்தான்

# கப்பல் தாக்கப்பட்ட போதிலும் இப்போதைக்கு யுத்தம் இல்லை!




தமிழீழ நீதிமன்ற வளாகத்தை அன்ரன் பாலசிங்கம் திறந்து வைப்பதை முதல் படத்தில் காணலாம். விழாவில் கலந்துகொண்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, அடேல் பாலசிங்கம் ஆகியோருடன் அன்ரன்பாலசிங்கம் அமர்ந்திருப்பதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

## அன்ரன் பாலசிங்கம் நேற்று கிளிநொச்சியில் அறிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்12

**கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தை புலிகளின் தலைமைப்பீடம் மிகப் பாரதூரமான ஒன்றாகவே கருதுகிறது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுக் கூறினார். ஆயினும் மற்றொரு யுத்தத்திற்குப் புலிகள் உடனடியாகச் செல்லமாட்டார்கள் எனவும் அவர் சொன்னார்.**

'இந்தச் சம்பவத்தை வைத்துக் கொண்டு நாங்கள் போருக்கு போக மாட்டோம் பொறுமையாக இருப்போம். எந்தளவுக்கு எந்தளவு பொறுமை காக்கமுடியுமோ அந்தளவுக்குப் பொறுமையைக் காப்போம். எமது பக்கம் நியாயம் உண்டு என்பதை உலகிற்கு காட்ட முயற்சிப்போம் - என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தமிழீழ நீதிமன்ற வளாகத்தை நேற்றுக்காலை திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த பொழுதே அவர் இதனைக் கூறினார்.

கப்பல் தாக்கப்பட்டதில் மூன்று லெப்டினன்ட் கேணல்கள் உட்பட பல போராளிகளை இழந்திருப்பதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

**பாலாவின் உரை உள்ளே.....**

கிளிநொச்சி நீதிமன்ற வளாக திறப்பு விழாவில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரை முழுமையாக உள்ளே பிரசுரமாகியுள்ளது.



## வன்னியில் வெடிபொருள்கள் அழிப்பு

கிளிநொச்சி,மார்ச்12

ஆனையிறவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைவிட்டுச் சென்ற வெடிபொருள்கள் நேற்று மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அழிக்கப்பட்டன.

இராணுவம் கைவிட்டுச் சென்ற 120 மி.மீ. எறிகணைகள் - 20, 82 மி.ம. எறிகணைகள் - 12, 81 மி.மீ. எறிகணைகள் - 12, 60 மி.மீ. எறிகணை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பதில் நடவடிக்கைகள் குறித்து புலிகள் இன்று அறிவிக்கக்கூடும்

கிளிநொச்சி,மார்ச்12

புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை தணிப்பதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீவிரமாக முயன்று வருகிறது.

தற்போதைய நிலைமை பற்றி புலிகள் தரப்புடன் பேசுவதற்காக கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலிநசன் இன்று கிளிநொச்சி செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தை பாரதூரமான ஒரு மீறல் என்று அறிவித்திருக்கும் புலிகளின் தலைமை இந்தச் சம்பவத்தை அடுத்து தமது தரப்பில் எடுக்கப்படவிருக்கும் பதில் நடவடிக்கைகள் பற்றி இன்று கண்காணிப்புக்குழுவிடம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை -, புலிகளின் கப்பல் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டதற்குக் கடும் ஆட்சேபமும் கண்டனமும் தெரிவித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் எழுதிய கடிதத்துக்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பதில் அனுப்பியிருக்கிறார் என்று தெரியவருகிறது.

கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தை நியாயப்படுத்தும் வகையிலேயே பதில் கடிதம் அமைந்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

அதேவேளை, கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்கு கடும் ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் பதில் நடவடிக்கைகளில் இறங்கப் புலிகள் தயாராகி வருகிறர்கள் என்று வன்னியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## தமிழீழ நீதிமன்ற வளாகம் நேற்று கிளிநொச்சியில் திறப்பு!

யாழ்ப்பாணம்,மார்ச்12

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழீழ நீதிமன்ற வளாகத்தின் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நாடாவை வெட்டி நீதிமன்ற வளாக கட்டடத்தை திறந்து வைத்தார்.

திறப்பு விழா நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியைக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றி வைத்தார். நீதிமன்ற வளாகப் பெயர்ப்பலகையை நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழக்குமரனும், நீதிமன்றப் பெயர்ப் பலகையை வே.பாலகுமாரனும், மேன்முறையீட்டு நீதிமன்றப் பெயர்ப்பலகையைதமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் தமிழ்க் கூட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் அழிப்புச் சம்பவம்: ஜனாதிபதி - பிரதமர் பேச்சு

கொழும்பு,மார்ச்12

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று நண்பகல் சந்திப்பொன்று நடைபெற்றது.

சுமார் இரண்டரை மணிநேரம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் உட்படப் பல விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இச்சந்திப்பில் பேசப்பட்டதாக பிரதமர் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவுச் சம்பவம் ஏற்படுத்தியுள்ள அரசியல் நெருக்கடியின் பின்னணியில் இந்தத் திடீர் சந்திப்பு இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

## களுத்துறைத் தமிழ்க் கைதிகளின் வடக்கு - கிழக்கு தொடர்பான வழக்குகளை அப்பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற உறுதி

### விநாயகமூர்த்தியிடம் சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்12

களுத்துறைச் சிறைச்சாலையில் இறும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க்கைதிகளின் வழக்குகள் வடக்கு - கிழக்குடன் தொடர்புடையதாக இருந்தால் அந்தந்தப் பிரதேச நீதிமன்றங்களுக்கு அவை மாற்றப்படும்.

அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் இணங்கியுள்ளார்.

களுத்துறைக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, சட்டமா அதிபருடன் நேற்று தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போதே மேற்படி விடயத்திற்கு சட்டமா அதிபர் இணங்கினார் என விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவித்தார்.

பதினொராவது நாளாக உண்ணா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் அரசு தூது அனுப்புகிறது

கொழும்பு,மார்ச்12

பதினொரு போராளிகளுடன் விடுதலைப் புலிகளின் கப்பல், கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது பற்றி புலிகளுக்கு நேரில் தகவல்களைத் தெரிவித்து, விளக்கம் அளிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்ரமவை அரசாங்கம் அனுப்புகிறது. அவருடன் கட்டுநாயக்கா சர்வதேச விமானத்தளப் பணிப்பாளர் அபேரத்ன செல்கிறார்.

இருவரும் எந்த நேரத்திலும் வன்னிக்குப் புறப்படலாம் என்று தெரிகிறது. (ஐ)






நேற்று கிளிநொச்சியில் நடந்த தமிழீழ நீதிமன்ற வளாக திறப்பு விழா நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட சில படங்கள் இவை.
*(படங்கள் தேவராஜன்)*

### ஐ.தே.க.வில் அங்கத்துவம் பெறுவதற்கு

# ஜீ.எல்.பீரிஸ், திஸாநாயக்கா உட்பட எண்மருக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத்தடை நிராகரிப்பு!

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு

அமைச்சர்கள் ஜீஎல்பீரிஸ், எஸ்.பி.திஸாநாயக்கா உட்பட எட்டுப் பேருக்கு ஐ.தே.க.அங்கத்துவம் வழங்கப்படக்கூடாது என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விதித்த இடைக்காலத்தடை உத்தரவு நேற்று ரத்துச் செய்யப்பட்டது.

மேற்படி எண்மருக்கும் ஐ.தே.க. அங்கத்துவம் வழங்குவதை நிறுத்தி வைக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திர தேசப்பற்று அமைப்பின் சார்பில் எதிரிவீர பிரேமரட்ண என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

ஜீஎல்பீரிஸ், எஸ்பி.திஸாநாயக்கா உட்பட எண்மரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசை கலைத்துவிடுவதற்கென்றே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேசப்பற்று அமைப்பை உருவாக்கினார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் தோற்றுப்போன பின்னர் மேற்குறிப்பிட்ட எண்மரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள முற்படுகிறார்கள் என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர் மனுதாரர்களான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரிய, தவிசாளர் மாலிக சமரவிக்கிரம, செயலாளர் சென ரத் கபுகொடுவ ஆகியோர் உட்பட 12 பேர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் குறிப்பிட்ட எண்மரும் இன்று கண்டியில் ஐ.தே.க.அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளவிருக்கிறார்கள் என்று தெரிவித்து அதனைத் தடை செய்யுமாறு மனுதாரர் கேட்டிருந்தார்.

மனுவை விசாரித்த நீதிபதி மேற்படி எண்மரும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ள நேற்றுமுன்தினம் இடைக்காலத்தடை விதித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அநுரா - விமல் வீரவன்ச கூட்டணிக்கு

# மஹிந்த ராஜபக்ஷவை பலமிழக்கச் செய்து சந்திரிகாவை விரட்டியடிப்பதே தேவை

## இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கூறுகிறார்

கொழும்பு,மார்ச்12

அநுரா பண்டாரநாயக்க, விமல் வீரவன்ச ஆகியோர் அரசுக்கு எதிராக எழுப்பும் கோஷம் எதிர்க்கட்சியின் கோஷமல்ல என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிராக கொழும்பில் நடத்தப்பட்ட பேரணி தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அநுரா, விமல் கூட்டணிக்குத் தேவையாக இருப்பது எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை பலமிழக்கச் செய்து சுதந்திரக் கட்சியிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை விரட்டியடிப்பதேயாகும்.

அநுரா, விமல் கூட்டணி சமாதான முயற்சியை நிறுத்துமாறு கோரி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

தற்செயலாக சமாதான முயற்சி நிறுத்தப்பட்டு யுத்தமொன்று ஏற்படுமேயானால் பொருள்களின் விலைகள் இன்று இருப்பதைக் காட்டிலும் பாரியளவில் அதிகரிக்கும் இவர்கள் இருவரிடையேயான கூட்டு சு.க.வி.லுள்ள சிறந்த இடது சாரிகளை ஓரம் காட்டுவதாக அமையும்.

அநுரா பண்டாரநாயக்க 1988 ஆம் ஆண்டில் இவ்வாறான ஒரு கூட்டுக்காகப் பாடுபட்டார். அதனால் விஜய குமாரதுங்க போன்றவர்களை நாம் இழந்தோம்.

பொருள் விலை உயர்வுக்கு எதிர்ப்பு காட்டுவதனால் அதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பூரண ஒத்துழைப்பைப் பெறலாம். ஆனால், சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கு மக்களின் ஆதரவு குறைவாகவே இருக்கும் இதனை எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உணர்ந்து செயற்பட வேண்டும்.

- இவ்வாறு அவர் சொன்னார்.

### பெறுபேறுகள் மாத முடிவில்!

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் இம்மாத முடிவில் சகல பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பிவைக்கப்படுமென கல்வித்திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூன்று லட்சத்து 83 பாடசாலை மாணவர்களும் ஒரு லட்சம் 30 ஆயிரத்து 851 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இப்பரீட்சைக்கு கடந்த வருடம் தோற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

### இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.மு. எம்.பி. கைது

கொழும்பு,மார்ச்12

இரத்தினபுரி மாவட்ட பொதுமக்கள் முன்னணி எம்.பி.பிரேமலால் ஜெயசேகர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் நிவித்திகல பிரதேச சபை உறுப்பினர் நிசாந்த தசநாயக்காவை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் நிவித்திகல பொலிஸார் இவரைக் கைதுசெய்து, இரத்தினபுரி நீதிவான் டபிள்யூ.டி.பி.போயகொட முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

(ஐ)

### வடக்கு - கிழக்கில்

# தகுதிகாண் ஆசிரியர்கள் 1,000 பேர் நியமனமாவர்

யாழ்ப்பாணம்,மார்ச்12

ஜீ.சி.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களில் இருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் தகுதிகாண் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும் .

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாடசாலைகள் கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ. இருநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர், காரைநகர் ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்தபோதே அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கு திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது. மேலும் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கும் திறைசேரியிடம் கோரியுள்ளேன். உயர்தரம் சித்திபெற்ற தொண்டர் ஆசிரியர்களும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் இந்த ஆயிரம் பேருக்குள் அடங்குவர். அத்துடன் கடந்த ஆண்டில் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களில் மிகுதியாக உள்ள 250. பேருக்கும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலையின் சகல வளங்களையும் பார்வையிட்ட அமைச்சர் பாடசாலைச் சமூகத்தினருடனும் கலந்துரையாடியுள்ளார். (ஜ-10-73)

### வண்ணை ஆனந்தன் காலமானார்

யாழ்ப்பாணம்,மார்ச்12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவரான வண்ணை ஆனந்தன் தனது அறுபதாவது வயதில் நேற்று ஜேர்மனியில் காலமானார். இவரது இயற்பெயர் நமசிவாயம் ஆனந்த விநாயகர். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சொந்த இடமாகக்கொண்டவர்.

1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் இளைஞர் பேரவை உறுப்பினராக விளங்கிய இவர் பல அரசியல் நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

70 களில் பிற்பகுதியில் இங்கிருந்து புலம் பெயர்ந்து சென்ற வண்ணை ஆனந்தன் இறக்கும்வரை ஜேர்மனியில் வசித்து வந்தார். (ஐ)



இருநாள் விஜயம் மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த பாடசாலைகள் கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய கட்டடங்களைப் பார்வையிட்ட பின்னர் கல்வி அதிகாரிகள் குழுவுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் அருகில் காணப்படுகின்றார்.
*(படம்:ந.பாரதி - காரைநகர் செய்தியாளர்)*

# வடக்கு, கிழக்கில் ஆசிரியர்கள் நேற்று முழுஅளவில் வேலைநிறுத்தம்

## மாணவர்களும் வரவில்லை; அனைத்து பாடசாலைகளும் செயலிழந்தன

காரைதீவு,மார்ச்12

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு, கிழக்கில் நேற்று நடத்திய ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தினால் அனைத்து பாடசாலைகளும் செயலிழந்தன. இஸ்லாமிய ஆசிரிய சங்கம், முஸ்லிம் ஆசிரிய காங்கிரஸ் என்பனவும் இப்போராட்டத்தில் ஈடுபட்டன.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கல், வெள்ள நிவாரண முற்பணம் வழங்கல், ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்கல் உட்பட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடத்தப்பட்டது.

வடக்கு-கிழக்கில் அனைத்து தமிழ் முஸ்லிம்பாடசாலைகளும் ஸ்தம்பிதமடைந்தன. ஆசிரியர்கள் முதல் நாளே லீவுக்கு விண்ணப்பித்துவிட்டு கடமைக்கு வரவில்லை.

மாணவர்களில் 90 சதவீதமானோர் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. சென்ற மாணவர்களும் பாடசாலைகள் பூட்டிக் கிடந்ததைப் பார்த்துவிட்டு திரும்பிச் சென்றனர்.

அம்பாறை மாவட்ட கரையோர கல்முனைக் கல்வி மாவட்டத்தில் வேலை நிறுத்தம் முழுவெற்றியடைந்தது.

கல்முனைக்கல்வி மாவட்டத்திலுள்ள 131 முஸ்லிம் பாடசாலைகள், 76 தமிழ்ப் பாடசாலைகள் உட்பட மொத்தம் 207 பாடசாலைகள் மூடப்பட்டன.

3625 ஆசிரியர்களும் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் 94 ஆயிரத்து 289 மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை.

அக்கரைப்பற்று வலயத்தில் 57 முஸ்லிம், 34 தமிழ் பாடசாலைகளில் கற்பிக்கும் 1,035 ஆசிரியர்களும் சம்மாந்துறை வலயத்தில் 39 முஸ்லிம், 19 தமிழ் பாடசாலைகளில் கற்பிக்கும் 845 ஆசிரியர்களும் பாடசாலைகளுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றைய போராட்டத்தினால் வடக்கு - கிழக்கில் ஆயிரத்து 668 பாடசாலைகள் முற்றாகச் செயலிழந்தன என்றும் 20 ஆயிரம் ஆசிரியர்கள் கடமைக்கு சமுகமளிக்கவில்லை என்றும் தமிழர் ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (ஐ)

(குடாநாட்டில் நடைபெற்ற போராட்டம், பேரணி பற்றிய செய்தி III ஆம பக்கத்தில்)

# பாடசாலைகளுக்கு இன்று கணனிகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ். மாவட்டப் பாடசாலை நூலகங்களுக்கும், வலயங்களுக்கும் கணனித் தொகுதிகள் இன்று வழங்கப்பட உள்ளன என்று மாகாண நூலக இணைப்பாளரும், உதவிக்கல்விப் பணிப்பாளருமான ந.அணந்தராஜ் அறிவித்துள்ளார்.

பின்வரும் பாடசாலைகளின் அதிபர்களையும் வலயக் கல்விப்பணிப்பாளர்களையும் கணனிகளைப் பெற்றுக் கொள்ள வரும்போது, தமது பதவி முத்திரை, பொருள் பதிவேட்டுப் புத்தகம் ஆகியவற்றுடன் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். வலயக்கல்விப் பணி மனைக்குச் சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரி, பெரியபுலம் ம.வி., மானிப்பாய் இந்துக் கல்லூரி, நயினாதீவு ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி., யாழ்.இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய ம.வி., உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகிய பாடசாலை நூலகங்களுக்குத் தலா ஒரு கணனித் தொகுதியும் தீவகம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென மராட்சி, வலிகாமம் வலயங்களுக்குத் தலா இரண்டு கணனித் தொகுதிகளும் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒன்பது பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சர் விஜயம்

இருநாள் விஜயம் மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த பாடசாலை கல்வி அமைச்சர் கரநிமல ராஜபக்ஷ நேற்று மூன்று பாடசாலைகளில் புதிதாக நூலகங்களைத் திறந்துவைத்தார்.

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், நவாலி மகா வித்தியாலயம், அராலி மகா வித்தியாலயம் ஆகியவற்றிலேயே நூலகக் கட்டடங்களை அமைச்சர் திறந்து வைத்தார்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி, தியாகராஜா ம.ம.வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி உள்ளிட்ட 9 பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்த அமைச்சர், அங்குள்ள பௌதிக வளங்களைப் பார்வையிட்டார்.

கல்வி அமைச்சருடன் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். மாவட்ட கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் உட்பட பலரும் அமைச்சருடன் வருகைதந்திருந்தனர். (ஐ-73)

## வடக்கு - கிழக்கு மாகாணத்தில்

# காணி, சொத்துடைமை உறுதி மாற்றத்துக்கு முத்திரைக் கட்டணம் அறவிடவே கூடாது!

## பதிவாளர்நாயகம் சுற்றறிக்கைமூலம் அறிவுறுத்தல்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருக்கும் காணிகள் தொடர்பாக எழுதப்படும் அறுதி மற்றும் நன்கொடை உறுதி மாற்றங்களுக்கு முத்திரைக் கட்டணமோ, வரியோ அறவிடமுடியாது. மத்திய அரசின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் இத்தகைய உறுதி மாற்றங்களுக்கு முத்திரைக் கட்டணங்கள் அறவிடுவதற்கு ஒழுங்கு விதிகள் ஏதும் இல்லை.

எனவே இத்தகைய உறுதி மாற்றங்களுக்கான முத்திரைக் கட்டண அறவீடு முறையொன்றை வடக்கு - கிழக்கு மாகாணசபை அறிவிக்கும் வரை அப்பிரதேசத்தில் முத்திரைக் கட்டணம் அறவிடக்கூடாது.

பதிவாளர் நாயகம் எல்.கே.ரட்ணசிறி, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சகல காணிப்பதிவாளர்களுக்கும் இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்திருக்கின்றார்.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நாடு முழுவதிலும் மேற்படி காணி உறுதி மாற்றங்களுக்காக 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரை வரிச்சட்டத்தின் கீழ் மத்திய அரசுக்கு முத்திரை வரி செலுத்தவேண்டியிருந்தது.

ஆனால், இந்த முத்திரை வரியை மாகாணசபைக்கு அறவிடுவதற்கு வசதியாகத்தான் வரி அறவிடும் நடவடிக்கையை 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் மத்திய அரசு ஒழித்தது.

வடக்கு - கிழக்கு மாகாணசபை தவிர்ந்த ஏனைய 8 மாகாணசபைகளும் 2002 மே 1ஆம் திகதிமுதல் மேற்படி காணி உறுதிகளுக்கான முத்திரை வரியை தாம் அறவிடுவதற்கான சட்ட ஒழுங்குகளையும் தாமே ஆக்கிக்கொண்டனர்.

ஆனால் வடக்கு - கிழக்கு மாகாண சபை 1990 இல் கலைக்கப்பட்டு நேரடியாக ஆளுநரின் கீழ் அது நிர்வகிக்கப்பட்டு வருவதால் புதிய சட்ட விதிகளை ஏற்படுத்த முடியாத நிலையில் அந்தச் சபை இருந்து வருகிறது.

எனினும் மத்திய அரசின் பழைய (ஒழிக்கப்பட்ட) சட்டத்தின் கீழ் 2002 மே 1ஆம் திகதியிலிருந்து இப்போது வரை வடக்கு - கிழக்கில் உள்ள பதிவாளர்கள் காணி சொத்துடைமை மாற்றத்திற்கு முத்திரை வரி அறவிட்டு வந்தனர்.

மத்திய அரசினால் ஏற்கனவே ஒழிக்கப்பட்ட - செயலிழந்த - ஒரு சட்ட விதியின் கீழ் கடந்த 11 மாதங்களாக வடக்கு - கிழக்கு மக்களிடம இருந்து தினசரி பல மில்லியன் ரூபா முத்திரை வரியாக அறவிடப்பட்டு வந்தது.

அதனையே நிறுத்தும்படி இப்போது என்.பி.10/30/132/2002 இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் உத்தரவிட்டிருக்கின்றார் பதிவாளர் நாயகம்.

இந்த முத்திரைக் கட்டணம் அறவிடுவதை எதிர்த்து சட்டத்தரணி வீ.ரோரர் டி.யோகேந்திரா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பாக சட்டத்தரணி கந்தையா நீலகண்டன், பதிவாளர் நாயகம், இறைவரி முத்திரை ஆணையாளர் ஆகியோருக்கு முறையிட்டிருந்தார். அவரது முறைப்பாட்டை அடுத்தே புதிய சுற்றுநிருபம் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி சட்டத்தரணி கந்தையா நீலகண்டனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


2003.03.14ஆம் நாள் முதல்....

பளை நகரிலும் தன் பணி தொடங்குகின்றது

தமிழீழ வைப்பகம்

உங்கள் வளமான வாழ்விற்கான பல்வேறுபட்ட மேம்பட்ட சேவைகளுடன்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

உங்கள் அருகில் உங்கள் தெரிவில் உங்களிற்காகவே

தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்

(சுனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப [illegible] துகிறோம்)

# பெரும்பான்மைப் பலம் உள்ளபோதும் நலிவுற்ற நிலையிலேயே ரணில் அரசு

**சமாதானத்தின் மூலம் அரசு பலம் பெற்றாலும் .அது எச்சரிக்கையுடன் கூடியதாகவே அமையும். காரணம் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தால, அரசு விழ்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. பிரபாகரனை நலிவடையச் செய்து - எதிர்க்கட்சியிடமுள்ளநிறைவேற்று அதிகாரங்களைக் கட்டுக்குள் கொண்டுவந்து - முஸ்லிம் காங்கிரஸைத் திருப்திப்படுத்திட இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று - செயற்படுவது என்பது கயிற்றின் மீது நடப்பதற்கு ஒப்பானது. உபுல் ஜோசப் பெர்னாண்டோவால் எழுதப்பட்டு 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

தற்போது எல்லோரும் இது பற்றித்தான் பேசிக்கொள்கிறார்கள். ஸ்ரீலங்காவின் வரலாற்றில் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இவ்வளவு விரைவில் இது போன்ற விடயம் குறித்து, இவ்விதம் முன்னெப்போதும் பேசப்படவில்லை. வேறுவகையில் கூறுவதானால், ஓர் அரசு நிறுவப்பட்டு ஓராண்டு முடிவதற்குள் அதன் வீழ்ச்சி குறித்து பேசப்பட்டது. ஸ்ரீலங்கா அரசியல் வரலாற்றில் வேறெந்தவோர் அரசுக்கும் ஏற்பட்டதில்லை. அவ்விதம் நிகழ்ந்திருப்பின், அது 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலையடுத்து அமைக்கப்பட்ட அரசு குறித்தே பேசப்பட்டிருக்கும். அச்சமயம், அமைக்கப்பட்ட அரசுக்கு தேவையான பெரும்பான்மைப் பலம் இல்லாத காரணத்தால் அவ்வாறு பேசப்பட்டிருக்கலாம். பரபரப்பாய் பேசப்பட்டது போலவே அந்த அரசும் தூக்கி வீசப்பட்டது. ஆனால், தற்போதைய ரணிலின் அரசு அந்த நிலையில் இல்லை. அது தெளிவான பெரும்பான்மை



பலத்துடன் நிறுவப்பட்ட அரசு என்பதோடு அதன் ஓராண்டு பூர்த்தியடைந்த நிலையிலும் அப்பெரும்பான்மை பலம் உறுதிசெய்யப்பட்ட நிலையில் இயங்கும் அரசாக உள்ளது. அப்படியாயின் அரசின் வீழ்ச்சி பற்றி ஏன் பேசப்படுகிறது?

காரணம் வேறெதுவுமல்ல. ஸ்ரீலங்காவின் அரசியல் வரலாற்றில் சுதந்திரத்தின் பின்னர் நிறுவப்பட்ட அரசுகளில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசே பலவீனமான அரசு என்பதே இதற்குக் காரணமாகும்.

அவ்விதம் கூறக் காரணம் என்னவெனத் தெரிந்துகொள்வதானால் ஸ்ரீலங்காவின் அரசியல் வரலாற்றில் பதவி வகித்த அரசுகள் பற்றி தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

ஸ்ரீலங்காவின் முதலாவது அரசு நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட பிரதமரான டீ.எஸ்.சேனநாயக்காவின் கூட்டு அரசாங்கமே. பின்னர் ஒரு சமயம் ஐ.தே.கட்சியிலிருந்து பிரிந்து ஸ்ரீ.ல.சு.கட்சியை உருவாக்கியோரும் அவ்வேளையில் ஐ.தே.கட்சியில் இருந்தமையால் அது உறுதியானதோர் அரசாக இயங்கியது. அவ்வேளையில் எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட இடதுசாரிக் கட்சிகளால் அரசுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை. அரசுக்கும் பிரித்தானிய இராச்சியத்துக்குமிடையே நல்லுறவு நிலவியதால் அரசுத் தலைவராக விளங்கிய பிரித்தானிய தேசாதிபதியும் அந்த அரசு உறுதியாகச் செயற்பட ஒரு காரணமானார்.

ஸ்ரீலங்காவின் இரண்டாவது அரசாக இயங்கிய நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட பிரதமரான டட்லி சேனநாயகவின் அரசு முற்றாக ஐ.தே.கட்சியினரைக் கொண்ட பெரும்பான்மை பலம் கொண்ட அரசாக அமைந்தது. டி.எஸ்.சேனநாயகாவின் அப்போதைய அரசின் கடைசிக் காலத்தில் அரசிலிருந்து பண்டாரநாயக்கா வெளியேறியதை அடுத்து அரசு பலமிழந்ததாயினும் பண்டாரநாயகாவினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ.ல.சு.கட்சியை பெரும் தோல்வியடையச் செய்ததன் மூலம் டட்லி சேனநாயக்காவால் புதிய அரசை நிறுவ முடிந்தது. இதனால் எதிர்க்கட்சி பலமிழந்ததுடன், அரசின் தலைவரான தேசாதிபதி, பிரதமர் டி.எஸ்.சேனநாயகாவின் மரணத்தையடுத்து பிரதமர் பதவிக்கு டட்லி சேனநாயக்காவின் பெயரை பிரேரித்தமையும் அரசுக்கு பெரிய பலத்தை ஏற்படுத்தியது.

அதன்பின்னர் ஐ.தே.கட்சி முக்கிய எதிர்க்கட்சியாக இயங்கக் கூடத் தேவையான நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்ற இயலாத வகையில் அதனைப் பெரும் தோல்வியடையச் செய்து நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட பிரதமராகி, எஸ்.டபிள்யூ ஆர்.டீ.பண்டாரநாயக மூன்றாவது அரசமைத்தார். அவ்வேளையில் ஐ.தே.கட்சிக்கு தலைவர் எவரும் இருக்கவில்லை. எதிர்க்கட்சியான இடதுசாரிக்கட்சிகள் நிபந்தனைகளுடன் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கின. அரசின் தலைவரான தேசாதிபதி ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவராக இருந்தமையால், அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க அக்கறை காட்டாத போதிலும் 1956 கலவரத்தின் ஆற்றலைக் கண்டு அதற்கு, அஞ்சி அரசைப் பாதுகாக்கும் முக்கியஸ்தராக மாறினார்.

ஸ்ரீலங்காவின் நான்காவது அரசான டட்லி சேனநாயக்கவின் அரசு ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெறத் தவறியதன்காரணமாக கவிழ்க்கப்பட்டது.

ஸ்ரீலங்காவின் ஐந்தாவது அரசான ஸ்ரீமாவோவின் அரசு ஐ.தே.கட்சியை பத்து ஆண்டு காலமாக எதிர்கட்சியாக ஆக்கி பலம் வாய்ந்த அரசாக உருவாகியது. அரசின் பலத்துக்கு தேசாதிபதி அச்சுறுத்தலாக இருப்பாரென எண்ணி தேசாதிபதியாகவிருந்த ஐ.தே.கட்சியைச் சேர்ந்த சேர் ஒலிவர் குணதிலகவை பதவியிலிருந்து அகற்றி தமது நெருங்கிய உறவினரான வில்லியம் கோபல்லாவை அப்பதவிக்கு நியமித்ததன் மூலம் ஸ்ரீமாவோ தமது அரசை மேன்மேலும் பலமானதாக ஆக்கினார்.

ஸ்ரீலங்காவின் ஆறாவது அரசு ஏழு கட்சிகளை உள்ளடக்கிய கூட்டு அரசானபோதும், அதன் பிரதமர் பதவியை வகித்த டட்லி சேனநாயகாவின் அரசு பலமான அரசாக வளங்க முடிந்தமைக்கு காரணம் ஸ்ரீல.சு.கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து உருவான அரசு கவிழ்க்கப்பட்டுத் தோல்வியுற்றமையினால் ஆகும். தேசாதிபதி, ஸ்ரீமாவோவின் உறவினரானபோதும், ஸ்ரீமாவோவின் அரசு கவிழ்க்கப்பட்டு புதிய அரசு அமைக்கப்பட்டவேளை அவர் நடுநிலை வகித்தமையால் அரசுக்கு அவரால் எதுவித சிரமமும் ஏற்படுத்தப்படவில்லை.

ஸ்ரீலங்காவின் ஏழாவது அரசான ஸ்ரீமாவோவினால் நிறுவப்பட்ட அரசு சுதந்திரத்தின் பின் வலுவான அரசுகள் யாவற்றிலும் மிகப்பலம்வாய்ந்த அரசாக உருவாகியுள்ளது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்துடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இரு பதவிகளையும் அது தனவசம் பெற்றுக்கொண்டது. ஸ்ரீலங்காவின் எட்டாவது அரசு ஜே.ஆரின் தலைமையில் அமைந்தது. அது நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் ஸ்ரீலங்காவின் வரலாற்றில் உருவான அரசுக்களில் பெரும் பலம் வாய்ந்த அரசாக அமைந்தது. ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளை உள்ளடக்கிய ஒரு தலைவரே மீண்டும் மீண்டும் இரு தடவைகள் நாட்டை நிர்வகித்த வரலாற்றைக்கொண்ட அரசாக அது அமைந்தது. நாட்டின் அரசுத் தலைவரே தன் அரச அதிகாரத்துடன் கட்சியின் தலைமைத்துவத்தையும் வகித்த முதல் சந்தர்ப்பமாகவும் அது அமைந்தது. நாட்டின் ஒன்பதாவது அரசான பிரேமதாஸவின் தலைமையிலான அரசு நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் அரசை அழித்தொழிக்கும் நிலை நிலவிய தருணத்திலேயே பதவியேற்றது. ஆனாலும் தம்மிடம் இருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப்பதவி மற்றும் பிரதமர் பதவி நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப்பலம் என்பவற்றைப் பயன்படுத்தி பிரேமதாஸ, அரசை நிர்வகித்தார். ஜேவிபியின் கிளர்ச்சியை அடக்கியதோடு. இந்திய இராணுவத்தை நாட்டை விட்டு வெளியேற்றியதன் மூலம் அரசினது ஸ்திரத்தை அவர் மேன்மேலும் பலமடையச்செய்தார்.



ஸ்ரீலங்காவின் பத்தாவது அரசான சந்திரிகா அரசு ஒரேயொரு மேலதிக வாக்குப்பலத்துடன் அதிகாரத்தைக் கைப்பற்றியதன் மூலம் நிலையற்ற அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை தன்வசம் வைத்திருந்த - வரலாற்றில் அதுவரையில் நலிவுற்றதோர் அரசாக அமைந்தது. ஆனால், அரசமைத்ததன் பின். மிக விரைவில் ஜனாதிபதித் தேர்தலில் இறங்கி ஜனாதிபதி பதவியை கைப்பற்றியது மட்டுமன்றி அது ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் அதிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியின் அரசென்ற பெருமையையும் பெற்றுக்கொண்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப்பதவியை ஏற்ற பின்னர், பொலீஸ்மா அதிபர், இராணுவத் தளபதி மற்றும் கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தளபதிகள், சட்டமா அதிபர், பிரதம நீதியரசர் உட்பட்ட நீதிபதிகள் ஆகியோரை புதிதாக நியமித்து, 17 வருடங்களாக பாதுகாப்பு மற்றும் நீதிச்சேவைகளில் ஐ.தே.கட்சி செலுத்தி வந்த அதிகாரத்தை முடிவுக்கு கொண்டு வந்ததில் சந்திரிகாவின் அரசு வெற்றியீட்டியது. யாழ்ப்பாணத்தை விடுவிக்கும் நடவடிக்கையுடன் யுத்தத்தை ஆரம்பித்ததுடன் யுத்தத்தில் அரசின் கை மேன்மேலும் ஓங்கி அரசைப் பலமடையச் செய்தது.

தமிழில்:வியெஸ்ரி

ஸ்ரீலங்காவின் பதினோராவது அரசான இரண்டாவது தடவையாக சந்திரிகா உருவாக்கிய அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலம் தொடர்பாகப் பிரச்சினைகள் இருந்த போதிலும் நிறைவேற்று ஜனாதிபதி மற்றும்பிரதமர் ஆகிய பதவிகள் உட்பட நாடாளுமன்றப் பெரும்பான்மை பலத்தை கொண்டிருந்ததுடன் ஜனாதிபதியால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் நீதிச்சேவை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக இயங்கிய அரசாக அமைந்தது. பிரபாகரனுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளும் கூட வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. பின்னர் நாடாளுமன்றப் பெரும்பான்மைப்பலம் இழக்கப்பட்டபோதும் பல மாதங்களாக 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு விதிகளின் பிரகாரம் நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களின் மூலம் நிர்வாகம் வெற்றிகரமாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. நிறைவேற்று ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் இருக்கும்வரை அரசை வீழ்த்த இயலாதென தவறாகப் புரிந்த ஜனாதிபதி 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு விதிகளின் மீது அடிப்படை நம்பிக்கை வைத்திருந்தபோதும், அவரது அரசு வீழ்த்தப்பட்டது. இதனைச்செய்தது வேறு யாருமல்ல. ரணில் விக்கிரமசிங்கவே அவரது ஆட்சியை வீழ்த்தினார். இன்று அதிகாரத்தில் இருக்கும் பன்னிரண்டாவது அரசை ரணிலே நிறுவினார். ஸ்ரீலங்காவின் அரசியல் வரலாற்றில் ஆட்சி செய்த அரசுகளில் மிகப்பலவீனமான அரசாக அது அமைந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்காவின் அரசியல் வரலாற்றில் அதிகாரம் மிக்க நிறைவேற்று ஜனாதிபதி பதவியை தம்வசம் கொண்டுள்ள எதிரணியுடனேயே தனது அரசியலை நடத்த வேண்டிய நிலையுள்ளது. இதற்கு முன்னர் 1994 பொதுத் தேர்தலையடுத்து ஜனாதிபதிப்பதவி எதிரணியினர் வசம் இருந்தது. ஆனால், மிகக்குறுகிய சில மாதங்கள் மட்டுமே அந்நிலை நிலவியது. ஆனால், இன்றைய நிலை அவ்வாறில்லை அரசமைத்து ஓராண்டு பூர்த்தியடைந்த நிலையிலும் எதிரணியிடமே ஜனாதிபதிப் பதவி உள்ளது. பொலீஸ்மா அதிபர், முப்படைத் தளபதிகள், சட்டமா அதிபர் மற்றும் பிரதம நீதியரசர் உட்பட நீதிபதிகள் ஆகியோர் எதிரணியை சார்ந்த ஜனாதிபதியினாலேயே நியமிக்கப்பட்டுள்ளனர். இது ஸ்ரீலங்கா அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் இடம்பெறாத நிகழ்ச்சி ஆகும். அரசமைப்பின் பிரகாரம் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எதிர்க்கட்சி ஸ்ரீலங்காவில் முன்னெப்போதும் இருந்ததில்லை. அரசமைத்த பின்னர் தமக்கு விசுவாசமான அதிகாரிகளை நாட்டின் பாதுகாப்பு மற்றும் நீதித்துறைகளில் நியமிக்க இயலாத நிலைகொண்ட அரசு ஸ்ரீலங்கா அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் பதவி வகித்ததில்லை. ஆனால், எதிரணியைச் சேர்ந்த ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கொண்டு நியமிக்கப்பட்டவர்கள அடங்கிய ராணுவம், பொலீஸ்படை மற்றும் நீதிமன்றம் ஆகியவற்றுடனேயே ரணில் அரசை நடத்திச்செல்ல நேர்ந்துள்ளது.

அதுமட்டுமல்ல, அவரது அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருந்தபோதிலும் அது இரண்டோ மூன்று மேலதிக பெரும்பான்மை மட்டுமேயுள்ளது. இந்தக் கூட்டு அரசியல் கட்சிகளிடையே பிணக்குகள் இடம்பெறுகின்றன. அக்குழுக்களிடையே கட்சித்தலைமைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையேயும் பிணக்குகள் உருவாகி, அரசைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் கட்சித் தலைவர்கள் ஒருபுறமும், தலைமைத்துவத்துக்கு எதிரான உறுப்பினர்கள் ஒருபுறமுமாக பிணக்குற நேர்ந்துள்ளது. வேறு கூட்டு அரசுகளில் ஒரு கட்சியின் தலைமைத்துவத்தின் ஆதரவைப் பெற்றுக்கொண்டால் அதனூடாக அக்கட்சியின் அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள இயலும். ஆனால், இந்த அரசின் நிலையோ வேறு விதமாயுள்ளது. உட்பிணக்குகள் நிறைந்த கட்சியொன்றின் தலைவரின் ஆதரவை வேறாகவும், அக்கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை வேறாகவும், பெறவேண்டிய நிலையில் இன்றைய அரசு உள்ளது. இதற்கான உதாரணமாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைக் குறிப்பிடலாம்.

இவை யாவற்றுக்கும் மத்தியிலும், ஸ்ரீலங்காவின் பொருளாதார வரலாற்றில் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார நிலையுடன் ரணிலுக்குத் தன் அரசை நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சாதாரணமாக அரசொன்று பதவியேற்கும் வேளையல், தம்மைப் பதவியில் அமர்த்திய பொதுமக்களைத் திருப்திப்படுத்த நினைப்பது மட்டுமல்லாமல் தமக்கு ஆதரவளிக்காத பொதுமக்களைக் கவரும் வகையிலும் பொருளாதார நிவாரணங்களை வழங்க முயல்வது வழக்கம். ஆனால், நலிவடைந்த நிலையிலிருந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப பொதுமக்களின் மகிழ்ச்சியை அழித்து - தம்மைப் பதவியில் அமர்த்திய பொதுமக்களை அமைதியிழக்கச் செய்து - தமக்கு ஆதரவளிக்காத பொதுமக்களின் அதிருப்திக்கு ஆளாகியது ரணிலின் அரசு. இதனால் நாட்டின் பொருளாதார நிலையை பலமடையச் செய்ய முயன்று அரசின் பலம் ஆட்டங்காண நேர்ந்துள்ளது. எப்படியானபோதும் பொதுமக்களின் பொருளாதார உதவியை நிறுத்துவதால் அரசின் பலம் நலிவடைகிறது.

இவ்விதம் சகல துறைகளிலும் அரசின்மதிப்பு வீழ்ச்சியுறுவது, உலகத்தின் பிரபலமான தீவிரவாத அமைப்பின் தலைவரெனக் கருதப்படும் பிரபாகரனை பலமிழக்கச் செய்து வடக்கு - கிழக்கு பகுதிகளில் சமாதானத்தை நிலைநாட்ட முயல்வதனாலாகும். யுத்தத்தின்போதும் சமாதானத்தின் போதும் அரசொன்றால் பலமான நிலையில் இருக்கமுடிவதில்லை. யுத்த காலத்தில் அரசுக்கொதிரான அபிப்பிராயங்களைத் தடுக்க முடிவது போன்று சமாதானவேளையில் விமர்சனங்களைத் தடுத்துவிட முடியாது. எதிரணியைச் சேர்ந்த நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் மூலம் நியமிக்கப்பட்ட பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த உயரதிகாரிகளை உள்ளடக்கி சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்வதில் சகல வழிகளிலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இவை யாவற்றையும் கொண்டு நோக்கும் போது சமாதான முயற்சிகளால் அரசு பலமடைவதை விட பலவீனமுறுவதாகவே தோன்றுகிறது. சமாதானத்தின் மூலம் அரசொன்று பலமடையினும், அது மிகுந்த எச்சரிக்கையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், சமாதான முயற்சிகள் தோல்வியுற நேருமாயின், அரசும் வீழ்ச்சியடைய வாய்ப்புக்கள் உள்ளன. இதைப் பலம் என்று ஒருபோதும் கூறமுடியாது.

பிரபாகரனை நலிவுற வைத்து - எதிரணியினர் வசமுள்ள ஜனாதிபதி அதிகாரத்தை கட்டுக்குள் கொண்டுவந்து - முஸ்லிம் காங்கிரஸையும் திருப்திப்படுத்தி,- இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் உதவிகளைப் பெற்று, - சமாதானத்தை



நிலை நிறுத்துவது கயிற்றின் மீது நடப்பதைவிட சிரமமான செயலாகும்.

இதனாலேயே ரணிலின் அரசு வரலாற்றில் நலிவுற்ற நிலையிலுள்ளதெனக் கூறவேண்டியுள்ளது. அரசமைப்பின் பிரகாரமாயின் இந்த அரசு உத்தியோகபூர்வமான நிறைவேற்று அதிகாரமற்ற அரசாங்கமாகும். இந்த அரசுக்கு ஜனாதிபதி சந்திரிகா தனது பதவிக்குரிய சில அதிகாரங்களை கையளித்திருப்பது உண்மையே, 1994ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் மூலம் பொ.ஐ.முன்னணி அரச அதிகாரத்தைக் கைப்பற்றிய சமயம், அவ்வேளையில் ஜனாதிபதியாக கடமையாற்றிய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க பொ.ஐ.முன்னணி அரசுக்கு நிறைவேற்று அதிகாரங்களைக் கையளித்த போதிலும், அது மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே வழங்கப்பட்டிருந்தது. உதாரணமாக பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி விஜேதுங்க தன்வசம் வைத்திருந்தாரேயன்றி அதனைப் பொ.ஐ.முன்னணி அரசுக்குக் கையளிக்கவில்லை. ஆனால், சந்திரிகா இதனை நினைவில் வைத்து அரசை அமைக்கும் சகல அதிகாரங்களையும் ரணிலுக்கு வழங்கினார். இவ்வகையான கௌரவம் சந்திரிகாவிடம் தொடர்ந்து நிறைந்திருக்க வேண்டும. இருந்தபோதும் இதிலுள்ள அச்சமடையத்தக்க விடயம் என்னவென்றால் தன்னால் வழங்கப்பட்ட இவ் அதிகாரத்தை 24 மணித்தியாலய நேரத்துள் அவரால் திரும்பப்பெற்றுக் கொள்ள முடியும். ரணிலின் அரசிடமுள்ள நிறைவேற்று அதிகாரம் முழுவதும் உத்தியோகபூர்வமற்ற அதிகாரம் என நான் குறிப்பிட்ட இக் காரணத்தினாலேயாகும்.

ஒரு தடவை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சமயம் அநுரா பண்டாரநாயகா 1978ஆம் ஆண்டின் அரசமைப்பின் படி பிரதமர் பதவி என்பது ஒரு காரியாலய சேவகர் பதவிபோன்றுள்ளதென வர்ணித்தார் அதன் பிரகாரம் நோக்குவதாயின் இந்த அரசுக்கு ஒரு காரியாலய சேவகரே தலைமை தாங்குகின்றார் எனக் கொள்ளலாம். எனவே, ரணிலது அரச

(09ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

# ஆழ்கடல் சம்பவத்தால் ஏற்பட்டுள்ள ஆழமான வடு

திருகோணமலைக்குக் கிழக்கே ஆழ் கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்றை கடற்படையினர் தாக்கி மூழ்கடித்திருக்கும் சம்பவம் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு பேரிடியாக வந்து வீழ்ந்திருக்கின்றது.

இந்த மோசமான சம்பவம் சமாதான நடவடிக்கைகளில பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் மூலம் யுத்த நிறுத்த உடன்பாட்டை இலங்கைக் கடற்படை அப்பட்டமாக - மோசமாக - மீறியிருக்கிறது என்றும் புலிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

"தாக்கப்பட்டது எமது வர்த்தகக் கப்பல்களுள் ஒன்று. சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து அது தாக்கப்பட்டுள்ளது. எந்தவிதச் சட்டவிரோதச் செயல்களிலும் சம்பந்தப்படாத - எந்தவித ஆத்திர மூட்டல் நடவடிக்கையிலும் ஈடுபடாத - எமது கப்பல் எவ்வித காரணமுமின்றி தாக்கி அளிக்கப்பட்டுள்ளது. அதில் இருந்த கப்பல் கப்டன் உட்பட எமது போராளிகள் பதினொரு பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். தமது நியாயாதிக்க எல்லைக்கு அப்பாற்பட்ட சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்தத் தாக்குதலை கடற்படையினர் நடத்தியிருக்கின்றார்கள்" - என்று விடுதலைப் புலிகள் கடும் சீற்றத்தோடு குற்றம் சுமத்தியிருக்கின்றார்கள்.

புலிகளின் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துத் தாக்கப்பட்டிருப்பதைக் கண்காணிப்புக் குழுவின் உயர் மட்டம் ஒப்புக்கொண்டிருக்கின்றது.

ஆனால், இலங்கைக் கடற்படை அதை மறுத்துள்ளது. இலங்கையில் ஆள்புல கடற்பரப்பில் - கிழக்குக் கரையிலிருந்து 185 கடல் மைல் தொலைவில் - இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் ஆயுதங்களை ஏற்றி வந்த புலிகளின் கப்பலே அழிக்கப்பட்டது என்றும் வியாக்கியானம் கூறுகின்றது கடற்படை.

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துத்தான் புலிகளின் கப்பல் அழிக்கப்பட்டது என்று கண்காணிப்புக் குழு கூறிய பின்னரும், இலங்கைக் கடற்படை கூறுவதை ஓர் ஒப்புக்கு வேண்டுமானால் ஏற்றுக் கொள்வோம். அப்படிப் பார்த்தாலும் இது ஒரு பெரிய யுத்தம் நிறுத்த மீறல்தானே!

கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் கப்புறுக் ஹெறாக்லண்ட் கூறுவது போல, அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் யுத்த நிறுத்த உடன்பாடு ஆகியவை சர்வதேச சட்டங்களின்கீழ் தான் செய்யப்பட்டுள்ளன. எனவே, அதற்கான வியாக்கியானமும் அந்த அடிப்படையில்தான் அமையவேண்டும்.

சுமார் 12 கடல் மைல் பாதுகாப்பு எல்லைக்கு அப்பால், சுமார் 200கடல் மைல் வரையான பொருளாதாரக் கடற்பரப்பு இலங்கைக்கு உரியதாக இருக்கலாம். ஆனால், அந்தக் கடற்பரப்பில் வரும் எந்தக் கப்பலையும் எடுத்த மாத்திரத்தில் அழிக்கும் உரிமை சர்வதேச சட்டங்களின்கீழ் இலங்கைக்கு இல்லை. சந்தேகத்திற்குரிய கப்பலாக இருந்தால் முதலில் அதை வழிமறிக்கலாம். அதைத் தொடர்ந்து எடுக்கவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் இணக்கம் காணப்பட ஏற்பாடுகள் உள்ளன. அவற்றையே இலங்கைக் கடற்படை செய்திருக்கவேண்டும். அதை விடுத்து, எடுத்த மாத்திரத்தில் கப்பலைத் தகர்த்தழித்தது விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் மோசமான செயலாகும்.

இந்தச் சம்பவம் கடற்படை குறிப்பிட்டது போல இலங்கை ஆள்புலக் கடற்பரப்பில் நடந்தது என்றும் புலிகளின் ஆயுதக் கப்பல்தான் அது என்றும் அப்படியே ஏற்றுக்கொண்டாலுங்கூட ஒப்பந்த ஏற்பாடுகளின் படி இந்த அழிப்பு நடவடிக்கையைக் கடற்படை உடனடியாகச் செய்திருக்கமுடியாது. கப்பலை மறித்து, முதலில் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்திருக்கவேண்டும். பின்னர் கண்காணிப்புக் குழு மூலம் அதனை சோதனையிட முயன்றிருக்கவேண்டும். அவற்றையெல்லாம் விடுத்து கண்காணிப்புக் குழுவுக்கே அறிவிக்காமல் இந்தத் தாக்குதலைக் கடற்படை மேற்கொண்டது கட்டுமீறிய செயலாகும்.

தற்போதைய சமாதான முயற்சிகளை வெறுக்கும் சக்திகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கூட உள்ளன. அத்தகைய சக்திகள் சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல்களின் நடமாட்டத்தை வேவு பார்த்து, அரசுத் தரப்புக்கு தகவல் கொடுத்து, தாக்குதலை நடத்தத் தூண்டியிருக்கக்கூடும் எனவும் உயர் மட்டங்களில் பேச்சடிபடுகின்றது.

இத்தகைய தூண்டுதல்களுக்கு அரசுத் தரப்பு இடம் கொடுத்தால் தற்போதைய சமாதான முயற்சிகள் குழம்பிப்போவது நிச்சயம்.

மானிப்பாய் பிரதேசத்தில்

## கடந்த வருடம் பிறந்தவற்றில் பல சிசுக்கள் நிறைகுறைந்தவை

### மருத்துவ வட்டாரங்கள் தகவல்

வலிகாமம் தெற்கு,மார்ச்12

கடந்த வருடத்தில் பிறந்த பல குழந்தைகள் நிறை குறைந்தவையாகவும் போஷாக்கு குறைந்தவைகளாகவும் இருந்ததாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் இப்பிரிவில் ஆயிரத்து 846 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும் இவற்றில் 179 குழந்தைகள் நிறை குறைந்த குழந்தைகளாகப் பிறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இப்பகுதியில் ஐந்து வயதுக்குட்பட்ட பல பிள்ளைகள் போஷாக்கு குறைந்தவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். 6ஆயிரத்து 218 குழந்தைகளுள் 2ஆயிரத்து 713பேர் போஷாக்கு குறைந்தவர்களாக உள்ளனர்.

மேலும் 41 சிசு மரணங்களும் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-152)

## மாதர் மான்மியம்

### மின்னுவதெல்லாம் பொன்னல்ல

அன்ன நடை மாதரசி அழகுப்பாவை
அணிந்தது அனைத்துமே அழகுநகை
பெண் மயில்போல் பேதையிவள் தனியே செல்ல
பின் தொடர்ந்த காளையோ கொள்ளைக்காரன்
வண்ணமுறு கன்னியவள் குனிந்தே செல்ல
வந்தவனோ நகை அனைத்தும் பிடுங்கிச்சென்றான்
பொன் நகையே இவையென்று பூரித்த பேயன்
போயதனை கடைதனிலே மதித்துப் பார்த்தான்
வண்ணமுறு நகையொன்றும் பொன்னேயல்ல
வடிவான 'காக்காய் பொன' நகையே என்றார்
கண்ணுக்கு பொன்னாகத் தெரிவதெல்லாம்
கடைசிவரை பொன் என்று கருதிடாதே!

- விகடகவி.

# திருமலை கடலில் கைதான 6 புலிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை அனுமதி

## ஒவ்வொரு மாதமும் பொலீஸ் நிலையத்தில் கையெழுத்திடவும் உத்தரவு

திருகோணமலைக் கடலில் கிளைமோர் கண்ணிவெடிகளுடன் படகொன்றில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆறு பேரும் நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த அறுவரையும் தலா 25ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் இரு ஆள் பிணையிலும் செல்ல மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ, பி.எதிரிசூரிய ஆகிய இருவரும் அனுமதி வழங்கினர். பிணை கோரிய வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரர்கள் சார்பில் சட்டத் தரணி என்.ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி ஜெயதேவி இராயப்புவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிர் மனுதாரர்களான திருகோணமலைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் அரச சட்டவாதி அனுபா டி.சில்வா ஆஜரானார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அமைதி நிலவும் சூழ்நிலையில் தமது முகாம்களைச் சுற்றி ஏற்கனவே புதைத்து வைத்திருந்த கிளைமோர் கண்ணிவெடிகளை அகற்றி, பிரதான முகாமில் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதற்காகவென அவற்றை சந்தேக நபர்கள் எடுத்துச் சென்றதாக சட்டத்தரணி ஸ்ரீகாந்தா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கக் கூடாதென தாம் ஏற்கனவே ஆட்சேபனைகளை தாக்கல் செய்திருந்த போதிலும் இப்போது பிணை வழங்குவதை ஆட்சேபிக்கவில்லையென அரச சட்டவாதி குறிப்பிட்டார்.

பிணை வழங்கிய நீதியரசர்கள் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை சந்தேக நபர்கள் திருகோணமலை பொலீஸ் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திடவேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்து சமுகமளிப்பார்களா? என்று நீதியரசர் ராஜா பெர்னாண்டோ வினவிய போது, 'சமுகமளிப்பார்கள் என்றே நம்புகிறேன். சமுகமளிப்பார்கள் என்ற உறுதிமொழியை என்னால் வழங்க முடியும்' என்று சட்டத்தரணி ஸ்ரீகாந்தா பதிலளித்தார்.

செல்வநாயகம் செல்வம், ஏகாம்பரம் சுரேஸ், முத்துலிங்கம் ரமணன், கந்தசாமி கிருபா, சண்முகம் சாந்தன், ஆத்மன் தீபன் ஆகியோரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் ஆவர். (ஓ)

## விவசாய உற்பத்திகளை அமைச்சு கொள்வனவு செய்யும்

### மாவை சேனாதிராசா எம்.பி.தெரிவிப்பு

யாழ்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் விசாயப் பொருள்களைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்த வர்த்தக நுகர்வோர் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வர்த்தக, நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் தான் தொடர்புகொண்டு இதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.இதன்படி 12 ஆயிரம் தொடக்கம் 21ஆயிரம் மெற்றிக் தொன்கள் வரையிலான விவசாய உற்பத்திப் பொருள்களை யாழ்.மாவட்டத்தில் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், உற்பத்திச் செலவை ஈடு செய்யக்கூடிய வகையில் தமது பொருள்களை விற்பனை செய்ய முடியாமலும் உரிய முறையில் அவற்றைச் சந்தைப்படுத்த முடியாமலும் வட பகுதி விவசாயிகள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ். மாவட்ட விவசாயிகளின் இந்த நிலைமையை அமைச்சரிடம் விளக்கமாக எடுத்துக் கூறியதாகவும் - அதன்பின்னரே உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் - மாவை சேனாதிராசா எம்.பி.தெரிவித்தார். (ஏ-6)

## தப்பியோடும் படையினரால் மக்களின் பணமே விரயமாகிறது

### உயரதிகாரி தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்12

சேவையை விட்டு தப்பியோடும் படையினர் மீது நடவடிக்கை எடுக்காது, அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவதால் பொதுமக்களின் பணமே வீணாக விரயமாகிறது.

இவ்வாறு இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

அரச படைகளில் இணையும் நபர்களுக்கு முறைப்படி பயிற்சி வழங்க ஒரு சிப்பாய்க்கு ஒரு லட்சம் ரூபாவரை செலவாகின்றது. இவ்வாறு பயிற்சிபெற்ற சிப்பாய்களில் இது வரை சுமார் 60ஆயிரம் பேர்வரை படையிலிருந்து தப்பி ஓடி விட்டார்கள். அவ்வாறு தப்பியோடியவர்களுக்கு எதிராக எது வித நடவடிக்கையும் எடுக்கப்படாது மன்னிப்பு வழங்கப்பட்டதால் சுமார் நான்கு கோடி ரூபா அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுப் பணமே வீண் விரயமாகின்றது என்று குறிப்பிட்ட இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

படைகளிலிருந்து தப்பியோடியவர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு, மீளவும் அவர்களைப் படைகளில் இணைத்துக்கொள்வதற்கு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஆயினும், அவற்றால் எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் எதுவும் கிடைக்கவில்லை. பயிற்சிக்கான செலவினங்களை அறவிடாமலேயே அவர்களுக்கு மன்னிப்பு வழங்க அரசு தற்போது தீர்மானித்துள்ளது.

அந்த 60ஆயிரம் பேரில் 500பேர்வரையானோர் அதிகாரிகள் தரத்திலுள்ளவர்களெனவும் -

இவர்களில் சுமார் எழுபது வீதமானோர் குறைந்த பட்சம் ஒருவருடமேனும் நாட்டுக்காக சேவையில் ஈடுபடாதவர்களெனவும் - கூறப்படுகிறது.

படைகளில் இருந்து தப்பியோடியவர்களுக்கு எதிராக முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டால், அவர்கள் பின்னர் வேறு வேலைகளில் இணைந்துகொள்ளமுடியாமல் பாதிக்கப்படுவர்கள். இந்த இரக்கச் சிந்தனையின் அடிப்படையிலேயே, அவர்கள் முறைப்படி சேவையினின்றும் நீங்கியவர்களாக அரசு கருதிக்கொள்கிறது என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும்

## திருமலை முத்தமிழ் விழாவில் இரு தென்பகுதி நாடகங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்12

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும் முத்தமிழ் விழா எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இந்த விழா திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் திருகோணமலை கலைஞர்களின் ஆதரவுடன் விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை கூறியதாவது:-

இந்த விழாவின் ஐந்துநாள் நிகழ்வுகளிலும் ஏழு நாடகங்களும் தமிழ் இசையரங்குகள் ஆறும், வாத்திய இசைக் கச்சேரிகள் ஐந்தும், நடன நிகழ்வுகள் ஆறும் இடம்பெறவுள்ளன. இவற்றில் தென்பகுதியிலிருந்து பேராசிரியர் சரத் சந்திராவின் 'மனமே' மற்றும் தர்ம சிறி பண்டாரநாயக்காவின் 'ரோஜனத்துப் பெண்கள்' ஆகிய நாடகங்கள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும் - என்றார். (ஓ-290)

**நாளை**

மாசி 19
வியாழக்கிழமை
(13.03.2003)
திதி : தசமி
முன் இரவு 10.59வரை.
நட்சத்திரம: திருவாதிரை
காலை 6.35வரை
சுபநேரம் : 7.52 - 9.22
ராகுகாலம்: 1.52 - 3.22
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

சந்தோசமும் உழைப்பும் ஆயுளை விருத்திசெய்யும்.

**வண்ணையை நத்தருளும் வண்ணை வைத்திய நாதன்**

வண்ணையிலே உறைந்தருள் புரிகின்ற வைத்திய நாதனே!
வளமார்ந்த வாழ்வோங்க வழிகாட்டிட வேண்டுமையா!
என்னிலை தந்தருளும் எழில்மிகு வைத்தியநாதனே!
எந்நாளும் தீர்வருளி எமைக்காக்க வேண்டுமையா!
விண்ணவர்கள் நிதம் தொழுதேற்றும் எங்கள் விடையாவனே!
வேண்டுவார்க்கு வேண்டும் வரம் ஈய்ந்தருள வேண்டுமையா!
நின்னுடைய திருவருள் பெருகிட வேண்டுமிங்கே
நிரந்தர சமாதான வாழ்வு அமைந்திட வேண்டுமையா!

- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பதின்மூன்றாம்நாள் திருவிழா இன்று)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பகுதி கிராம அலுவலா J/395
**திரு.வே.வன்னிமரம்**
அவர்கள் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு பாராட்டுவதுடன் அவர் பணி மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

- பொலிகண்டி வாழ் மக்கள்.

(15464)

# 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
22
12
1958



உதிர்வு
10
02
2003

## திருமதி செல்வராசா இந்திராணி

அனபுக்கும் பாசத்துக்கும் இலக்கணமாக வாழ்ந்து சிவபதம் எய்திய திருமதி செல்வராசா இந்திராணி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*நவக்கிரி.* (15405) செல்வராசா குடும்பத்தினர்.

## தொலைக்கல்வி கற்கைநெறி விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் ஆசிரியர் தொலைக் கல்விக் கற்கை நெறியை பயில்வதற்காக ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதி நாள் இம்மாதம் 31ஆம் திகதி ஆகும். விண்ணப்பங்கள் யாவும், 'செயற்றிட்டத் தலைவர், ஆசிரியர் தொலைக்கல்விச் செயற்றிட்டம், தொழில்சார் விருத்தி மையம் 1 தேசிய கல்வி நிறுவகம், மஹரகம' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர் இதுவரை பயிற்சி பெறாத பட்டதாரி அல்லாத அரசாங்க அல்லது அரசாங்க அனுமதி பெற்ற ஒரு பாடசாலையில் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் நியமனம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் 2003.03.31 ஆம் திகதியில் 50 வயதுக்குக் குறைவாக இருத்தல்வேண்டும். (ஓ-6)

## தவக்கால படக்காட்சி

குருநகர்,மார்ச்12

தவக்காலத்தை முன்னிட்டு குருநகர் அறிவகம் அமைப்பு குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இயேசுவின் பாடுகளைச் சித்திரிக்கும் வீடியோப் படக்காட்சியை நடத்தி வருகிறது.

தவக்காலம் முடிவடையும் வரை வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 6.30 மணி தொடக்கம் இப்படக் காட்சி இடம்பெறும் என குருநகர் அறிவகம் அமைப்பின் இயக்குநர் சேவியர் சுவைனஸ் தெரிவித்தார். (ஓ-51)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

12-03-2003

HAPPY BIRTHDAY



## செல்வி ரவிச்சந்திரன் ஸர்மிகா

சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட திரு.திருமதி ரவிச்சந்திரன் - சிவமணி தம்பதியினரின் செல்வப் புதல்வி செல்வி ரவிச்சந்திரன் ஸர்மிகா தனது முதலாவது பிறந்த தினத்தை இல. 117, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தனது மாமா வீட்டில் இன்று (12.03.2003) புதன்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் எல்லாம்வல்ல வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

ச.சடாட்சரம் (அப்பப்பா)
சடாட்சரம் அன் சன்ஸ்
நகைத் தொழிலகம்,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

(15411)

ச.ரவிச்சந்திரன் (அப்பா)
(சந்திரன்)
ஸ்ரீகாமாட்சி நகைமாடம்
இராமநாதபுரம், கிளிநொச்சி.

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 31**

இதுவரை நடைபெற்று முடிந்த ஆட்டங்களில் ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் மெக்ராத் எத்தனை விக்கெட்டுக்களை எடுத்துள்ளார்?

முழுப்பெயர் : ........................................
முகவரி : ........................................
அ.அட்டை எண்: ........................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (13.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 31, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

'அருண்ஸ்' பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்



முதற் பரிசு
மைக்கிரோ பிசி தரும்
கணனி



2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

விசேட பரிசுகள்
அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்



SuperSix பரிசு
ஹுமாரா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(........................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(........................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச 15

முழுப்பெயர் : ........................................
முகவரி : ........................................
அ.அட்டை எண்: ........................................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.



பொலிஸார் சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காங்கேசன்துறை வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹரல் அன்ரனி, யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸ் அத்தியட்சகர் ஹெக்ரர் தர்மசிறி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான லயனல் ஜெய சேகர, பிரேமரத்ன, குணதிலக ஆகியோர் உட்பட பொலிஸார் சத்தியப் பிரமாணம் செய்வதையும் -

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.வரதராஜாவிடமிருந்து யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸ் அத்தியட்சகர் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:வசந்தன்)

# ஆளும் கட்சி எம்.பி. மயோன் முஸ்தபா அரசின் மீது கண்டனம்; காலக்கெடு!

கல்முனை,மார்ச்12

திகாமடுல்ல ஐ.தே.க. எம்.பி. மயோன் முஸ்தபா, அரசின் மீது பல குற்றச் சாட்டுக்களை சுமத்தி கண்டனம் தெரிவித்திருக்கிறார். தாம் தொடர்ந்து ஐதேக. எம்பியாக இருக்க வேண்டுமானால் அரசு சில காரியங்களைச் செய்யவேண்டும் என்று வற்புறுத்தி அதற்கு காலக்கெடுவும் விதித்திருக்கிறார்.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஐ.தே.க. ஆதரவாளர்களின் நலன்களைப் பேணுவதில் அரசு அக்கறை செலுத்தவில்லை அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் இந்த ஐதேமு. அரசு அசட்டை செய்து வருகின்றது. தமது கட்சியின் அரசிலேயே ஆதரவாளர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன; அவர்கள் மீது பாரபட்சம் காட்டப்படுகின்றது. இப்படி அவர் குற்றஞ்சாட்டினார்.

"எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் அம்பாறை கரையோரப் பிரதேச ஐ.தே.க. தமிழ், முஸ்லிம் ஆதரவாளர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் தான் தொடர்ந்தும் இக்கட்சியில் எம்.பியாக இருப்பதில் அர்த்தமில்லை. எனது ஆதரவாளர்களை படுகுழியில் தள்ளுவதற்கு நான் துணைபோக முடியாது. அவர்களை பாதுகாப்பதற்கான வழிவகைகளை நான் செய்தே ஆகவேணடும்." - என்றும் மயோன் முஸ்தபா எம்.பி. கூறியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரி கேட்போர்கூடத்தில் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மயோன் முஸ்தபா மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம)

# பெண்கள் உயர்பதவிகளை வகித்தாலும் குடும்பக் கடமையைப் பேணவேண்டும்!

## மகளிர் விவகார அமைச்சர் உரை

பெண்கள் உயர் பதவிகளை வகித்தாலும் குடும்பக் கடைமைகளைச் சரிவரச் செய்தல்வேண்டும். அப்போது தான் அவர்களுடைய உண்மையான அந்தஸ்து உயர்வடையும்.

- இவ்வாறு மகளிர் விவகார அமைச்சர் அனுலாபியசேன ரத்நாயக்க தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டிலேயே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

பெண்கள் உயர் பதவிகளை வகித்தாலும் வீட்டில் தமக்குரிய கடமைகளைச் சரிவர மேற்கொள்ள வேண்டும்.

பெண்கள் வீடுகளில் தமக்குரிய கடமைகளைச் சரியாகச் செய்யாத விடத்து அவர்களது குடும்ப வாழ்க்கையும் சமூகக் கட்டமைப்பும் பெரும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

பெணகளுக்குரிய கடமைகள் சரியாக இடம்பெறாது விட்டால் அவர்களது பிள்ளைகளும் அநாதரவாக்கப் பட்டுவிடுவார்கள். குடும்பத்தில் பெண்கள் காட்டும் அக்கறையே சமூகக் கட்டமைப்பினைப் பேணும்.

இன்று மருத்துவம், சட்டம் முதலானவற்றினைக் கற்பதில் பெண்கள் முன்னணியில் திகழ்கின்ற போதிலும், அவர்களில் அரசியல் ஈடுபாடு மிகக் குறைவாகவே உள்ளது என்றார். (ஒ-12)

# இராணுவ ட்ரக் – சைக்கிள் விபத்து; அதிர்ச்சியில் ட்ரக் சாரதி தற்கொலை!

## காயமடைந்த சைக்கிள்காரர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு,மார்ச்12

வவுனியா இராணுவ ட்ரக் வண்டி ஒன்றில் வீதியில் சென்ற ஒரு சைக்கிள்காரர் மோதுண்டதால் அதிர்ச்சியடைந்த ட்ரக் வண்டி சாரதியான இராணுவச் சிப்பாய் தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்திருக்கிறார்.

வவுனியா 211ஆவது இராணுவத தலைமையகத்தைச் சேர்ந்த இந்தச் சிப்பாய், வேறு 10 சிப்பாய்களுடன் ட்ரக் வண்டியை காலை 9.30 மணியளவில் செலுத்திச் சென்றிருக்கிறார். 9.45 மணியளவில் வவுனியா நகரில் சைக்கிள் காரர் ஒருவர் இந்த ட்ரக் வண்டியில் மோதுண்டு வீதியில் விழுந்துள்ளார். உடனே ஏனைய சிப்பாய்கள் கீழே குதித்து மோதியவரைப் பார்க்கச் சென்றுள்ளனர்.

இதனைக்கண்ட சாரதியான சிப்பாய் மோதியவர் இறந்துவிட்டார் என்ற அதிர்ச்சியில் ட்ரக் வண்டியில் பின்புறத்தில் ஏறி ரி56 துப்பாக்கியால் தனைத்தானே சுட்டுக் கொண டார் எனக் கூறப்பட்டது.

ட்ரக் வண்டியில் மோதுண்ட சைக்கிள் காரரும் சிப்பாயும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர். அங்கு சிப்பாய் மரணமானார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. பைசிக்கிள் காரர் மேலதிக சிகிச்சைக்காக கண்டிக்கு அனுப்பப்பட்டார்.

இராணுவச் சிப்பாய் எச்.எம்.எம். ஜி.கேதரகொட என அடையாளம் காணப்பட்டார்.

# ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோருக்கு ஐ.தே.கட்சி அங்கத்துவம் வழங்கப்படக் கூடாது!

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத்தடை

கொழும்பு,மார்ச்12

அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ, எஸ்.பி. திஸாநாயக்க உட்பட எட்டுப் பேருக்கு ஐதேகட்சியில் அங்கத்துவம் வழங்கப் படக்கூடாது என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இடைக் காலத் தடைஉத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தத் தடை உத்தரவு நேற்று வரை அமுலில் இருந்தது. அத்துடன் இந்த எட்டுப் பேரும் இந்தக் காலப்பகுதிக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்தைக் கோரக் கூடாது எனவும் அந்தத் தடை உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர தேசப்பற்று அமைப்பின் சார்பாக எதிரி வீரப்பிரேம ரத்ன தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணை செய்த பின்னரே மாவட்ட நீதிவான் பேர்ள் கரலியத்த குணதிலக இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த மனுவில் ஐக்கிய தேசியக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, பிரதித் தலைவர் கருஜெயசூரிய, தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, செயலாளர் கப்புக் கொட்டுவ மற்றும் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸாநாயக்க, மஹிந்த விஜய சேகர, பந்துல குணவர்த்தன, ரெலிக் கொம் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால, தென்கொரியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஆனந்த முனசிங்க, பிரதியமைச்சர் ஜெயச்சந்திர விஜயக்கோன், பந்துல பராக்கிரம குணவர்த்தன ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி ஸ்ரீலங்கா தேசப்பற்று அமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு அமைவாகவே ஐக்கிய தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் அமைச்சர்கள் பீரிஸ், எஸ்.பி. திஸாநாயக்க உட்பட எட்டுப்பேர் இன்று கண்டியில் வைத்து ஐக்கியதேசியக் கட்சியின் அங்கத்துவத்தைப் பெறவுள்ளனர்.- இதனை எதிர்த்தே மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ம)

# ஆய்வுகளின் அடிப்படையில் அறிமுகமானது சமுர்த்தி வங்கி!

## அரச அதிபர் பத்மநாதன் தெரிவிப்பு

அச்சுவேலி,மார்ச்12

"வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக உலகளாவியரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் அறிமுகஞ்செய்யப்பட்டது சமுர்த்தி வங்கிச் செயற்றிட்டம். சமுர்த்தி வங்கியின் செயற்பாடுகளை உரியமுறையில் செயற்படுத்தி வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் அர்ப்பணிப்புடன் உழைக்கவேண்டும்."

- இவ்வாறு கூறினார் யாழ் மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

வலி.கிழக்கு வடபகுதிக்கான சமுர்த்தி வங்கியின் திறப்புவிழா கோப்பாய் பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது.

ஆவரங்கால் 10ஆம் கட்டையில சமுர்த்தி வங்கியைத் திறந்துவைத்து யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

தெற்காசியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் வறுமை பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்த நாடுகளிலும் உலகநாடுகளிலும் நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில்தான் இலங்கையில் சமுர்த்தித் திட்டம் அறிமுகஞ்செய்யப்பட்டது.

'ஜனசவ' திட்டம் தோல்வி அடைந்த போதிலும், சமுர்த்தித் திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுகிறது. 'ஜனவசு' திட்டம் தோல்வியடைந்தமைக்கு அதன் செயற்பாட்டுமுறை காரணம் எனக் கூறப்படுகின்றது. அதனை ஆராய்ந்த பின்புதான் சமுர்த்தித்திட்டம் அறிமுகஞ்செய்யப்பட்டது. திட்டங்களின் செயற்பாட்டுத்திறனும், பயன்பாடும் நடைமுறைப்படுத்தலில் தான் தங்கியுள்ளன.

சமுர்த்தி செயற்திட்டத்தில் வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான சிறப்பான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் சமுர்த்தி வங்கி குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சமுர்த்தி வங்கிச் சங்கத்தினை உரியமுறையில், அர்ப்பணிப்புடன் செயற்படுத்தினால் அதன் உறுப்பினர்களும் அவர்கள் வாழும் பிரதேசமும் உயர்வடையும்.

யாழ். மாவட்டத்தில் 14 ஆவது சமுர்த்தி வங்கிச்சங்கம் இன்று திறந்து வைக்கப்படுகின்றது. மக்களுடைய நிதியில், மக்களுடைய பங்களிப்புடன் மக்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளது சமுர்த்தி வங்கி. இது மக்களின் சொத்து. இதில் அரசினதும் அதிகாரிகளினதும் கட்டுப்பாடு, தலையீடு இருக்காது. சமுர்த்தி வங்கி அமைப்பு வங்கியியல் நடைமுறையில் புதிய வழிமுறைகளை அறிமுகஞ் செய்கின்றது - என்றார் அவர்.(ஒ-11)

# ஊடகவியலாளர்கள், கலைஞர்களை மதித்து கௌரவிக்க வேண்டும்!

## நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் சவூதி தூதுவர் பேச்சு

பேருவளை,மார்ச்12

சமுதாய மறுமலர்ச்சிக்காக நாடளாவிய ரீதியில் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் தியாக உணர்வுடன் சேவை செய்து வருகின்றனர்.

எழுத்தாற்றல் மூலமும், பேச்சாற்றல், நடிப்புத்துறை மூலமும் சேவை செய்யும் இவர்களை மதித்து கௌரவிப்பது சமுதாயத்தில் சகலரினதும் கடமையாகும்.

- இவ்வாறு கூறினார் சவூதி அரேபிய முன்னாள் தூதுவரும் சீனன் கோட்டைப் பள்ளிச் சங்கத் தலைவருமான தேசபந்து நௌபல் எஸ்.ஜாபிர்.

சீனன் கோட்டையைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் புர்ஹா பாயிஸா கைஸ் எழுதிய 'வெளிச்சம்' என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனன்கோட்டை முஸ்லிம் மகளிர் கல்லூரி தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்கர் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு அதிபர் நூர் ஹலீமா தலைமை வகித்தார்.

தேசமான்ய நௌபல் எஸ்.ஜாபிர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், நாடகக் கலைஞர்கள் நிறையப் பேர் எம்மிடையே உள்ளனர். அவர்கள தமது திறமைகளின் மூலம் சமுதாய மேம்பாட்டிற்காக மாபெரும் சேவைகளைச் செய்துவருகின்றனர். அவர்களை ஒன்றுதிரட்டி முழுநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்றை நடத்த வேண்டும்.

பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளைப் பாடசாலைகளில் இருந்து நிறுத்தி திருமணம் செய்து கொடுப்பதைத் தவிர்த்து ஜி.சீ.ஈ. உயர்தரம் வரை, பல்கலைக்கழகம் வரை படிக்க இடமளிக்க முன்வர வேண்டும் - என்று அவர் கூறினார்.

ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஒ)

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்க பொருத்தமான நடவடிக்கை தேவை

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் பிரதமரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்12

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருப்பிப் பெறுவதற்கான பொருந்தமான சட்ட நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ளனர்.

தென்பகுதிச் சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி யாழ்செயலகம் முன்பாக நேற்றுமுன்தினம் நடத்தப் பட்ட மறியல் போராட்டத்தை அடுத்து பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்களான மாவை சேனாதிராஜா, அ.விநாயகமூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திர குமார், என்.ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கூட்டாக இக்கடிதத்தை அனுப்பியுள்ளனர்.

சிறைச்சாலைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ்க் கைதிகளை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் வரை மனிதாபிமான அடிப்படையில் பிணையில் விடுதலை செய்ய நடவடிகைகை எடுக்கவேண்டும் என்று அக்கடிதத்தில் மேலும் கேட்கப்பட்டுள்ளது. (ம-3-86)

# ஆன்மீக செற்பொழிவு

யாழ்ப்பாணம்,மார்ச்12

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை புத்தூர் சோமாஸ்கந்தக்கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் 'வாக்கிற்கு அருணகிரி' என்ற விடயம் குறித்து சொற்பொழிவாற்றவுள்ளார். (ஒ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் இயந்திரம், பற்றி, புதிய டயர்களுடன் EY தொடர் இலக்கமுடைய A40 வான் விற்பனைக்கு உள்ளது. விவரங்களுக்கு: V.மார்க்கண்டு (மாங்காய்), 1/7, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (15475)

2SRI, மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777-049737. (15341)

மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. உங்கள் பெயருக்கு மாற்றித் தரப்படும். தொடர்பு: S.சசி, இந்து தமிழ் கலவன் பாடசாலை வீதி, வல்வெட்டி.
T.P.:070 - 212666. (15424)

### தவறிவிட்டது

கமலபதி, கரணவாய் கிழக்கு, கலட்டி, கரவெட்டியைச் சேர்ந்த சிவஞானம் சுமதி என்பவருடைய தேசிய அ.அ.(இல.777573942V), விசேட அ.அ.(இல.0909030673) மற்றும் கடற்கரை வீதி, முழங்காவில் மன்னாரைச் சேர்ந்த அரசரத்தினம் ஆபசுந்தரம் என்பவருடைய தேசிய அ.அ. என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரிகளில் ஒப்படைக்கவும்.
(15000)

தேராவில் நலன்புரி நிலையம், உடையார்கட்டைச் சேர்ந்த ரவீந்திரன் சர்மிலா என்பவருடைய தேசிய அ.அ.(இல.787653006V) பேர்ஸுடன் ஆனைக்கோட்டைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 28.02.2003அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி.ரவீந்திரன், உயரப்புலம், ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (15419)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33வயதுடைய, சவூதியில் வேலை பார்க்கும், மூலம் முதலாம்பாதம், செவ்வாய்க்குற்றமற்ற ஆணுக்கு மணமகள் தேவை. தொடர்பு: Mr.மகாதேவன், இல.115/1, சபாஸ் லேன், அரசடி வீதி, கந்தர்மடம். (15408)

### பௌதிக பாட வழிகாட்டல் கருத்தரங்கு

இவ்வருடம் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குத் தொடரில் பௌதிகவியல் பாடத்துக்கான கருத்தரங்கு இன்று புதன் கிழமை காலை 10.00 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெறும் என சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா அறிவித்துள்ளார். சங்கானைக் கோட்ட பாடசாலைகளை சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களை இக்கருததரங்கில் தவறாது கலந்துகொண்டு பயன் பெறுமாறு அவர் கேட்டுள்ளார்.(ஒ-152)

### குடி தண்ணீர் பௌசர் அன்பளிப்பு

புங்குடுதீவுப் பிரதேசத்தில் நிலவும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்க உதவும் வகையில் வட இலங்கை சர்வோதய அமைப்பின் புங்குடுதீவு வளாகத்துக்கு குடிதண்ணீர் தாங்கி வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்து லண்டனில் வாழும் புங்குடுதீவு மக்கள் இந்த வாகனத்தை அன்பளிப்புச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### கைதடியில் திருட்டு!

வீட்டில் உள்ளோர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது உள்நுழைந்த திருடன் தங்கநகை, ரொக்கப்பணம் மற்றும் உடைகளை அபகரித்துச் சென்ற சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு கைதடி தெற்கில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். கடந்த வாரமும் இப்பகுதியில் இதேமாதிரியான திருட்டுச்சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-75)

### காணவில்லை

A.I எனும் அடையாளம் இடப்பட்ட பசு மாடு ஒன்றை கடந்த 04.03.2003 முதல் காணவில்லை. கண்டவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:
**பிரதீபா சலவைத் தொழிலகம்**
பிள்ளையார் வீதி, திருநெல்வேலி.
(15427)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 . 12 . 1925



உதிர்வு 21 . 02 . 2002

### அமரர் சுப்பர் செல்லப்பா

என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

புத்தூர் கிழக்கு,
புத்தூர் (15422)

குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகத்தில் 28 . 08 . 1951



விண்ணகத்தில் 12 . 03 . 2001

### திருமதி அல்லிணம்மா பரமானந்தம்

விண்ணகத்தில் இறைவனுடன் அமைதியாய் நீர்
மண்ணகத்தில் உம்பிரிவால் நித்தம் அழுகின்றோம் நாம்
அனைவரையும் அரவணைக்கும் நல்லுள்ளம் உமக்கு
உமக்கு நிகர் பாரினிலே யாருமில்லை எமக்கு
காலம் எங்கள் காயங்களை ஆற்றிவிடும் என்றிருந்தோம்
ஆண்டிரண்டு கடந்த பின்னும் ஆறவில்லை எம் துயரம்
மறுஜனனத்தில் மீண்டும் நீர் வருவீர் என்று
மீளாத் துயரில் நாம் உமை அஞ்சலிக்கின்றோம்.

14, புதுமை மாதா கோவில்கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம். (15420)

நித்தம் உம்பிரிவால் தவிக்கும்:
**சின்னத்தம்பி மாமா குடும்பம்.**

## உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு - கிழக்கு மாகாண சபை

### வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல.1846 - SRI(SF)

# கேள்வி அறிவித்தல்

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சனசமூக புனருத்தாரண, அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும் படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக மன்னார் மாவட்ட கேள்விச் சபையின் தலைவர் பின்வரும் ஒப்பந்த வேலைக்குத் தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

### அட்டவணை

| இல. | ஒப்பந்த இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | MN/NECORD/WS/01 | முருங்கனில் உள்ள மன்னாருக்கான தண்ணீர்த் தாங்கியை மீளப் புனரமைத்தலும் நீரேறை கருவி இயக்குநரின் வதிவிட திருத்த வேலையும் | 1500/= | M6 நீர்வழங்கல் வடிகாலமைப்பு | 67,000 |
| 02. | MN/NECORD/WS/02 | வங்காலை குடிநீர் வழங்கல் திட்டத்தின் தண்ணீர் தாங்கியை மீளப் புனரமைத்தல் | 1500/= | M7 நீர்வழங்கல் வடிகாலமைப்பு | 45,000 |
| 03. | MN/NECORD/ED/13 | அடம்பன் மகாவித்தியாலயத்தில் 110'x25' இரண்டு மாடிக்கட்டடமும் 60'x20' வகுப்பறைக் கட்டடமும் நிர்மாணித்தலும் வகுப்பறைத் திருத்தமும் | 1000/= | M7 கட்டட நிர்மாணம் | 49,000 |
| 04. | MN/NECORD/ED/14 | கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையில் 110'x25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம் மற்றும் வகுப்பறைக் கட்டடம் புதுப்பித்தல் | 1000/= | M7 கட்டட நிர்மாணம் | 42,000 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள சகல ஒப்பந்தகாரர்களும் கூறுவிலை கோரலாம்.
   - I நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட துறைசார் தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல்வேண்டும்.
   - II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("ICTAD" இல் மேற்படி M7இற்கு மேலான பதிவுபெற்றீவர்களுக்கு மட்டும்) இருக்கவேண்டும்.
   - III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். இக்காலத்தினபோது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.
   - IV இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   - V மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகள் அல்லது திருப்திகரமற்ற வேலைகள் என்னும் காரணங்களுக்காக தகுதியற்றவர் என பிரகடனப்படுத்தப்பட்டவர்.
   - VI கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் நாளது தேதிவரை புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. இதன் தொடர்பாக பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கூறுவிலையிட முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமையவேண்டும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு - கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD)கீழ் தற்பொழுது செயற்படுத்திக்கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவல்களை வடக்கு - கிழக்கு சமூக புனருத்தாரண, அபிவிருத்தி திட்டம் (NECORD), மன்னார் அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், கேள்வி சம்பந்தமான ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம். தொலைபேசி: 023-3103, தொலைநகல்: 023-33103, ஈமெயில்: distmnr@sltnet.lk
6. கேள்வி ஆவணங்களை 12.03.2003இலிருந்து 27.03.2003வரை காலை 9.30மணியிலிருந்து பிற்பகல் 3.00மணிவரை வேலைநாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து உரிய மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. முன்கூட்டிய கேள்விக் கூட்டமொன்று 27.03.2003 மாலை 2.00 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.
8. கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்வி விலையையும் கேள்விவிலை கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், பந்தி 9இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

09. பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NCEORD, மாவட்ட திட்ட அலுவலகம், கச்சேரி, மன்னார் என்ற விலாசத்துக்கு 03.04.2003 மாலை 2.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

10. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**வே.விசுவலிங்கம்,**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை / அரசாங்க அதிபர்,**
**NECORD திட்டம்,**
**மன்னார்.**

(சி-26869)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

2ஆம் வருட வரலாற்றுத்துறை மாணவி செல்வி செ.சர்மினியின
அன்புத் தாயார்

## செல்வராஜா இந்திராணி

அவர்கள் 10.02.2003 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்.பல்கலைக்கழகம்.* (15490)

2ஆம் வருட வரலாற்றுத்துறை மாணவர்கள்.

# முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 16 - 12 - 1939



மறைவு 21 - 02 - 2002

## திருமதி பூபாலசிங்கம் பரமேஸ்வரி

திதி: பூர்வபட்ச நவமி 12-03-2003

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று அழைக்க உறவொன்று வருமோ?
ஓராண்டு ஓடிப்போனதோ அந்தோ
உமைப்பிரிந்து!
ஓராண்டென்ன நூறாண்டு சென்றாலும்
உம் நினைவு எம் நெஞ்சங்களில்
என்றும் நீங்காது நிலைத்திருக்கும்!

(15488)

*செருக்கப்புலம்,*
*கோண்டாவில் கிழக்கு, கேண்டாவில்.*

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணுலகில் 12 - 07 - 1933



விண்ணுலகில் 10 - 02 - 2003

## அமரர் சின்னையா நாகேஸ்வரி

*அம்மா!*
*நிழலாகிப்போன - உங்கள்*
*நினைவுகளைச்சுமந்து*
*நித்தம் வாடி நிற்கும் - உங்கள்*
*பிள்ளைகளும் உறவுகளும்*

அம்மாவின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுவதோடு இன்று (12.03.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கொடிகாம வீதி,*
*புலோலி தெற்கு, புலோலி.* (சி-26880)

தகவல்:
குடும்பத்தினர்
ஜெகதீஸ்வரி *(மகள்)*

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 - 02 - 1917



உதிர்வு 10 - 02 - 2003

## திருமதி கந்தப்பா இலட்சுமி (ஆச்சி)

பண்புடன் பாரில் வாழ்ந்து மறைந்த பாசமுள்ள தாயே!
எம்முடன் வாழ்ந்த நாள்கள் என்றும்
எம் நெஞ்சை விட்டகலா!
*உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.*

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றி எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (12.03.2003) புதன்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பாடசாலை ஒழுங்கை,*
*வட்டு கிழக்கு,*
*சங்கரத்தை.* (15379)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# திருமுறை பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் திருவாதிரை நட்சத்திர தின திருவாதிரை தழுவிய திருமுறைப் பதிக பாராயணத்தில் ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் உள்ள அன்பகம் இல்லத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 8மணிக்கும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பாஸ்கரன் சிற்பாலயத்தில் இன்று பிற்பகல் 5மணிக்கும் இந்த மாதத்திற்குரிய திருமுறைப் பதிகப் பாராயணம் நடைபெறும். (ஒ-6)

# பெரும்பான்மை...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரியாலய சேவகரொருவரின் அரசு ஆகும். வரலாற்றில் நலிவுற்ற நிலையிலான அரசை ஒருகாரியாலய சேவகரால் பாதுகாக்க இயலுமா?

எந்தவகையிலும் அது இயலாது. ஒரு காரியாலய சேவகருக்கு கடிதங்களை அங்குமிங்கும் எடுத்துச் சென்றும், கொண்டு வந்தும் ஆற்றும் பணிக்கான அதிகாரம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஒருகாரியாலய சேவகரால் ஒரு அடுக்கில் கீழேயுள்ள கடிதத்தை மேலே வைத்தோ அல்லது மேலேயுள்ள கடிதத்தை கீழே வைப்பதன் மூலமோ ஒரு நிறுவனத்தின் இயக்கத்தை ஆட்டம் காண வைக்கமுடியுமென ஒரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பிரேமதாசா கூறியிருந்தார். அதாவது ஒரு நிறுவனத்தின் தலைவரால் ஆற்றமுடியாத பணியொன்றை அந்நிறுவனத்தின் காரியாலய சேவகரால் இலேசாக ஆற்றிவிடமுடியும் என்பதையே அவ்விதம் குறிப்பிட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இது ஞாபகம் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவருக்கு 2001 ஆம் ஆண்டில் தலைமைத்துவம் அளிக்க முடிந்தது. வரலாற்றில் கடும் நலிவுற்றிருந்த அரசுக்கும் வரலாற்றில் ஐ.தே.கட்சி மிகுந்த நலிவடைந்த நிலையில் இருந்தவேளையிலேயே 1994இல் அவருக்கு தலைமைத்துவம் கிடைத்தது. அது 17 ஆண்டு காலம் பல ஊழல் - மோசடி குற்றச்சாட்டுக்களின் மத்தியில் ஐ.தே.கட்சி மகியங்கனை வரை ஓரங்கட்டப்பட்ட வேளை ஆகும். ஆனால் அவர் தனது தலைமைத்துவத்தின் மூலம் கட்சியையும் காப்பாற்றி மீண்டும் தலையெழுத்து அதிகாரம் பெறச் செய்தார். எனவே ரணில் தன்னிடம் கையளிக்கப்பட்ட - வரலாற்றிலேயே மிக நலிவுற்ற நிலையில் உள்ள - அரசு வீழ்ச்சியடைய அனுமதிப்பார் என்று எதிர்பார்க்கமுடியாது. ★

# அன்பு செய்யுங்கள்

"தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு எங்குமில்லை. அன்பு இது மூன்றெழுத்து மந்திரம். முதலும் முடிவும் இல்லாதது அன்று இயேசு பெருமான் வாழ்ந்த காலத்தில் அன்பைப் பற்றிய ஒரு சர்ச்சை மக்களிடையே நிகழ்ந்தது - மறை நூல் அறிஞர் ஒருவர் இயேசுவிடம் அனைத்திலும் முதன்மையான கட்டளை எது என்று கேட்டார். இயேசுவின் பதில் உன் ஆண்டவராகிய கடவுள் மீது அன்பு கூர்வாயாக; உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக! என்று அமைந்தது.

"கிறிஸ்துவின் காலத்தில எத்த

## தவக்காலச் சிந்தனை - எட்டாம் நாள் -

னையோ சட்டதிட்டங்கள் இருந்தன. ஆனால், எந்தச்சட்டமும் கடவுள் அன்பையும் பிறரன்பையும் வென்றுவிட முடியாதென ஆணித்தரமாகக் கூறின. இயேசு பெரிய வியாழனன்று இறுதி உணவு வேளையில் கூட அன்பின் மகத்துவத்தையும் இன்றியமையாத தன்மையையும் குறிப்பிடுகின்றார். "நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள் என்றார் இறைமகன்.

"இறையன்பும் பிறரன்பும் பின்னிப் பிணைந்தவைகள். ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்கமுடியாது. பிறரன்பின்றி இறையன்பில்லை - கண்ணால் தான் காணும் அயலவனை அன்பு செய்ய மறுத்தும் நீ கண்ணால் காணாத கடவுளை எவ்வாறு அன்பு செய்வாய்.

"கடவுளுக்குள் மனிதன் வாழ வேண்டும். மனிதனுக்குள் கடவுள வாழ வேண்டும். அன்பின் கொடுமுடியாக சிலுவை என்னும் சின்னம் கிறிஸ்துவின் அடையாளமாகக் காணப்படுகின்றது. சிலுவையில் காணப்படும் நேர்கோடு கடவுள் அன்பைக் குறிக்கின்றது. கிடைக்கோடு பிறரன்பைக் காட்டி நிற்கின்றது. எனவே இந்த தவக்காலம் எம்தாய்த் திருச்சபையால் நமக்குத் தரப்பட்டுள்ளது.

நவம் குருசுமுத்து

எனவே, இப்பரிசுத்த காலமாகிய புனித தவக்காலத்திலே நாம் ஆழ்ந்த இறைவழிபாடுகளை மட்டும் நடத்தி மனத்திருப்தி அடைவதை விடுத்து, இறைசாயலாக படைக்கப்பட்ட மனிதனை அன்பு செய்து அரவணைத்து தம்மிடமுள்ளதை நல்ல மனத்துடன் பகிர்ந்து வாழ முயற்சிப்போமாக!

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. V. பேரின்பராசா

(கிராம உத்தியோகத்தர்
மிருசுவில் தெற்கு J/336)

அவர்கள் தரம் ஒன்றிற்கு பதவியுயர்வு பெற்றுள்ளமையை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

அன்பாலும், நேரகாலம் பார்க்காத சிறப்பான சேவையினாலும் எம்கிராம மக்களின் பேரன்பைப் பெற்றுள்ள பேரின்பராசா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து மேலும் பல பதவியுயர்வுகள் பெற்றுப் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

மிருசுவில். (15498) - மிருசுவில் தெற்கு மக்கள்.




MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

## SHARP Action of the day



ஆஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களை சிதறடித்த ஷேன் பொண்ட்

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ்
BROWNS ELECTORINICS
Browns

### காலியாகும் அரங்குகள்

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியிலிருந்து தென்னாபிரிக்கா வெளியேறிவிட்டதால் ஆட்டங்களைப் பார்க்க வரும் ரசிகர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது.



சனிக்கிழமை நடைபெற்ற நியூசிலாந்து - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையேயான சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தைப் பார்க்க 2 ஆயிரம் ரசிகர்களே திரண்டிருந்தனர்.

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையேயான ஆட்டத்துக்கான ரிக்கெட்டுகளும் தாராளமாகக் கிடைத்தன.

# சச்சினின் ஆட்டத்தைக் காண சட்டசபை ஒத்திவைப்பு



இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ணப் போட்டியில் தொடக்க வீரர்கள் டெண்டுல்கர் மற்றும் ஷேவாக் ஆகியோர் விளாசித்தள்ளினர்.

அப்போது இந்தியாவின் ராஜஸ்தான் மாநில சட்டசபையில் வரவு - செலவு தொடர்பான விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஆனால், பெரும்பாலான உறுப்பினர்கள் சட்டசபைக்குவராமல் கிரிக்கெட் பார்த்துக்கொண்டிருந்தனர்.

டெண்டுல்கர் சதம் அடிக்கப்போகிறார் என்ற செய்தி கேள்விப்பட்டதும் எஞ்சியிருந்த உறுப்பினர்களும் போட்டியைக்காண ஆர்வம் காட்டினர். இதனால், சபாநாயகர் சட்டசபையை 15 நிமிடம் ஒத்திவைத்தார்.

அனைத்து உறுப்பினர்களும் ஓய்வு அறைக்கு வந்து கிரிக்கெட் போட்டியை ஆவலுடன் ரசித்தனர். ஆனால், சச்சினின் சதம் தவறிவிட்டது.

# மேற்கிந்திய அணிக்கு புதிய பயிற்றுநர்

கிரிக்கெட் உலகக்கிண்ண போட்டியில் திறமையாக விளையாடி துரதிஷ்டவசத்தால் முதல் சுற்றிலேயே வெளியேறிய மேற்கிந்திய தீவுகள் அணி புதிய பயற்சியாளரை நியமிக்கத்தீர்மானித்துள்ளது.

2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத்தை நடத்தவுள்ள மேற்கிந்தியதீவுகள் அணி புதிய பயிற்சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்றுநரான பாப்ஊல்மரை நியமிக்கும் நிலையில் உள்ளது.

பாப்ஊல்மரும் இந்த வாய்ப்பை பயிற்றுநராக ஏற்றுக்கொள்வார் என தெரிகின்றது.

மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த முன்னாள் தலைவர் விவியன் ரிச்சட்ஸ் உள்ளிட்ட 4 பேர் கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் தேர்வுக்குழுவினர் பாப் ஊல்மரிடம் பயிற்சியாளர் பதவியை ஏற்பது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில் பாப்ஊல்மரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் தொடர்பு கொண்டதாக செய்திகள் வெளிவந்தன.

ஆனால், இந்தச்செய்திகளை பாப்ஊல்மர் மறுத்தார். ஆனால், மேற்கிந்திய தீவுகளுடன் ஆலோசனை நடத்தியதை மகிழ்ச்சியுடன் கூறிய ஊல்மர் இந்தப் பேச்சுவார்த்தை திருப்தியாக இருந்ததாகவும் தன்னை பயிற்சியாளராக அழைப்பது இனி மேற்கிந்தியதீவுகளின் கையில் தான் உள்ளது என்றும் கூறினார்.

பாப்ஊல்மருக்கு வழங்கப்படும் சம்பளம் குறித்து, மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை அதிகாரிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.

"மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பயிற்றுநராக பணியாற்றுவதற்கு விருப்பம் இருந்ததால் தான் எனது ஆர்வத்தை மேற்கிந்திய தீவுகள் அதிகாரிகளிடம் வெளிப்படுத்தினேன்" - இவ்வாறு பாப்ஊல்மர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியை சந்திப்பதற்கு மியண்டாட் திட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட சரிவு குறித்து, பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பைச் சந்தித்துப் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ஜாவிட் மியண்டாட்.

"வாய்ப்புக் கிடைத்தால் முஷாரப்

(11ஆம் பக்கம் பார்க்க)





# இரு அணிகளின் விதி

புளும்பொன்ரைன்,மார்ச்12

கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் இன்று புளும்பொன்ரைன் மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டம் மிகவும் விறுவிறுப்பான ஆட்டம். இரு அணிகள் மட்டும் இதில் மோதினாலும் மூன்றாவது அணி ஒன்றின் தலைவிதியும் இதில் அடங்கியுள்ளது. அது வேறு எதுவுமில்லை. இலங்கை அணி.



ஸிம்பாப்வே - கென்ய அணிகள் இன்று மோதுகின்றன. இந்த இரு அணிகளும் அரையிறுதிக்கு செல்வதற்கு கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. அதேபோல இலங்கையும் அரையிறுதிக்கு செல்வதற்கு போராட வேண்டியிருக்கின்றது.

இந்த ஓர் ஆட்டத்தில் வென்றுவிட்டால் அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பு கென்யாவுக்கு பிரகாசமாக இருக்கும். அதே நேரம் இலங்கையின் வாய்ப்பு மங்கிப் போகும்.

இன்றைய ஆட்டத்தில் மோதும் இரு அணிகளிலும் சிறந்த பந்து வீச்சாளர்களும் இளம் துடுப்பாளர்களும் உள்ளனர்.

கென்ய அணி முதல் சுற்றில் தனனுடன் விளையாடிய அணிகளுக்கு பலத்த சவாலை ஏற்படுத்தியே இருந்தது. அதேபோலவே 'சுப்பர் சிக்ஸிலும்' இந்தியாவுக்கு மிகுந்த நெருக்கடியைக் கொடுத்து தோற்றது அந்தஅணி. இந்தியாவுடனான ஆட்டத்தின் பின்னர் இன்றைய ஆட்டத்திலும் தன திறமையை காட்டி ஸிம்பாப்வேயை நிலை குலையச் செய்யும் என நம்பலாம்.

கென்யாவின் ஆரம்பத்துடுப்பாளர்கள், இந்திய அணியின் பந்து வீச்சாளர்களையும், அணியினரையும் நிலை தடுமாறச் செய்தனர். இதனால்தான் அவர்கள் கௌரவமாக தோற்கக் கூடியதாக இருந்தது. அவ்வணியின் சுழற்பந்து வீச்சாளர்களும், வேகப் பந்துவீச்சாளர்களும் இந்திய அணியின முன்னணி துடுப்பாளர்களை கதிகலங்க வைத்தனர். அவர்களின் களத்தடுப்பும், களத்தடுப்பு வியூகமும் ரசிகர்களை மூக்கில் விரல் வைக்கச் செய்தன.



சர்வதேச அந்தஸ்துப் பெறாத

(11ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தமை சரியான தீர்மானமே!



நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பின்னர் இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தமை சரியான தீர்மானமே. இவ்வாறு இலங்கை அணித் தலைவர் சனத் ஜயசூரிய கூறியுள்ளார்.

இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது விக்கெட்டுக்காக 153 ஓட்டங்களைப் பெற்றது. 50 ஓவர்களில் அவ்வணி 6 விக்கெட் இழப்பிற்கு 292 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 109 ஓட்டங்களுடன் சுருண்டது.

துடுப்பாட்டத்திற்குச் சாதகமான ஆடுகளத்தில் இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தமை தவறான தீர்மானம் என விமர்சிக்கப்படுகிறது.

இது குறித்து சனத் ஜயசூரிய கருத்துத் தெரிவிக்கையில், "காலையில் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாகவே ஆடுகளம் இருந்தது. ஆனால், சமிந்த வாஸ் தவிர, வேறு எவரும் சிறப்பாக பந்து வீசவில்லை. சரியான முறையில் பந்துவீசியிருந்தால் நாம் விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கலாம்.

"நாம் துடுப்பெடுத்தாடியபோது இந்திய வீரர்கள் துல்லியமாக பந்து வீசினர். அதிக எண்ணிக்கையான ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடும்போது விக்கெட்டுக்களை இழக்காதிருப்பது அவசியம். ஆனால், 4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்துவிட்டோம். நாம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடவில்லை.

"இது எமக்கு மிகவும் ஏமாற்றமான போட்டி. இனி வரும் போட்டிகளில் இதைவிட சிறப்பாக நாம் விளையாடவேண்டியுள்ளது" என்றார். (ம),

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1ச, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# ஈராக் மீது போர் தொடுத்தால் பதவி விலகுவேன் என்று மிரட்டுகின்றார் பிரிட்டிஷ் அமைச்சர்

லண்டன்,மார்ச்12

ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டால் அதில் இங்கிலாந்து பங்குபற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பிளயர் அரசின் பெண் அமைச்சர் போர்க் கொடி தூக்கி இருக்கிறார். பதவியை ராஜினாமா செய்வேன் என்றும் எச்சரித்து இருக்கிறார்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கு உலகம் முழுவதும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. இந்த நிலையில் அமெரிக்காவோ, ஈராக் மீது போர் தொடுப்பதில் தீவிரமாக உள்ளது. ஐ.நா. அனுமதி அளிக்காவிட்டாலும் போர் தொடுத்தே தீருவோம் என்று அமெரிக்கா கூறிவருகிறது.

இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளயரும், அமெரிக்காவுக்கு ஆதரவாக ஈராக் மீது போர் தொடுப்பதில் உறுதியாக இருக்கிறார். இதனால் அவருக்கு இங்கிலாந்தின் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. அவரது கட்சி எம்.பிக்களே அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். பதவி விலகப்போவதாகவும். மிரட்டி உள்ளனர்.

இந்த நிலையில் பிளயர் அரசாங்கத்தில், அமைச்சராக இருக்கும் பெண கிளேர்ஷார்ட்டும், ஐ.நா. அனுமதி இல்லாமல் ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டு அதில் இங்கிலாந்தும் பங்கு கொண்டால், நான் பதவி விலகிவிடுவேன் என்று எச்சரித்து இருக்கிறார்.

சர்வதேச வளர்ச்சித்துறை அமைச்சராக இருக்கும் அவர் பிரிட்டன் சர்வதேச சட்டத்தை மீறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஐ.நா.வின் அதிகாரத்தைக் குறைப்பதும் நல்லது இல்லை என்று குறிப்பிட்டார்.

என் நிலை குறித்து என் கட்சி உறுப்பினர்களுக்கும், அரசாங்கத்தில என் சக தோழர்களுக்கும் நான் உண்மையாக இருக்க வேண்டும். என் நோக்கம் என்ன என்பதை நான் தெளிவுபடுத்தவேண்டும் என்று கிளேர் ஷார்ட் குறிப்பிட்டார்.

அமைச்சர் ஒருவர் ராஜினாமா செய்ய முன்வந்திருப்பது பிளயருக்கு மிகப்பெரிய பின்னடைவு என்று கருதப்படுகிறது.

(ம)

# பிரிட்டிஷ் பிரதமர் பிளயருக்கு 1000 பவுண்ட் அபராதம்!

லண்டன்,மார்ச்12

போக்குவரத்து விதியை மீறியதற்காக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயருக்கு ஆயிரம் பவுண்ட் அபராதம் விதிக்கப்பட்டது. லண்டன் மேயர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

லண்டன் மாநகர மேயராக கென் லிவிங்ஸ்டன் பதவி வகித்து வருகிறார். லண்டனில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்காக குறிப்பிட்ட பகுதியில் செல்லும் கார்களுக்கு நாள் ஒன்றிற்கு 5 பவுண்ட் வீதம் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரின் வீடு லண்டனில் டவுனிங் தெருவில் உள்ளது. இந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இந்த வரியில் 90 சதவீதம் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. அதாவது அவர்கள் நாள் ஒன்றுக்கு 5 பவுண்டுக்கு பதிலாக 50 'பென்ஸ்' மட்டும் வரியாக செலுத்தினால் போதும்.

ஆனால் லண்டனில் குறிப்பிட்ட 8 சதுர மைல் பரப்பளவு கொண்ட வரி வசூல் வரம்பு பகுதியில் அவர்களுடைய கார்கள் சென்றால் இந்தக் கட்டணச் சலுகையைப் பெற தங்களின் கார்களை பதிவு செய்துகொண்டு இருக்கவேண்டும். அப்படி பதிவு செய்யத் தவறுவது குற்றமாகக் கருதப்பட்டு அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

பிரதமர் ரொனி பிளயர் குடும்பத்தினர் தங்கள் காருக்கான வரியை வாரா வாரம் செலுத்திவிட்டனர். ஆனால தங்கள் வாகனத்தை பதிவு செய்து கொள்ள அவர்கள் தவறிவிட்டனர்.

பிளேயரின் குடும்பத்தினர் குழந்தைகளுடன் காரில் லண்டன் நகர வீதிகளில் பவனி வருவது வழக்கம். ஒருநாள் வரி வசூல் வரம்பு பகுதியில் கார் சென்றபோது அதை பதிவு செய்யாத விவரம் கமராவில் பதிவாகிவிட்டது. பதிவுசெய்யாமால் காரை ஓட்டினால் நாள் ஒன்றுக்கு 80 பவுண்ட் அபராதம் விதிக்கப்படும்.

இந்தப் புதிய விதிமுறை கடந்த பெப்ரவரி 17ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது. எனவே பிரதமர் ரொனி பிளயர் குடும்பத்தினர் காரில் சென்ற நாள்களுக்காக மொத்தம் 1000 பவுண்ட்கள் அபராதம் செலுத்தவேண்டும் என்று மேயர் கென் லிவிங்ஸ்டன் அலுவலகத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மீது நடவடிக்கை எடுத்துள்ள லண்டன் மாநகர மேயர் லிவிங்ஸ்டன் கடந்த தேர்தலில் கட்சியின் அதிகாரபூர்வமான வேட்பாளரை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றவர் என்பதால் பிரதமர் ரொனி பிளயரின் கோபத்துக்கு ஆளானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## ஜனாதிபதியை...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பைச் சந்தித்து பாகிஸ்தான் அணியின் தோல்வி குறித்துப் பேசுவேன். அணியை மாற்றியமைப்பது குறித்து விவாதிப்பேன்." இவ்வாறு மியண்டாட் கூறியுள்ளார்.

மியண்டாட் மீண்டும் பயிற்சியாளராகத் திட்டமிட்டுள்ளதாக சில வட்டாரங்கள் தெரிவித்தன. பரிசுத் தொகையைப் பிரித்துக்கொள்வதில் வீரர்களுக்கும் மியண்டாட்டுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கடந்த ஆண்டு மியண்டாட் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

பாக்.கிரிக்கெட்சபை - வீரர்களின் அணுகுமுறையில் மாற்றம் வேண்டும். அணியின் தோல்வியால் மூத்த வீரர்கள் ஓய்வு பெறுவதா? வேண்டாமா? என்பதை கிரிக்கெட் சபையே தீர்மானிக்க வேண்டும்" என்றார் மியண்டாட்.

# ஆஸ்துமா நோயாளிக்கு உதவும் செல்போன்

பாரிஸ்,மார்ச்12

ஆஸ்துமா தாக்குதல் வருவதை முன்கூட்டியே அறிந்து நோயாளியை எச்சரிக்கை செய்யக் கூடிய செல்போனகளை பிரிட்டிஷ் டாக்டர்கள் உருவாக்கியுள்ளனர். ஆஸ்துமா நோய் உள்ளவர்கள், இந்த செல்போன்களில் உள்ள கண்காணிப்பு மீற்றர் தினமும் இரு முறை வாயால் ஊத வேண்டும். அவரது மூச்சுக் காற்றை அந்த மீற்றர் பரிசோதித்து, நோயாளியின் நுரையீரலின் செயற்பாட்டை கண்டறியும். அஸ்துமா தீவிரமாகத் தாக்குவதற்கான வாய்ப்பு இருந்தால், உடனே அவரது டாக்டருக்கு ஈமெயில் மூலம் தகவல தெரிவிக்கும்.

இத்தகவலைப் பெறும் டாக்டர், தனது நோயாளியைத் தொடர்பு கொண்டு, மாற்று மருந்தை சாப்பிடுமாறு ஆலோசனை தருவார்.

தவிர ஆஸ்துமா நோயால் அவதிப்படுவோர் இப்போது, மெக்கானிக்கல் மீற்றரில் தினமும் வாயால் ஊதி, நுரையீரல் செயற்பாட்டின் அளவை குறித்து வைக்கின்றனர். மாதம் ஒரு முறை அல்லது 2 மாதங்களுக்கு ஒரு முறை டாக்டரிடம் சென்று தங்கள் குறிப்பேட்டை காட்டி சிகிச்சை பெறுகின்றனர். இந்த முறையை பலரும் சரியாகப் பின்பற்றுவதில்லை. அல்லது மறந்துவிடுகின்றனர். இதைத் தவிர்க்க ஆஸ்துமா தாக்குதலைக் கண்டறியும் புதிய வகை செல்போனை பிரிட்டிஷ் டாக்டர்கள் உருவாக்கியுள்ளனர். அந்த செல்போனை வைத்திருக்கும் நோயாளி, அதில் உள்ள மெக்கானிக்கல் மீற்றரில் வாயால் ஊதமறந்துவிட்டால் , அந்த செல்போன் தானாகவே, திரை மூலம் அவருக்கு ஞாபகப்படுத்தும். இதற்கேற்ற வகையில் அதில் மென்பொருள் பொருத்தப்பட்டுள்ளது.

மேற்கு லண்டனில் சோதனை ரீதியில் சிலருக்கு இந்த செல்போன் வழங்கப்பட்டுள்ளது. இது வெற்றிகரமாக செயற்பட்டால் நீரிழிவு நோயாளிகள், நுரையீரல் தொற்று நோயாளிகளுக்கும் பயனுள்ள இருக்கும் என்று பிரிட்டிஷ் சயன்ஸ் வீக்' கூறியுள்ளது.

(ஐ)

# அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஈராக்குக்குச் சென்றுள்ளனர்

கெய்ரோ,மார்ச்12

அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நேற்று செவ்வாய்க் கிழமை ஈராக் சென்றுள்ளனர்.

எகிப்து வெளியுறவு அமைச்சர் அஹ்மத் மஹர் இதைத் தெரிவித்தார். பஹ்ரைன், எகிப்து, லெபனான், டுனீசியா, சிரியா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஈராக் செல்கின்றனர். இவர்கள் கடந்த சனிக்கிழமை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலைச் சந்தித்துப் பேசினர். ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா போர் தொடுக்கும் திட்டத்துக்கு தங்கள் எதிர்ப்பை அவர்கள் தெரிவித்தனர்.

ஐ.நா.முதன்மைச் செயலர் கோபி அனான், ஈராக்கில் ஆயுத சோதனையில் ஈடுபடும் குழுவின் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் ஆகியோரையும் இவர்கள் சந்தித்தனர்.

இதனிடையே ஐ.நா.பாதுகாப்புச் சபையின் அனுமதியின்றி ஈராக்கில் அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவர் என்று அமெரிக்க எம்.பியான கார்ல் லெவின் கூறியுள்ளார்.

ஈராக் மூலமாக அமெரிக்காவுக்கு இப்போது உடனே அச்சுறுத்தல் கிடையாது. இந்நிலையில் ஈராக்கை ஐ.நா. அனுமதியின்றி தாக்குவதால் பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. உலக நாடுகள் அமெரிக்காவை ஒதுக்கிவிடும். நாம் மற்ற நாடுகளுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும். ஐ.நா. சபையை நாம் ஒரு தடையாக நினைக்கக்கூடாது. பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு எதிராக உலக நாடுகளை ஒருங்கிணைக்க, ஐ.நா.சபையை நாம பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

(ம)

# இரு அணிகளின் விதி...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அணி இம்முறை உலகக் கிண்னத் தொரில் சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது.

கென்யாவின் சுழற் பந்துவீச்சாளர்கள் சுஜி, ஒடுயா மற்றும்வேகப் பந்து வீச்சாளர் உடும்பே ஆகியோர் நம்பிக்கையூட்டுபவர்கள்.

இதேநேரம், ஸிம்பாப்வேயின் பலத்தை குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. அவ்வணி முதற்சுற்றில் தட்டுத்தடுமாறி அடுத்த சுற்றுக்கு வந்தது. அதன் பின்னர் 'சுப்பர் சிக்ஸில்' முதலாவதாக இடம்பெற்ற நியூஸிலாந்துடனான ஆட்டத்தில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி கௌரவ ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று தோல்வியுற்றது ஸிம்பாப்வே.

ஸிம்பாப்வே அணியிலும் பல சிறந்த இளம் வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒரிருவரே இந்தத் தொடரில் பிரகாசித்துள்ளனர். அவர்களிலும் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்து வருகிறவர் தைபுதான். சுட்டிப் பையனாக இருக்கும் அவருக்கு சிறந்த ஓர் எதிர்காலம் உண்டு என்பதனையும் எவரும் மறுக்க முடியாது.

ஸிம்பாப்வேயின் பந்துவீச்சும் களத்தடுப்பும் மிகவும் முன்னேற்றகரமானதாக இல்லை. இவ்விரண்டிலும் அவர்கள் கவனஞ்செலுத்துவது அவர்களின இன்றைய வெற்றிக்கு மிகவும் அவசியம்.

இவ்விரு அணிகளிலும் ஸிம்பாப்வே டெஸ்ட் அந்தஸ்து பெற்ற ஓர் அணி. அந்த அணியில் அனுபவம் வாய்ந்த பல வீரர்கள் உள்ளனர். எனவே கென்யாவுக்கு ஒரு படிமேலே அது இருந்தாக வேண்டும்.

எது எவ்வாறு இருப்பினும் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறது.

இன்றைய ஆட்டத்தில் கென்ய அணி வெற்றி பெற்றுவிட்டால் அரையிறுதிக்குச் செல்வது உறுதி. அதேபோலவே ஸிம்பாப்வே அரையிறுதிக்குச் செல்ல வேண்டுமாக இருந்தால் இன்றை ஆட்டத்திலும் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறுகின்ற ஆட்டத்திலும் வென்றாக வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது.

இன்றைய ஆட்டத்தில் ஸிம்பாப்வே தோற்றுவிட்டால் அரையிறுதிக்குச் செல்வது சந்தேகமே. கென்யா வென்றுவிட்டால் ஸிம்பாப்வே என்ன இலங்கைக்கும் அரையிறுதிக்குச் செல்வதற்கு இடம் கிடைக்காமல் போய் விடும்.

இன்று நடைபெறும் இரு அணிகளுக்கிடையிலான ஆட்டம் அரையிறுதிக்குச் செல்வதற்கான வாய்ப்பை பெறுவதற்கான பெரும் போராட்டமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்விரு அணிகளுக்குமிடையில் இதுவரை நடைபெற்ற 14 ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் ஸிம்பாப்வே 12 தடவைகள் வென்றுள்ளது. இரு ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்துள்ளன.

(ஜ-ர)


ராஜா யாழ்ப்பாணம்
இன்றுமுதல் விக்ரம், லைலா நடித்த
தில் (ரீலஸ்)
10.30, 2.30, 6.30
U 571
13வரைஇரவு 9.30 மட்டும்
(C/26810)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், சவுந்தர்யா, மீனா நடித்த
தேவன் (ரீலஸ்)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே)
ஜக்கிஜான் நடித்த
RUSH HOUR - 2
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
(C/26838)

லஷ்சுமி இணுவில்
இளைய தளபதி விஜய், ரீமாசென் நடித்த
பகவதி
தினசரி மூன்று காட்சிகள்
11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், பூஜா, ரகுவரன் நடித்த
சூரியபார்வை (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00,7.00 (பு.நேரம்)
திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாள்களில் 7.00 மணிக்கு
ஆங்கிலத் திரைப்படம்
M.I. - 2
(சண்டைக்காட்சிகள் நிறைந்தது)


## கண்ணீர் அஞ்சலி

### விஜயகுமார் சசிகரன்



கடந்த 10.03.2003 அன்று காலமான விஜயகுமார் சசிகரன் அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கம்பர்மலை,*
*வல்வெட்டித்துறை.*

பிரிவால் துயருறும்:
(15506) செ.தங்கராஜா குடும்பம்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிரவேலு மாணிக்கம்

இருபாலை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு மாணிக்கம் நேற்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், தங்கம் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தவமலர், துரைராசா (புகையிரத பாதுகாவலர், மருதானை), மகாலஷ்மி ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகநாதன், ஜெகதீஸ்வரி, முத்துலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தர்மினி, சாமினி, மேனகா, பிரதீப், கிரிகரன், சுகிர்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2003) புதன்கிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

*இருபாலை கிழக்கு,*
*இருபாலை.*

(C-26913)

தகவல்:
க.துரைராசா (மகன்)

### செல்லையா பரராஜசிங்கம்

*(ஆயுர்வேத வைத்தியர்)*

நாகர்கோவில் தெற்கைச் சேர்ந்த செல்லையா பரராஜசிங்கம் நேற்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் செல்வமணி, செல்வகுலசிங்கம், லலிதாதேவி (பதில் ஆயுர்வேத வைத்தியர், பருத்தித்துறை பிரதேசசபை), கமலாதேவி, நாகேஸ்வரன், புஸ்பவதி, யோகேஸ்வரன், புனிதவதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவஞானசுந்தரம் (உப தபாலதிபர், நாகர்கோவில்), கணேசலிங்கம், செல்வரதி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுலோசனா, ஜேகேந்திரம், சுகந்தறஜனா, சுகந்தினி, சுலக்சனா, சிவானுசன், யதுர்ஷன், லம்போசிகன், கீர்த்திகா, கோதுஷா, விபுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2003) புதன்கிழமை பிற்பகல் பருத்தித்துறையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*ஆத்தியடி, பருத்தித்துறை.*

(C/26912)

தகவல்:
லலிதாதேவி (மகள்)
(ஆயுர்வேத வைத்தியர்)


MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 14.03.2003 இற்கு முன்னர் நேரில்
MCS
SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW

# விளையாட்டு விழாவையொட்டி நகரில் பயிற்சி முகாம் ஆரம்பம்

வலி.வடக்கு,மார்ச்12

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவினை ஒட்டி நேற்று யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் மெய்வன்மை, கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கபடி, கூடைப்பந்தாட்டம், ஹொக்கி ஆகிய விளையாட்டுக்களுக்கான பயிற்சி முகாம் இடம்பெற்றது.

இப்பயிற்சி முகாமை யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை தேசிய விஞ்ஞான விளையாட்டுக் கல்லூரியைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் பயிற்சிகளை வழங்கினார்கள். மெய்வன்மைப் பயிற்சியை கொழும்பு பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர்கள் ஐ.எம்.ரணசிங்க, சஜித் ஜெயலால் ஆகியோரும் -

கரப்பந்தாட்டத்திற்கான பயிற்சியை விரிவுரையாளர்களான ஐ.பி.விஜயரத்தினா, எ.எ.ஜெயதிஸ்ஸ, விமல் அமரசிங்க ஆகியோரும் -

கூடைப்பந்தாட்டத்திற்கான பயிற்சியை சமன் சமரக்கோன், சையத் குருப்பு ஆகியோரும் -

கபடிக்கான பயிற்சியை பி.டி.குலரத்தினா, விஜயநாயக்க ஆகியோரும் -

ஹொக்கிக்கான பயிற்சியை எ.என். பெரேராவும் -

வலைப்பந்தாட்டத்திற்கான பயிற்சியை சந்திராணி பத்துராஜா, பத்மா குணவர்த்தன ஆகியோரும் வழங்கினர்.

எதிர்வரும் 14ஆம் திகதிவரை இப பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

சிங்கள மொழியில் இடம்பெற்ற விரிவுரைகளுக்கு தமிழ் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(ஒ-5-86)


## பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

கொழும்பில் பத்திரிகை விநியோகம் செய்ய ஆள்கள் தேவை. கொழும்பு நகர் பற்றி நன்கு தெரிந்த, மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உள்ளவர்கள் நேரில் வரவும். தங்குமிட வசதியும் உணவும் வழங்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கலாம்.

**சுடர் ஒளி பத்திரிகை அலுவலகம்**
*36/2, பிரெட்ரிக்கா வீதி,*
*வெள்ளவத்தை.*
(சி-26908)

## விநியோக முகாமையாளர் தேவை (CIRCULATION MANAGER)

சுடர் ஒளிப் பத்திரிகைகளை விநியோகிக்க விநியோக முகாமையாளர் தேவை. தங்குமிடவசதி அளிக்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். நேரில் வரவும்.

**சுடர் ஒளி பத்திரிகை நிறுவனம்**
*36/2, பிரெட்ரிக்கா வீதி,*
*கொழும்பு - 6*
(சி-26907)

**LIONAIR**
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :
**லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்**
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/26688)


## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் - 57, ஆர்.பி.ஜி.எறிகணைகள் - 20, பியூஸ்கள் - 20, ரி.72 மிதிவெடிகள் - 24, ஜம்பிங் மிதிவெடிகள் - 20, கைக்குண்டுகள் - 26 ஆகிய வெடிபொருள்களே அழிக்கப்பட்டன.

வன்னியில் இயங்கும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்ட இந்த வெடிபொருள்கள் அழித்தொழிக்கும் வைபவம் நேற்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது.

(ஐ-164)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரதமிருக்கும் இந்தத் தமிழ்க்கைதிகளின் உடல் நிலைமை மோசமடைந்துள்ளது.

அந்தப் பின்னணியிலேயே அவர்களின் கோரிக்கைகளுள் ஒன்றை நிறைவு செய்வதற்கான இணக்கம் எட்டப்பட்டிருக்கின்றது.

எனினும், தென் பகுதிச் சம்பவங்கள் தொடர்பாக தென்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் வழக்குகள் வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களுக்கு மாற்றப்படமாட்டா என்றும் தெரிவிக்கப்பட்டது.

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் 57 தமிழ்க் கைதிகளில் ஒரு சிலர் தவிர, ஏனையோர் எழுந்து நடமாட முடியாத நிலையில - அரை உணர்வு மயக்கத்தில் - இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## கப்பல் தாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் இந்த இழப்புக்கள் குறித்து தலைமைப்பீடம் பெரும் கவலையடைந்திருப்பதாகவும் கூறிய அவர், இது போன்ற சம்பவங்களைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது என்றார். எனினும் இன்றைய சூழ்நிலையில் மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர் என்பதால் புலிகள் இச்சம்பவத்தை முன்வைத்து உடனடியாகப் போருக்குப் போகமாட்டார்கள் எனவும் அன்ரன் பாலசிங்கம் சொன்னார்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் அடுத்த கட்டப் பேச்சுகளின்போது இச்சம்பவம் குறித்து ஆராயப்படும் எனவும் இதுபோன்ற சம்பவம் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு அரசிடமும், கண்காணிப்புக்குழுவிடமும் கேட்போம் - என்றும் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

"இந்தச் சம்பவத்தை அடுத்து நடைபெறவுள்ள பேச்சுக்களில் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதைவிட அரசிடம் இருந்தும் கண்காணிப்புக் குழுவிடம் இருந்தும் சில உறுதி மொழிகளைப் பெற்றுக் கொள்வோம். இது விடயத்தில் கண்காணிப்புக் குழுதான் உறுதி மொழிகளை வழங்க வேண்டும். வழங்க முடியும்.

"புலிகள் பதில் தாக்குதல் நடத்த வேண்டும். யுத்தத்தில் குதிக்க வேண்டும் என்று மக்கள் விரும்பவில்லை. எப்படியாவது பொறுமையைக் காத்து சமாதான முற்சியைத் தொடரவேண்டும் எனபதுதான் அவர்களின் அவா. அதற்காகத்தான் நாங்கள் சமாதானத்தைப பேணுகின்றோம். ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு யுத்தத்தைத் தொடங்குவதில் அர்த்தமில்லை. ஏனெனில் சமாதானத்தால் கிடைக்கும் பலன்களதான் முக்கியமானவை. மீண்டும் யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுமானால் சமாதானத்தைக் கொண்டு வருவது பெரிய சங்கடமானதாக இருக்கும்" - என்றும பாலசிங்கம் குறிப்பிட்டார்.(ஐ-3-6-8)

# சந்திரிகாவுடன் அரசமைக்க விரும்பாத 25 பொ.ஐ.மு. எம்.பிக்கள் அரசுக்கு ஆதரவு

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கூறுகிறார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து அரசமைக்க ஒருநாளும் விரும்பாத 25 பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின பக்கம் உள்ளனர் என்று பாதுகாப்பு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திலக் மாரப்பன கூறினார்.

இலங்கையின் முதலாவது அதிவேகப் பாதையான தென்னிலங்கை நெடுஞ்சாலைக்கான அடிக்கல்லை நாட்டிவைத்து பத்தேகமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது அரசுக்கு பெருமளவில் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கின்றன. இது தொடர்ந்தால் இந்த அரசை ஒருபோதும் அசைக்க முடியாது என்பதை எதிர்க்கட்சி அறியும். அதனால் அரசைக் கவிழ்க்க பல நாடகங்களை ஆடுகின்றனர்.

டிசெம்பர் மாதத்தில் இந்த அரசைக கவிழ்ப்பதாகக் கூறினார்கள்.மார்ச் மாதத்தில்'கவிழ்ப்பதாக பின்னர் கூறினர். இப்பொழுது கூறுகிறார்கள் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் கவிழ்ப்பதாக. தேர்தல் ஒன்று நடைபெறுமானால் நாமும் விரும்புவோம். தேர்தல் நடந்தால் நாம் மேலும் 15 எம்பிக்களையாவது நாடாளுமன்றத்துக்கு அனுப்ப முடியும். அதனால், தேர்தல் ஒன்றை நடத்தமாட்டார்கள்.

- இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

(ஐ)

## தமிழீழ நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ரவிராஜ், அடைக்கலநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் ஆகியோரும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் கலந்து கொண்டனர்.

புலிகள் தரப்பிலிருந்து வே.பாலகுமாரன், வெ.இளங்குமரன், நடேசன், புலித்தேவன், தமிழ்ச்செல்வன், மூத்த தளபதியான லெப்.கேணல்.மகேந்தி உட்பட பல புலி உறுப்பினர்களும் யாழ்மாவட்ட சட்டத்தரணிகள், தமிழீழ நீதிமன்ற சட்டவாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் 60 லட்சம் ரூபா செலவில் இந்த நீதிமன்ற வளாகம் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

(ஒ-3-6-8)

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
**சிங்கர்**
புதிய பார்வை
இல. 1. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : நியூஸிலாந்து
ஆட்டநாயகன் : ஷேன்பொன்ட்
முடிவு : 96 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி

### ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| ஏ.கில்கிறிஸ்ட் | lbw | b/பொன்ட் | 18 | 20 | 2 | 0 |
| எம்.ஹைடன் | c/மெக்கலம் | b/பொன்ட் | 01 | 04 | 0 | 0 |
| ஆர்.பொன்ரிங் | c/பிளமிங் | b/பொன்ட் | 37 | 61 | 0 | 0 |
| டி.மார்ட்டின் | c/மெக்கலம் | b/பொன்ட் | 31 | 53 | 3 | 0 |
| டி.லீமன்ட் | c/ஆஸ்லே | b/அடெம்ஸ் | 04 | 09 | 0 | 0 |
| எம்.பெவன் | c/வின்சன்ட் | b/ஓராம் | 56 | 94 | 4 | 1 |
| ஜீ.ஹோக் | | b/பொன்ட் | 00 | 01 | 0 | 0 |
| ஐ.ஹார்வி | | b/பொன்ட் | 02 | 11 | 0 | 0 |
| ஏ.பிக்சல் | c/கெய்ன்ஸ் | b/ஓராம் | 64 | 83 | 7 | 2 |
| பிரட்லீ | not out | | 15 | 06 | 0 | 0 |
| ஜி.மெக்ராத் | not out | | 03 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | | | 08 | | | |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | 208/9 | | | |

பொண்ட் : 10-2-23-06, அடம்ஸ் : 9-2-46-01, ஓராம் : 07-00-48-02, கெய்ன்ஸ் : 4-0-16-2, விட்டோரி : 10-01-40-00, ஹரிஸ் : 10-01-24-00, ஸ்டரிஸ் : 03-00-18-03, ஆஸ்லே : 01-00-08-00

### நியூஸிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| டி.விட்டோரி | c/கில்கிறிஸ்ட் | b/மெக்ராத் | 10 | 09 | 1 | 0 |
| எஸ்.பிளமிங் | c/கில்கிறிஸ்ட் | b/பிரெட்லீ | 48 | 70 | 7 | 0 |
| என்.ஆஸ்லே | c/பொன்டிங் | b/மெக்ராத் | 00 | 03 | 0 | 0 |
| எஸ்.ஸ்டைரிஸ் | lbw | b/மெக்ராத் | 03 | 06 | 0 | 0 |
| எல்.கெய்ன்ஸ் | c/பிரெட்லீ | b/மெக்ராத் | 16 | 25 | 2 | 1 |
| எல்.வின்சன்ட் | c/மார்ட்டின் | b/ஹார்வி | 07 | 20 | 1 | 0 |
| சி.ஹரிஸ் | not out | | 15 | 24 | 1 | 0 |
| பி.மெக்கலம் | lbw | b/பிரெட்லீ | 01 | 07 | 0 | 0 |
| எ.ஓராம் | | b/பிரெட்லீ | 00 | 01 | 0 | 0 |
| ஆர்.அடம்ஸ் | | b/பிரெட்லீ | 00 | 06 | 0 | 0 |
| எஸ்.பொன்ட் | c&b/பிரெட்லீ | | 03 | 10 | 0 | 0 |
| உதிரிகள் | | | 09 | | | |
| மொத்தம் | (30.1 ஓவர்கள்) | | 112/10 | | | |

மெக்ராத் : 06-01-29-03, பிரட்லீ : 9.1-02-42-05, ஹார்வி : 06-03-11-01, பிக்ஸன் : 05-00-11-01, ஹோக் : 04-00-11-00


**ASIAN COMPUTER SYSTEMS**
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 5677

| டிப்ளோமா பாடநெறிகள் | காலம் |
|---|---|
| Diploma in Computer Software Engineering | 6 மாதம் |
| Diploma in Web Multimedia | 4 ½ மாதம் |
| Diploma in Visual Programming | 4 ½ மாதம் |
| Professional Diploma in Graphic Design | 4 ½ மாதம் |

இலவச பாடநூல்கள்
தவணைமுறைக் கட்டணங்கள்
கணனிக்கல்வியில் ஓர் புதிய திருப்புமுனை
தொழில்சார் கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பம்

## வதிவிட முகாமையாளர் தேவை (RESIDENTIAL MANAGER)

எக்ஸ்போ விமான சேவை நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் பணியாற்ற வதிவிட முகாமையாளர் தேவை. சம்பளம் சுமார் 20,000/- வரை வழங்கப்படும். விமானப் போக்குவரத்துத்துறையில் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். - விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி.

**EXPO AVIATION (PVT) LTD.**
*466, GALLE ROAD,*
*COLOMBO - 3*
(சி-26909)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சமாதானம் என்ற பெயரில் எங்களைச் சூழ பொறிவலை விரிக்கும் சதி நடக்கின்றது!

## பாலசிங்கம் குற்றச்சாட்டு

இன்றைய நெருக்கடியான சூழலில் தமிழீழ மண்ணுக்கு வருகைதந்து உங்களை நேரில் சந்தித்து இன்றைய அரசியல் நிலைமை பற்றியும், பேச்சுகள் பற்றியும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும் எடுத்து விளக்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக போர்நிறுத்தம் நடைமுறையில் இருந்து வருகின்றது. கடந்த 5, 6 மாதங்களாகப் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. நடைபெற்ற 5 சுற்றுப் பேச்சுகளில் என்னென்ன முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும் கூற விரும்புகின்றேன்.

திருகோணமலையில் இருந்து 220 கடல் மைல்கள் தொலைவில் அதாவது சர்வதேசக் கடற்பரப்பில் ஒரு துயரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த ஒரு வருட போர் நிறுத்தத்தில் மிகவும் மோசமான போர்நிறுத்த மீறல் இந்தச் சம்பவம்.

இந்தச் சம்பவம் குறித்து எமது இயக்கத் தலைமை மிகுந்த ஆழமான கவலையும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறது. அரசுக்கு எமது ஆழமான அதிருப்தியையும் தெரிவித்திருக்கின்றோம்.

இந்த நிகழ்வு, இன்றைய சமாதான பேச்சுகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் எமது தலைமை, அரசுக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றது. ஆகவே, இந்த நிகழ்வு பற்றியும் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் முதலில் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு வர்த்தகக் கப்பல் சேவையை நடத்திவருவது உங்களுக்குத் தெரிந்ததுதானே. கடந்த 15 ஆண்டுகளாக தென்னாசியாவில், தென்கிழக்காசியாவில் எமது கப்பல் போக்குவரத்துக்கள், வர்த்தக சேவைகள் நடைபெற்று வருகின்றன என்பது ஓர் இரகசியமான விடயம் அல்ல. வர்த்தக நோக்கத்துடன் நீண்டகாலமாக இந்தச் சேவையை நடத்தி வருகின்றோம். கப்பல் நிறுவனங்கள் எமக்குச் சொந்தமாக உள்ளன. பல கப்பல்கள் இப்போதும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

இப்படியானதொரு வர்த்தகக் கப்பல் 220 கடல் மைல் தொலைவில் அதாவது சர்வதேசக் கடற்பரப்பில் தடுத்துநிறுத்தப்பட்டது. அது குறித்து எமக்குத் தகவல் அனுப்பப்பட்டது.

"எமது போர்க்கப்பலை நிறுத்தி, கடற்படையினர் அதில் ஏறிப் பார்த்து பரிசோதனை செய்யவேண்டும் என்றும் -

"அந்தக் கப்பலைத் திருப்பி ஸ்ரீலங்கா கடற்பிரதேசத்துக்குள் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படவிருக்கின்றன" என்றும் - எமக்குத் தகவல் தரப்பட்டது.

அப்போது தலைவர் பிரபாகரன் என்னிடம் வந்து, "இது தொடர்பாக இலங்கை அரசுடனும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடனும் தொடர்புகொண்டு, இப்பிரச்சினையை உடன் தீர்க்கவும்" என்று கேட்டுக் கொண்டார்.

### பதிவு செய்யப்பட்ட கப்பல்

"அந்தக் கப்பல் எந்தவிதத்திலும் சட்டவிரோதமான வர்த்தகத்தில் ஈடுபடவில்லை. அது எமது வர்த்தகக் கப்பல். அதாவது சட்டபூர்வமாகப் பதிவுசெய்யப்பட்ட கப்பல். சர்வதேச கடற்பரப்பில் வந்துகொண்டிருக்கின்றது. இதைத் தடுப்பதற்கு ஸ்ரீலங்கா கடற்படைக்கு எவ்விதமான சட்டபூர்வமான அதிகாரமும் இல்லை. இதை உடனடியாக அவர்களிடம் சொல்லுங்கள்" என்று தலைவர் என்னிடம் கூறினார்.

அதன் பிரகாரம், நான் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் ஜெனரல் ரெலிஸனுடன் தொடர்புகொண்டு கதைத்தேன். நான் கதைப்பதற்கு முன்னரே கடற்படை அவருக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது. "புலிகளின் கப்பல் ஒன்றை 220 கடல் மைல்களுக்கு அப்பால் தடுத்து வைத்துள்ளோம். அக்கப்பலில் உள்ளவர்களை விசாரணை செய்கின்றோம்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாக அவர் என்னிடம் தெரிவித்தார். "இது ஒரு சர்வதேசக் கடற்பரப்பு. இதில் எந்தக் கப்பலும் சுதந்திரமாக நடமாடும் உரிமை உண்டு. ஆகவே, இலங்கை கடற்படை இதில் தலையிடுவது சட்ட விரோதமானது" என்று அவருக்கு நான் தெரிவித்தேன். அவரும் எமது நியாயப்பாட்டை ஏற்றுக்கொண்டார். "இதுவிடயத்தில் அஞ்சத்தேவையில்லை. இலங்கை கடற்படைத் தளபதியுடனும் இலங்கை அரசுடனும் தொடர்புகொண்டு இப்பிரச்சினையை சுமுகமாக தீர்த்து வைக்கின்றேன்" என்று அவர் எனக்கு வாக்குறுதி தந்தார்.

இதன்பின் தலைவர் பிரபாகரனிடம் "பிரச்சினை வராது" என்று தெரிவித்தேன். பிரச்சினை வராமல் பார்த்துக்கொள்வதாக கண்காணிப்புக் குழுத் தலைவர் உறுதிமொழி தருவதாகவும் அவரிடம் கூறினேன்.

என்ன நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று நானும் தலைவர் பிரபாகரனும் தமிழ்ச்செல்வனும் பார்த்துக்கொண்டிருந்தோம்.

ஆனால், ஒருமணிநேரத்தின் பின்னர் எமது கடற்புலிகளின் தலைமைப்பீடத்தில் இருந்து ஒரு தகவல் வந்தது. அதாவது எமது கப்பல் மீது ஸ்ரீலங்கா போர்க்கப்பல் தாக்குதலை நடத்தியதாகவும் எமது கப்பல் நடுச்சமுத்திரத்தில் பற்றி எரிவதாகவும் எமது போராளிகள் செத்து மடிந்து கொண்டிருப்பதாகவும் அத்தகவலில் தெரிவிக்கப்பட்டது.

சிறிது நேரத்தில் கப்பல் தீப்பற்றி எரிந்து கடலில் அமிழ்ந்து விட்டது. பதினொரு போராளிகள் இறந்து போனார்கள்.

இதற்குப்பின்னர் மீண்டும் கண்காணிப்புக்குழுத் தலைவருடன் தொடர்புகொள்ளவில்லை. இந்தச் சம்பவத்தை கண்டித்து கடுமையான அறிக்கை விடுத்தோம். இச்சம்பவம் சட்டவிரோதமானது என்றும் போர்நிறுத்த நியமங்களை, விதிகளை மீறுவதாக அமைந்திருக்கின்றது என்றும் இந்தச்சம்பவம் எமது சமாதான முயற்சிகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்தோம்.

இது சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்வு. கடந்த ஒருவருடமாக எத்தனையோ சவால்களுக்கு மத்தியில், முட்டுக்கட்டைகளுக்கு மத்தியில், எத்தனையோ ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியில் பொறுமையுடன் நிதானம் இழக்காமல் போர்நிறுத்தத்தை பேணிக்கொண்டு வருகின்றோம; அமைதியை காத்து வருகின்றோம் என்ற யதார்த்த உண்மையை நீங்கள் அறிவீர்கள்.

### புலிகள் பக்கம் உறுதி, நிதானம்

விடுதலைப் புலிகள் இயக்கம் காலம் காலமாக போர்நிறுத்தம், பேச்சு என்று இறங்கியபோதெல்லாம் ஸ்ரீலங்கா அரசும் உலகமும் "புலிகள் பேச்சைக் குழப்புகிறார்கள், அமைதிச் சூழ்நிலையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை, போர்நிறுத்தத்தில் நம்பிக்கை இல்லை, அமைதி வழி பேணி தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண்பதில் இவர்களுக்கு உண்மையான பற்றுறுதி இல்லை" என்று எம்மீது குற்றஞ் சாட்டி வந்தன.

ஆனால், இந்த முறை உலகத்துக்கும் குறிப்பாக சிங்களதேசத்துக்கும் நாம் உண்மையில் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். உண்மையில் சமாதான வழி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறோம் என்பதை எடுத்துக் காட்டவேண்டும் என்பதில் ஒரு வருட காலத்தில் மிக உறுதியாகவும் நிதானமாகவும் செயற்பட்டு வந்திருக்கின்றோம்.

எம்மை ஆத்திரமூட்டும் செயல்களில் கடற்படையினர் தொடர்ந்து ஈடுபட்டுவந்திருக்கின்றனர். அம்பாறையில் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அப்போதும் அமைதி காத்தோம். நெடுந்தீவுக் கடற்பரப்பில் எமது மீன்பிடிப்படகு அழிக்கப்பட்டு எமது மூன்று போராளிகள் கொல்லப்பட்டனர். அதன் பின் மானிப்பாயில் பெண் போராளிகள் மிகவும் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். அப்போதும் அமைதி காத்தோம். நேற்றும் 11 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். இப்போதும் நாம் அமைதியாக இருக்கின்றோம்.

இந்தச் சம்பவத்தை வைத்துக் கொண்டு நாங்கள் போருக்கு போக தயாராகவில்லை. பொறுமையாக இருப்போம். எந்தளவுக்கு எந்தளவு பொறுமை காக்கமுடியுமோ அந்தளவுக்கு அந்தளவு பொறுமையைக் காப்போம். எமது பக்கம் நியாயம் உண்டு என்பதை உலகுக்கு உணர்த்த நாங்கள் முயற்சிப்போம்.

விடுதலைப் புலிகள் ஆயுதத்தை கடத்த முனைகிறார்கள் என்று இப்போது குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. போர்நிறுத்த உடன்பாட்டின்படி இரு தரப்பினரும் இராணுவ சமநிலையைப் பேணவேண்டும். இதை நான் சொல்லவில்லை. கண்காணிப்புக் குழுத் தலைவர்தான் கூறுகின்றார்.

### வினோதமான இராணுவச் சமநிலை

இராணுவச் சமநிலை எப்படிப் பேணப்படுகின்றது என்பது வேடிக்கையான விடயம். நாங்கள் ஆயுதங்களை இறக்குமதி செய்யமுடியாது. நாங்கள் ஆயுதங்களுடன் நடமாட முடியாது. ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு ஆயுதத்தைக் கொண்டு செல்லமுடியாது. கடலில் சுதந்திரமாக நடமாடமுடியாது.

ஆனால், ஸ்ரீலங்கா அரசு தனது பாதுகாப்பு செலவீனத்தைக் குறைக்கவில்லை. ஒரு சிறிய அளவேனும் பாதுகாப்புச் செலவீனம் குறைக்கப்பட்டதா என்பதை சிந்தித்துப் பாருங்கள். 5 ஆயிரம் கோடி ரூபா ஆயுதக் கொள்வனவுக்கு செலவிடப்படுகின்றது.

கடந்த ஒருவருடமாக ஸ்ரீலங்கா ராணுவம் நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றது. புதிய ஆயுதங்களை வாங்குகிறார்கள், புதிய பீரங்கிப் படகுகளை வாங்குகிறார்கள், புதிய விமானங்களை வாங்குகிறார்கள். அவர்களுக்கு அமெரிக்காவில் பயிற்சி, இஸ்ரேலில் பயிற்சி, பாகிஸ்தானில் பயிற்சி, இந்தியாவில் பயிற்சி.

இப்படியாக ஸ்ரீலங்கா இராணுவம் நவீனமயப்படுத்தப்பட்டுவருகின்றது; பலப்பட்டுவருகின்றது. இராணுவ இயந்திரம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது. நாங்கள் என்ன செய்தோம்?

நெடுந்தீவில் பிடிபட்டது ஒரு 23 எம்.எம்.துப்பாக்கி. இதைப்போல நூற்றுக்கணக்கான ஆயுதங்கள் எம்மிடம் இருக்கின்றன. ஒரு 23 எம்.எம் துப்பாக்கியை, 3 கிரனேட்டுக்களை வைத்துக்கொண்டு நாங்கள் பெருமளவில் ஆயுதங்களைக் கடத்துவதாக ஸ்ரீலங்கா செய்தி உலகம் எம்மீது குற்றஞ்சாட்டுகின்றது.

இது ஒரு வர்த்தகக் கப்பல். அது எங்கேயோ போகிறது. அதைப்போய் தடுக்கிறார்கள். இதற்கு பின்னணியில் யார் இருந்தார்கள், யார் தகவல் கொடுக்கிறார்கள் என்பதெல்லாம் எமக்குத் தெரியும்.

எமது கப்பலைத் தடுத்து எரிக்கும் போது, போராளிகளைக் கொல்லும்போது இராணுவ சமநிலை எப்படிப் பேணப்படுகின்றது?

நானும் பிரபாகரனும் கண்காணிப்புக்குழுவின் இரு ஜெனரல்களையும் சந்தித்து 2 மணிநேரம் பேசினோம். இராணுவச் சமநிலை பற்றி விவாதித்தோம். இராணுவம் நவீனமயமாக்கப்படும் போது எப்படி இராணுவச் சமநிலை பேணப்படுகின்றது என்று அவர்களிடம் கேட்டோம்.

அவர்கள் ஆள்களைத் திரட்டலாம். நாங்கள் ஆள்களைத் திரட்ட முடியாது. 18வயதுக்கு ஒருவயது குறைந்தாலும் சிறுவர் துஷ்பிரயோகம் என்று எம் மீது பழிபோடுகிறார்கள்.

இராணுவச் சமநிலை எவ்வாறு இலங்கையில் பேணப்படுகின்றது என்பது உலகுக்கு சொல்லும்படி கண்காணிப்புக் குழுத் தலைவர்களிடம் கேட்டுள்ளோம்.

சமாதானத்தைப் பேணவேண்டும் என்ற உறுதிப்பாட்டில், விடுதலைப் புலிகள் தங்களைக் கூடப் பலப்படுத்தாமல் இருக்கிறார்கள். ஆனால், அரசு என்ற ரீதியில் பெருமளவு ஆயுதங்களைக் கொண்டு வந்து குவித்து கடற்படை, விமானப்படை. தரைப்படை ஆகியவற்றைப் பலப்படுத்தி வருகின்றார்கள். இது நியாயமா? இதைநாங்கள் எவ்வளவு காலம் பொறுத்திருப்பது?



சமாதானத்தால் யார் பாதிக்கப்படுவது? எங்கள் மக்களின் பலம் பாதிக்கப்படுகின்றது. இந்த ஆயுதம் எமக்கு ஏன்? மக்களின் பாதுகாப்பு கருதியதுதான் ஆயுதம். இந்த ஆயுதத்தை வைத்துப்போராடி பலம்மிக்க சக்தியாக இருப்பதால்தான் சிங்கள தேசம் எம்முடன் பேச்சு நடத்துகின்றது. உலகம் எங்களுக்கு அதிகாரம் தருகின்றது.

### சமாதானம் புலிகளை வீழ்த்தும் பொறியா?

இந்த ஆயுதங்கள் எம்மிடம் இல்லையென்றால், இராணுவபலம் இல்லையென்றால் பேச்சு நடக்காது. ஆனால், இந்தப்பேச்சுக்கள் புலிகளை பலவீனப்படுத்தும் ஒரு பொறியாக மாறக்கூடாது. அதில் நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம்.

இந்த அரசு அமெரிக்காவுடன் உடன்பாடு செய்கிறது. இந்தியாவுடன் உடன்பாடு செய்கிறது. இந்த அரசு சர்வதேச நாடுகளுடன் உடன்பாடுகளை, ஒப்பந்தங்களை செய்கின்றது. ஒருபுறம் வர்த்தக ஒப்பந்தங்கள், பொருளாதார ஒப்பந்தங்கள், இராணுவ ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. எதற்கு? புலிகள் இயக்கத்தை சுற்றி, தமிழர் தாயகத்தை சுற்றி ஒரு பாதுகாப்பு சிலந்திவலை ஒன்று போடப்படுகின்றது. இது எங்களுக்குத் தெரியும். இதில் இந்தியாவின் பங்கு எவ்வளவு இருக்கின்றது என்பதும் எமக்குத் தெரியும். அமெரிக்காவின் பங்கு எவ்வளவு இருக்கின்றது என்பதும் தெரியும். நாங்கள் முட்டாள்கள் அல்லர்.

ஆனால், நாங்கள் சமாதானப் பாதையில் உறுதியாக நிற்கின்றோம். உறுதியாக நிற்கின்றோம் என்று உலகத்துக்கு காட்டிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால், இந்தச் சமாதானச் சூழல் எத்தகைய ஒரு சிலந்தி வலையை, ஒரு பொறியை உருவாக்குகின்றது என்பதும் எமக்குத் தெரியும். நாங்கள் விழிப்பாகவும் இருக்கவேண்டும். இதில் சமாதானத்தை குலைக்கக்கூடாது. ஏனெனில் எமது மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள், அமைதியை விரும்புகிறார்கள், அமைதி வழியிலான தீர்வை விரும்புகிறார்கள்.

சமாதானப் பேச்சுக்களை நடத்திக்கொண்டு நாம் எம்மைப் பலப்படுத்துவதாக சிங்கள பேரினவாதச் சக்திகள் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு எதிராக பிரசாரம் செய்கின்றன. பெரும் எதிர்ப்புப் போராட்டத்தை சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் நடத்தியுள்ளன. சமாதான முயற்சிகள் புலிகளுக்கு சார்பானது என்று அவை தெரிவித்துள்ளன.

சமாதானப் பேச்சு மூலம் எம்மை நாம் பலப்படுத்தவில்லை. இவ்வளவு காலத்தில் துப்பாக்கி ஒன்றை நெடுந்தீவு ஊடாக கொண்டு வந்திருக்கிறோமாம். இதைப்போல ஆயிரம் ஆயிரம் துப்பாக்கிகள் எங்களிடம் இருக்கின்றன. வேண்டுமானால் ஸ்ரீலங்கா அரசுக்கு விற்கக்கூடிய அளவு துப்பாக்கிகள் எம்மிடம் இருக்கின்றன.

யுத்த சூழ்நிலையில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் முகாம்களைத் தகர்க்க முடியும் இராணுவத்தின் ஆயுத பலத்தை அழிக்க முடியும். அவர்களிடம் இருந்து இராணுவ தளபாடங்களைப் பெறமுடியும். வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொண்டுவர முடியும். கப்பல் கப்பலாக கொண்டு வந்து இறக்கமுடியும்; இறக்கி இருக்கின்றோம். எமது பீரங்கிக் கப்பல்களைத் தாக்க அஞ்சி கடற்படைக் கப்பல்கள் தப்பி ஓடிவிடும். இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு எமது சொந்த மண்ணில் தமிழீழக் கடற்பரப்பில் எங்கள் நடமாட்டத்தைக் குறைத்து, அவனுக்குக் கைகட்டி பணிந்து, அவனிடம் அடிவாங்கி, எமது போராளிகளை பலிகொடுத்து, பொறுமையை இழக்காமல், நிதானத்தை இழக்காமல், அமைதிக்காக நாங்கள் செய்யும் தியாகம் அற்புதமானது. இதை மக்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

எங்களுக்கு பலம் இல்லை என்றோ அல்லது பயந்தோ அமைதியைப் பேணவில்லை. எமது மக்களுக்காக இந்த உலகுக்காக, இந்த உலகுக்கு உன்னத உதாரணமாக விளங்குவதற்காக நாங்கள் பொறுமையுடன் இருக்கின்றோம்.

அரசியல் தீர்வில் புலிகளுக்கு அக்கறை இல்லை என்று எம்மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது. "புலிகள் தமிழீழ இலட்சியத்தை கைவிட மாட்டார்கள். புலிகள் பேச்சு என்று சொல்லி உலகத்தை ஏமாற்றப்பார்க்கிறார்கள்". இப்படியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

### தலைவரின் பிரகடனம்

உலகமே ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கி

(11ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானம் என்ற பெயரில் எங்களை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றோம். கடந்த மாவீரர் தின அறிக்கையில் தலைவர் ஒரு முக்கியமான - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனத்தை வெளியிட்டார்.

"தமிழ் மக்கள் தமது தாயக நிலத்தில் வரலாற்று ரீதியாக காலந்தோறும் ஆண்டாண்டு வாழ்ந்த தாயக மண்ணில் சுதந்திரமாக, கௌரவமாக, சமாதானமாகவும் வாழக்கூடிய ஒரு சுயாட்சி உரிமையைக் கொண்ட ஆட்சி அமைப்பை விரும்புகிறார்கள்" என்று தலைவர் தெரிவித்திருந்தார். அப்படியான ஆட்சி அமைப்பு தரப்பட்டால் அதை நாம் பரிசீலனை செய்துபார்க்கத் தயாராக இருக்கின்றோம். சர்வதேச நியமங்கள், பிரகடனங்கள், ஐ.நா.பிரகடனங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுத்தான் தலைவர் கூறியுள்ளார். உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற பதத்தை அவர் பாவித்துள்ளார்.

இறையாட்சி உள்ள ஒரு நாட்டில் ஓர் ஒடுக்கப்படும் மக்கள் தங்கள் தாயக நிலத்தில் ஒரு சுயாட்சி அமைத்துக்கொள்ளும் உரிமையே உள்ளக சுயநிர்ணயமாகும். இந்த வகையான தீர்வை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம், பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம் என்று தலைவர் கூறியுள்ளார்.

இந்த உள்ளக சுயநிர்ணய உரிமையை தரமறுத்தால் நாங்கள் வெளியக சுயநிர்ணய பிரகடனத்தை செய்து, பிரிந்து சென்று தனியாட்சி அமைப்பதை தவிர எமக்கு வேறு வழியில்லை என்று தலைவர் விளக்கமாகக் கூறியுள்ளார்.

உலகத்தை ஏமாற்றுவதற்காக சொற்பதங்களையோ, சொற்சிலம்பாடலையோ நடத்தவில்லை. சர்வதேச உலகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைய எமது கோரிக்கையை முன்வைக்கிறோம்.

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் இந்தத்தீர்வை வரவேற்கின்றன. நாங்கள் இறங்கி வருகின்றோம். ஆனால் அதேவேளை சிங்களதேசத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்கிறோம். சமஷ்டி தீர்வு ஒன்றை முன்வைக்கும்படி கேட்கிறோம். ஆனால், அதற்கும் மறுத்து ஒடுக்குமுறையை தொடர்ந்தால், பிரிந்துபோவதைத் தவிர ,வேறு வழியில்லை.

ஓர் அரசு ஓர் இன மக்களை ஜனநாயக முறையில் அரவணைத்து அந்த மக்களுக்கு அரச அங்கீகாரம் வழங்கி, பிரதிநிதித்துவம் வழங்கி, அவர்களை அரவணைக்கத் தவறினால் அந்த மக்கள் பிரிந்து சென்று தனி அரசுப் பிரகடனம் செய்யும் உரிமை உள்ளவர்கள் என்று ஐ.நா சாசனம் சொல்கிறது. இது கனடிய அரசமைப்பிலும் உள்ளது.

18 வயதுக்குக் குறைந்தவர்களை இராணுவத்தில் நாம் இணைத்துக் கொள்வதாக குற்றஞ்சாட்டப்பட்டது. உண்மைதான், முன்பு அப்படியான சம்பவங்கள் நிகழ்ந்தன. அதை நாம் மறுக்கவில்லை. இப்போது எமது தலைமைப்பீடம் ஒரு தீர்க்கமான, உறுதியான முடிவை எடுத்திருக்கின்றது. அதாவது 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை நாங்கள் இராணுவத்தில் சேர்ப்பதில்லை.

### சிறுவர்கள் எம்மிடம் ஏன் வருகிறார்கள்?

கடந்த சில மாதங்களாக 18 வயதுக்கு குறைந்த 400 இளைஞர்களையும் யுவதிகளையும் தமிழ்ச்செல்வன் விடுதலை செய்து அந்தப் பெயர் பட்டியலை சர்வதேச மனித உரிமை நிறுவனங்களான யுனிசெவ், சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவற்றுக்கு வழங்கியுள்ளார்.

வயது குறைந்தவர்களை எமது படைகளில் சேர்ப்பதற்கு எமக்கு விருப்பமில்லை. ஆனால், அப்படிப்பட்ட இளவயதுடையவர்கள் எமது இராணுவ முகாம்கள் மற்றும் அரசியல்துறை அலுவலகங்களைத் தேடி வருகின்றனர். வீட்டில் வறுமைப் பிரச்சினை காரணமாக வருகின்றார்கள். சாப்பிட வருகின்றனர். பெரும்பாலான பெற்றோர்கள் தம்பிள்ளைகளை முகாம்களுக்கு அனுப்பிவைக்கின்றனர்.

அள்ளுப்பட்டு வந்து, தங்களை இணைக்கும்படி கேட்கிறார்கள். இது மாத்திரம் அல்ல. ஆயிரமாயிரம் சிறுபிள்ளைகள் வருகின்றனர். 2 வயது முதல் 12 வயதுவரை உள்ள பிள்ளைகள். அவர்களை எடுத்து பல சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நடத்துகின்றோம்.

15 முதல் 20 வரையான சிறுவர் இல்லங்கள் உள்ளன. எங்கள் பணத்தில் அவற்றைப் பராமரிக்கின்றோம். சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பதாகக் குற்றஞ்சாட்டுபவர்கள் அதாவது சர்வதேச நிறுவனங்கள் இந்த இல்லங்களைப் பார்க்கவேண்டும். அவற்றுக்கு நிதி உதவி வழங்க வேண்டும். அதற்கு அந்த அமைப்புக்களுக்கு விருப்பம் இல்லை.

இங்கு இயங்கும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தமது நிர்வாகச் செலவுக்கும், வாகன வசதிக்கும் பெரும் நிதியை விரயமாக்குகின்றன. ஐ.நா. ஒதுக்கும் நிதியில் முக்கால் பங்கை தமது செலவுக்கு எடுத்துவிட்டு, மீதியில் பாயும், பீங்கானும் வழங்கி வருகின்றன. அத்துடன் புலிகளுக்கு எதிராக அறிக்கை விடுகின்றன. அவர்களை இங்கிருந்து அடித்துக் கலைக்க எங்களுக்குத் தெரியாதா? ஆனால், நாம் பொறுமையோடு இருக்கின்றோம். இங்கு வந்து யதார்த்த நிலையைப் பார்த்து அதற்கேற்றவாறு செயற்படவேண்டும்.

நாங்களும் பிழைவிடவில்லை என்று சொல்லவில்லை. நாங்கள் சுத்தமான குசைப்பிள்ளை என்று கூறவரவில்லை. நாங்களும் ஆள்களைப் பிடித்துப் போயிருக்கிறோம். தலைவர் தலையிட்டு சில தளபதிகளைக் கூட விலக்கவேண்டிய சூழ்நிலை வந்திருக்கு. கடுமையான தண்டனை சிலபேருக்கு விதிக்கப்பட்டிருக்கிறது.

எங்களுக்கும் தெரியாமல் சில விளையாட்டுக்கள் நடக்கின்றன. இயக்கத்தின் ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் பார்க்கவேண்டும். அதோடு போராளிகளும் எமக்குத் தேவை. இராணுவ பலம் தேவை. ஆகவே தொடர்ந்து எமது இயக்கத்திற்கு ஆள்களைச் சேர்த்துக்கொண்டிருப்போம்.

ஐந்து கட்டப் பேச்சுக்கள் நடந்து முடிந்துவிட்டன. இப்போது ஆறாவது கட்டத்திற்கு போகிறோம். அடிப்படைப் பிரச்சினை பற்றிப் பேசப்போகிறோம். அரசாங்கத்தால் பேசமுடியுமா?

அடிப்படைப் பிரச்சினையில் ஒன்று தமிழர் தாயகம். அதாவது, வடக்கும் - கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம். அதுதான் அடிப்படை. முஸ்லிம் மக்களையும் நாம் அரவணைத்துக் கொண்டுபோகவேண்டும். ஆகவே, வடக்கும் கிழக்கும் முஸ்லிம் மக்களினதும் தாயகம்; தமிழ் பேசும் மக்களின் தாயகம். ஆகவே, எங்களுக்கு தாயக பூமி ஒன்று வேண்டும். அதை அங்கீகரிக்க முடியுமா?

இப்போதும் கொழும்பு அரசில் ஒரு தீர்க்கமான, தெளிவான அரசியல் பார்வை இல்லை. இனப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என் பதில் தெளிவில்லை. ஒருவருக்கும் இல்லை. ஐ.தே.கவுக்கும் இல்லை. சுதந்திரக் கட்சிக்கும் இல்லை. ஜே.வி.பிக்கும் இல்லை. (Vஆம் பக்கம் பார்க்க)


## D.A.M. பட்டதாரிகள் வைத்திய சங்க பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் : 16-03-2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 1.00 மணி

இடம் : இலங்கா சித்த ஆயுர்வேத வைத்திய கல்லூரி.

விடயம் :
1. கல்லூரி பவளவிழா பற்றி ஆராய்தல்
2. கல்லூரி வளர்ச்சி சம்பந்தமாக ஆராய்தல்.
3. D.A.M.பட்டதாரிகள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தல்.
4. பிறவிடயங்கள்.

சகல D.A.M.பட்டதாரிகளும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

Dr.S.பரமசிவம்பிள்ளை *தலைவர்* (15442) Dr.S.T.சிங்கஅரியரட்ணம். *செயலாளர்*


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் நடராசா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் நடராசா நேற்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் கடம்பேஸ்வரன் (கொக்குவில்), காலஞ்சென்றவர்களான குகேஸ்பரன் (உடுவில்), ஜெகதீஸ்வரன் (ஓட்டோஸ், வவுனியா), கார்த்திகைப்பிரகாசம் மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா (மானிப்பாய், சென்ரன்ஸ்), புவனேஸ்வரி, ஸ்ரீமுருகன் (கொழும்பு), சறோயா ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் நகுலேஸ்வரி, ஞானேஸ்வரி, சந்திரா, டொறத்தி, காலஞ்சென்ற சச்சிதானந்தம, குமாரசாமி (மருந்தாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4 மணியளவில் ஆரியம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய்.* (15503)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### விஜயகுமார் சசிகரன்

வீரபத்திர கோவில் தெற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் உடுப்பிட்டி அமரிக்கன்மிஷன் கல்லூரியில் தரம் 11 மாணவருமாகிய விஜயகுமார் சசிகரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (10.03.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயகுமார் (முன்னாள் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்க ஊழியர்) - விஜயகுமார் சறோஜினிதேவி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் இராஜேஸ்வரி, சசிகலா, விஜிகலா, சுஜிகலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, கதிராசி, செல்வன் மற்றும் ஆறி அவர்களினது அன்பு பேரனும் தங்கராசா, செந்திவேல், இராஜேந்திரம், நாகேந்திரம், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் சூரியகுமாரி (திருகோணமலை) ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, திருகோணமலையைச் சேர்ந்த காலஞ்சென்ற குணலிங்கம் மற்றும் சிவபாலன், ஜெயகுமார், உதயகுமார் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2003) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரும்பாலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*வீரபத்திர கோவில் தெற்கு,*
*உடுப்பிட்டி.* (15505)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லையா சிவக்கொழுந்து *(மார்க்கண்டு)*

தாவடி வடக்கு, மாரிதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவக்கொழுந்து நேற்று (11.3.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லையா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், நாகரத்தினம், ராசம்மா, இராசையா மற்றும் ஆறுமுகம், சோமசுந்தரம், சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும் நவரத்தினம் (கனடா), விக்னேஸ்வரிதேவி, சறோஜினிதேவி (கனடா), காசிவிசுவநாதன் (கனடா), சகிலாதேவி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திராதேவி (கனடா), காலஞ்சென்ற கருணானந்தன் மற்றும் திவாகரன் (கனடா), இராஜேஸ்வரி (கனடா), கணேசானந்தன் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் சஞ்ஜயன், நிரோஹாகா, சசிகரன், றஜீவ்கரன், தனுஷியா, கஜேந்திரன், ஷயித்தா, கணன், வசிக்கா, விவேகா, துவாரகன், விந்துஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.03.2003) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு பிற்பகல் 1 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி வடக்கு,*
*கொக்குவில் (மாரிதோட்டம்).* (15504)

தகவல்:
சிவபாக்கியம்(மனைவி).

## மரண அறிவித்தல்கள்

### தர்மரெட்ணம் (செல்வம்)

யாழ்ப்பாணம், சென்.பற்றிக்ஸ் வீதியை பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதியை வதிவிடமாகவும் தற்போது டோகாவில் வசித்தவருமாகிய தர்மரெட்ணம் (செல்வம்) நேற்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பி.மனவல் (வவா செல்லத்துரை) - காலஞ்சென்ற திரேசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லர் டேவிட் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், கெலன் எலிசபேத் (புவனா)வின் அன்புக் கணவரும், தீபா, திலக், திலீப் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜசிந்தா, ரெட்ணகுமார், றெமிசியஸ்குமாரி, ஆன்லுசியா, வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரியம், சகாயராணி, ரூபி, கிறேசியன், உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கிறகரி தங்கராஜா மற்றும் அல்வின், அலெக்ஸ், தேவு, கலிஸ்ரா, ராஜ்குமார், காலஞ்சென்ற றவி மற்றும் செல்லக்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*70/20, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (15502)

தகவல்:
த.கெலன் எலிசபேத்
(புவனா - மனைவி)

### நா.ஆ.நாகராஜா *(SLPS - Gr - I)*

(இளைப்பாறிய அதிபர். யா/கோப்பாய் நாவலர் பாடசாலை. யாழ்ப்பாணம்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்.கச்சேரியடியை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவரும் தற்போது பிரான்ஸ், CERGY PONTOISE நகரில் வசித்தவருமான ஆறுமுகம் நாகராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (10.03.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற நீலாம்பிகையின் அன்புக் கணவரும் செந்தில்ராஜன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), கோகுலராஜன் (விடுகை வருடம், விவசாயபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்), திருமதி யோக நந்தினி - மகேஸ்வரன் (பிரான்ஸ்), யோகராஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வித்தியா (ஆஸ்திரேலியா), மகேஸ்வரன் (பிரான்ஸ்), நளாயினி (ஆசிரியர், வவுனியா இ.க.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, பாக்கியலட்சுமி, இராசலட்சுமி, பராசக்தி மற்றும் நகுலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராகவி, சந்தீப், தர்சிகா, பிரவின், அட்சரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.கோகுலராஜன (மகன்)
395/147, சென்.ஜோசப்வாஸ் லேன்,
இறம்பைக்குளம், வவுனியா.
(T.P.: 024-21261)
ந.மோகனராஜ (மருமகன்)
205, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தொடர்புகளுக்கு:
*க.மகேஸ்வரன் (மருமகன்)*
*பிரான்ஸ்* - T.P. : 33130750703
*நா.செந்தில்ராஜன் (மகன்)*
*சிங்கப்பூர்* - T.P. : 657533924 (15448)

### திருமதி கனகசபாபதி நாகரட்ணம்

திருமதி கனகசபாபதி நாகரட்ணம் அவர்கள் நேற்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை கனகசபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - அமிர்தலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் விசாகரட்ணம், கருணானந்தன் (தோமஸ் - பிரான்ஸ்), திருமதி தர்மதேவி யோகநாதன் (ஆஸ்திரேலியா), நகுலேந்திரன் (சூட்டி), தவேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகநாதன் (ஆஸ்திரேலியா), கலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இராசமணி அருணாசலம் மற்றும் சி.கந்தையா (கனடா), பரமானந்தம் ([illegible]), திருமதி பத்மாவதி தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குழந்தைவேல், காலஞ்சென்ற குமாரசாமி, காலஞ்சென்ற [illegible] மற்றும் யோகராஜா (South Africa), காலஞ்சென்ற யோகமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதர்சினி (ஆஸ்திரேலியா), திருவுளன் (ஆஸ்திரேலியா), சிவகுலன், கஜேந்திரன், திபேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*71/17, சேர்பொன். இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (15447)

தகவல்:
Kr.நகுலேந்திரன்
(சூட்டி - மகன்)

### திருமதி வீரகத்தி சின்னம்மா

வரணி, மாசேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரகத்தி சின்னம்மா நேற்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் இராசையா, ஐயாத்துரை (இலங்கை மின்சார சபை), மீனாதேவி (கந்தரோடை) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திரராணி, மகேஸ்வரி, முருகையா (கந்தரோடை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2003) புதன்கிழமை பி.ப.1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை, சங்கம்புலவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தரோடை மேற்கு,*
*சுன்னாகம்.* (15501)

தகவல்:
இ.முருகையா (மருமகன்)
(முன்னாள் சந்தை, வரி வசூலிப்பாளர்)





அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான 8 கோரிக்கைகளை முன்வைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க அழைப்பின்பேரில் வடக்கு - கிழக்கில் நேற்று அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையொட்டி நகரில் நேற்று பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இப்பேரணி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி முன்பாகப் புறப்படுவதையும் பேரணியில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும்-

பேரணியின் முடிவில் பிரதமருக்கும், கல்வி அமைச்சருக்கும் முகவரியிடப்பட்ட மகஜரை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட பொதுச் செயலாளர் க.பஞ்சலிங்கம், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போலிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : வசந்தன்)

## நேற்று நகரில் இடம்பெற்ற

# தமிழர் ஆசிரியர் சங்கப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

## கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

குடாநாட்டுப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து நேற்று வேலைநிறுத்தம் மற்றும் பேரணி நடத்தினர். இதனால் கல்விச் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன.

அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உள்ளடக்கிய எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து இந்த அடையாள வேலைநிறுத்தமும் அமைதிப் பேரணியும் இடம்பெற்றன.

நேற்றுக்காலை வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக ஒன்றுகூடிய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் 10.30 மணியளவில் அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்டனர். இப்பேரணி முதலாம் குறுக்குத் தெரு, சப்பல் தெரு, முனீஸ்வரன் வீதி ஆகியவை ஊடாகச் சென்று யாழ்.பஸ்நிலையப் பகுதியை அடைந்தது.

தொடர்ந்து அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதியூடாகக் கண்டி வீதியை அடைந்த பேரணி, கண்டி வீதி வழியாக யாழ்.செயலகத்தை அடைந்தது. அங்கு வைத்து யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போலிடம் பிரதமருக்கும், கல்வி அமைச்சருக்கும் முகவரியிடப்பட்ட மகஜரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் கையளித்தார். அதனைத் தொடர்ந்து தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் அடங்கிய மகஜரை தொண்டர் ஆசியர் சங்கத் தலைவர் கே.இந்திரன் கையளித்தார்.

ஆசிரியர்களுக்கு இதுவரையும் வழங்கப்படாமல் உள்ள சம்பள நிலுவையை உடனடியாக வழங்கவேண்டும், தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கு திறைசேரிக்குப் பணிப்புரை விடுத்தல் வேண்டும், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் தமிழ்மொழியிலான அதிபர்கள் நியமிக்கப்படல்வேண்டும், தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கு வழங்கப்பட்ட பதவியுயர்வுகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு இனவிகிதாசார அடிப்படையில் வழங்கப்படவேண்டும், முன்பு ரத்துச்செய்யப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை பதவியுயர்வுகள் மீள வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் இம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்தப் பேரணியில் வடமாகாண அதிபர்கள் சங்கம், யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம், உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம், மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம், சித்திரமும் வடிவமைப்பும் பட்டதாரிகள் சங்கம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம், வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம், வடமராட்சி பாலர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள், பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் ஆசிரிய மாணவர்கள் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

ஆசிரியர்களின் நேற்றைய வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை. மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லவில்லை. காலையில் பாடசாலைகளுக்குச் சென்ற ஒரு சில மாணவர்களும் உடனடியாக வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். இதனால், பாடசாலைகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

(ஓ-10-9-5-86-173)

# ஆசிரியர் சங்கப் பேரணியின் சுலோக அட்டை வாசகங்கள்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.நகரில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டவர்கள் தாங்கிச்சென்ற சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்களில் சில வருமாறு:-

★ தொண்டர் ஆசிரியர்கள் தகைமை இல்லாதவர்களா?

★ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியும் கல்விச் சேவை ஆணைக்குழு அங்கீகாரம் வழங்காதது ஏன்?

★ ஆசிரியர் தரம் ஒன்றுக்கு 50 வயதா? அமைச்சர் தரம் ஒன்றுக்கும் 50 வயதை நிர்ணயம் செய்!

★ வேறு அரச நியமனங்களுக்குத் திறைசேரியில் நிதி உண்டு. தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கு மட்டும் திறைசேரியில் நிதி இல்லையா?

★ வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளது அசமந்தப் போக்கே ஆசிரியர் நியமனக் குழப்பத்துக்குக் காரணம்.

★ எவ்வளவு காலம் ஊதியம் இன்றிச் சேவை செய்வது?

★ ஆசிரியசேவை உள்வாங்கல்களை வருடாவருடம் ஒழுங்காகச் செய்!

★ உடற்கல்வி டிப்ளோமா முடித்தவர்களுக்கு உடன் நியமனம் வழங்கு!

(ஓ-10-86)

# கைதடிப் பகுதி அபிவிருத்திக்காக புதிய அமைப்பு அங்குரார்ப்பணம்

கைதடி,மார்ச்12

கைதடிப் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் அப்பகுதி மக்களால் "கைதடி அபிவிருத்திக் கழகம்" என்ற பெயரில் ஓர் அமைப்பு சமீபத்தில் உருவாக்கப்பட்டது.

கைதடியைச் சேர்ந்த அரச ஊழியர்கள், சனசமூக நிலைய நிர்வாகிகள், ஓய்வூதியர்கள் எனப் பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த அமைப்பு முதற்கட்ட நடவடிக்கையாக கைதடியில் உள்ள அரச மருந்தகத்தை கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, அரியாலை ஆகிய பிரதேச மக்களின் நலன் கருதி கிராமிய வைத்தியசாலையாகத் தரமுயர்த்த வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது.

கைதடிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த 297 குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவை உடனடியாக வழங்க சம்பந்தப்பட்டோருக்கு நெருக்குதல் கொடுப்பது எனவும் 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த நடவடிக்கையால் சேதமடைந்த கைதடி பொது நூலகத்தைப் புனரமைக்க சாவகச்சேரி பிரதேச சபையை வேண்டுவது எனவும் இந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது.

இக்கொடுப்பனவை வழங்க பிரதேச செயலகம் தாமதிக்கும் பட்சத்தில் போராட்டம் நடத்துவதற்கான முடிவும் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஓ-75)

## அவசியமான ஒன்றுதான், எனினும்

# பாதுகாப்பு வலயத்தில் குடியமர்வதில் மக்கள் பொறுமை காட்டவேண்டும்!

## யாழ். வந்த அமெரிக்கத் தூதுவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மார்ச்12

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய விடயமே. ஆனால், அந்த விடயத்தில் பொதுமக்கள் சற்றுப் பொறுமையாக இருத்தல்வேண்டியது அவசியமாகும்.

நேற்று குடாநாட்டுக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

தூதரக அதிகாரிகள் சகிதம் நேற்று பிற்பகல் 1 மணியளவில் இங்கு வந்த அவர் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேச்சு நடத்தினார். யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் உள்ள யாழ். பீச் விடுதியில் இடம்பெற்ற இச்சந்திப்பில் முதலில் மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அந்தக் கலந்துரையாடலின்போது மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் குடாநாட்டு நிலைமைகள் மற்றும் உயர் பாதுகாப்பு விவகாரம், மீள்குடியமர்வு சம்பந்தமான பிரச்சினைகள் என்பன குறித்து அமெரிக்கத் தூதுவரிடம் விளக்கிக் கூறினர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டபோதிலும் இங்கு இன்னமும் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. மீனவர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொன்விளையும் பூமியாக இருந்த பெரும் நிலப் பரப்பு உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரால் மக்களின் மீள்குடியமர்வுக்கும் விவசாய வாய்ப்புக்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆயுதங்கள் அமைதியாக இருக்கும் இந்த வேளையில் உயர் பாதுகாப்பு வலயம் தேவைதானா? எனவே, இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி அங்கு கல்வி மற்றும் தொழில் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அமெரிக்கத் தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அமெரிக்கத் தூதுவர் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்தில் அரசுக்கு பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. எனவே இந்த உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி படிப்படியாக மக்கள் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

எனவே, அதுவரையில் இந்த விடயத்தில் பொது மக்கள் சற்று பொறுமை காக்கவேண்டும்.

அமெரிக்க மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நீண்டகால நட்புறவு இருக்கின்றது. அமெரிக்கர்களைப் போலவே தமிழ் மக்களும் வியர்வை சிந்தி உழைத்து முன்னேறக்கூடியவர்கள்.

அவர்களை சொந்த இடங்களில் மீளக்குடிமர்த்தினால் தமது தொழில்களைச் செய்து அவர்கள் வழமை வாழ்வார்கள் என்பது எனக்குத் தெரியும்.

எனவே மீள்குடியமர்வு என்பது மிகவும் அவசியமானதுதான். ஆனால், அதனை உடனடியாகச் செய்யமுடியாது என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களுடன் அமெரிக்கத் தூதுவர் கலந்துரையாடினார். அந்தக் கலந்துரையாடலிலும் உயர் பாதுகாப்பு வலய விவகாரம் மற்றும் மீள்குடியமர்வுப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், என்.ரவிராஜ், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.


நேற்றுமுன்தினம் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் கப்பல் கடற்படையினால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்தும் அமெரிக்கத் தூதுவர் கருத்துக் கூறினார். அதுகுறித்து அவர் கூறுகையில் :-

சர்வதேசக் கடல் எல்லைக்குள் வைத்து புலிகளின் கப்பல் தகர்க்கப்பட்டது மிகவும் தவறானது எனவும் -

எனினும் அந்தக் கப்பலில் புலிகள் ஆயுதம் கடத்தி வந்திருப்பார்களேயானால் அதுவும் மிகத் தவறானது எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புகளை அடுத்து யாழ் நூலகத்துக்குச் சென்று அதனைப் பார்வையிட்ட அமெரிக்கத் தூதுவர் நேற்றே கொழும்பு திரும்பினார்.

(ஓ-4)




நேற்று யாழ். வந்த அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் மற்றும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும் யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் அமெரிக்கத் தூதரை மாலை அணிவித்து வரவேற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் : அற்புதன்)

கொம்பியூட்டரின் துணையுடன் தயாரிக்கப்படும்
பொலிமர் றபர் சீல்களை ஒரே நாளில் தயாரித்துப் பெற்றுக்கொள்ள

**கலைக்குடில்**

239, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

(15418)

காலத்தால் மாழுதடைந்த உங்கள் அன்புக்குரியவரின் போட்டோக்களை
கொம்பியூட்டரின் துணையுடன் மீண்டும் சிறந்த முறையில் புதுப்பித்துக் கொள்ளலாம்.

## முகாம் இடமாற்றம்

வரணி - கொடிகாமம் பிரதான வீதியில் கரம்பைக்குறிச்சி கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுமார் 20 வீடுகளில் நிலைகொண்டிருந்த 52ஆவது படையணியினர் தற்போது அங்கிருந்து வெளியேறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த முகாமுக்கு அருகில உள்ள வெற்றுக்காணிகளை புல்டோசர் மூலம் துப்புரவுசெய்து பாரிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த புதிய முகாமுக்கே இராணுவம் தனது தலைமையகத்தை மாற்றத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஓ-170)

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

1) சுவீற் மேக்கர்
2) சமையல்காரர்
3) சமையல் உதவியாளர்
4) ரீ மேக்கர்
5) றொட்டி பாஸ்
6) கைவேலையாள்கள்
7) வெயிட்டர்

தொடர்பு: **ஸ்ரீ தாமோதர விலாஸ்**
401, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(15433)

## நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

### திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய
# சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

"நாம் பிரியவேண்டிய வேளை வந்துவிட்டதை உணர்ந்தேன். படகின் வெளியினை இயந்திரத்தின் விசிறிகள் சுழன்று சுழன்று கடலைக் கடைய கடல்நீர் வெண் நுரையாக வழிந்து கொண்டிருந்தது. 17ஆண்டுகளாக நாம் வாழ்ந்த மண்ணை, நாம் நேசித்த மண்ணை, நாம் கூடிவாழ்ந்த மக்களை விட்டுப் பிரிந்து செல்லும் நேரம் நெருங்கிவிட்டது. கரையிலே எம்மோடு கூடிப்பழகிய விடுதலைப் புலிப் போராளிகள், இளம்பெண்களும், ஆண்களும் பழைய நண்பர்களுமாக எல்லோருமே "போய் வாருங்கள்" என்று கையசைத்தபடியே கரை நீளம் நின்றார்கள். நீலம்பாரித்த கரையோர நீர்ப்பரப்பில் இருந்து இந்து மா கடலின் மங்கலான ஆழப் பகுதிக்குள் படகு மெதுவாக எம்மை உந்திச் சென்றபோது, கரையில் தென்பட்ட மனித உருவங்களும் நீள் கரையோர இயற்கைக் காட்சியும் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. குளமாகிவிட்ட எனது கண்களில், கடலோர நிலப்பரப்பு ஒரு மெல்லிய கறுப்புக் கீறாக மறைந்து கொண்டிருந்தது. என்னில் ஒரு பகுதியை பின்னால் விட்டுவிட்டு நான் போய்க் கொண்டிருந்தேன்.

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*
*இனியும் தாமதிக்காதீர்கள்*

**உதயன் பத்திரிகை முகவர்களிடமும்,**
**பிரபல புத்தக நிலையங்களிலும்**
**பெற்றுக்கொள்ளலாம்.**

**பக்கங்கள்: 479** **விலை 500/-**

## M.A, M.Com. (காமராஜர் பல்கலைக்கழகம்)

மேற்குறிப்பிட்ட பட்டப்பின் படிப்பிற்குரிய பல்கலைக்கழக பதிவிற்குரிய விண்ணப்ப முடிவு திகதி ஏப்ரல் 10 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவற்றிற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.

*விவரங்களுக்கு:*

**யாழ். இணைப்பாளர்,**
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(15436)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
21 - 11 - 1947



விண்ணில்
11 - 02 - 2003

### திருமதி இராசரத்தினம் கிருஷ்ணேஸ்வரி

*பாசமுடன் எமையெல்லாம் பார்த்து நின்றாய்*
*பாதியிலே தவிக்கவிட்டுப் பறந்து சென்றாய் அம்மா!*
*காசினியில் உனை எண்ணி வாடுகிறோம் நாமிங்கு*
*காணிக்கையாய் எங்கள் கண்ணீரைத் தருகின்றோம்!*

இன்று 12.03.2003 புதன்கிழமை நிகழும் அன்னையின் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'ராஜகிரி' அல்வாய்.* (15425) - குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
10 - 06 - 1930



விண்ணில்
10 - 02 - 2003

### அமரர் கதிரவேலு சுந்தரம் (தொழிலதிபர்)

கடந்த 10.02.2003 திங்கள் இறைவனடி சேர்ந்த அன்புக்கும் பாசத்திற்கும் உரியவரான அமரர் கதிரவேலு சுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 28ஆம் திகதி (12.03.2003) புதன்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அவ்வைபவத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

திருமதி இராசம்மா சுந்தரம்,
சு.உதயசீலன், சு.தர்மசீலன்
(மக்கள்).

'உதயபவனம்',
வல்லெட்டித்துறை வீதி,உடுப்பிட்டி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
06 - 2 - 10 - 2 - 1940



மறைவு
10 - 3 - 02 - 3 - 2003

### அமரர் ஆறுமுகம் இராஜலிங்கம்
(ஓய்வுபெற்ற பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)

சீரிய அன்புதனைச் சிறப்புடனே எமக்களித்து
சின்னச் சிரிப்புடன் சினக்காமல் எமைக் காத்தீர்
கவலைகள் நாம் மறந்து கண்ணியமாய் வாழ
கனிவுடனே அறிவுரைகள் கூறிய அப்பாவே!
பற்றுப் பாசத்துடன் பக்கத்தில் இருத்தி
பல்கதைகள் பக்குவமாய்க் கூறியவரே அப்பா - நீங்கள்
சொல்லாமல் மறைந்து சென்றதனால்
சோகம் மிகுந்து சோர்ந்து துடிக்கின்றோம்.
நோயுற்ற காலத்திலும் பிள்ளைப் பாசந்தான் பெரிதென்று
நோயைத் தூசென நினைத்தவர் நீங்களப்பா!
நீங்களில்லாத எமது இல்லம் - இன்று
நிறையிருட்டாய் இருக்குதப்பா!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய நித்தமும் இறைவனை வேண்டுகிறோம்.*

இன்று (12.03.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(15421)

தகவல்
*திருமதி பவானி இராஜலிங்கம்,*
*சிங்கர் லேன், உடுவில்.*
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்.

# ஒருவார காலத்தில் நியமனம் வழங்குக; இல்லாவிட்டால் தொடர்மறியற் போர்!

## தொண்டர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்12

தொண்டராசிரியர்களுக்கு ஒருவார காலத்துக்குள் நியமனம் வழங்குவதற்கு கல்விச் சேவை ஆணைக் குழு நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் அதனை எதிர்த்து யாழ்.குடாநாட்டிலுள்ள கல்வி வலயங்களின் செயற்பாடுகளை முடக்கும் வகையில தொடர் மறியற் போராட்டங்கள் நடத்தப்படும்.

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தது. இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நடத்தப்பட்ட அமைதிப் பேரணியின் இறுதியில் யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சங்கத் தலைவர் கி.இந்திரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல வருடங்களாக பல்வேறுபட்ட இன்னல்களுக்கு மத்தியில் சிறு தொகை பணத்துடன் யாழ்.மாவட்ட மாணவர்களின் நன்மை கருதி சேவை புரிந்தோம். கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்கும் பொருட்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

அப்போது இருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக ஒருநாள் கூட பாடசாலைக்குச் செல்லாத பலர் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆசிரிய நியமனங்களைப் பெற்றனர்.

அவர்கள் இன்று ஆசிரிய கலாசாலைகளிலும் கல்வி பெற்று வெளியேறவுள்ளனர்.

ஆனால்,- நேர்மையுடன் சேவை புரிந்த பலருக்கு இன்றுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இதனால், மனமுடைந்த நாம் கடந்த வருட நடுப்பகுதியில் யாழ். கல்வி வலயத்தின் செயற்பாடுகளை முடக்கி தொடர் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

அப்போது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட முயற்சியால் கல்வி அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடினோம். அக் கலந்துரையாடலின் போது அவர் விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

ஆனால், இன்றுவரை அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. இதனால் மனமுடைந்துள்ள நாம் இன்று தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து அமைதிப் பேரணியை நடத்தி, எமது கோரிக்கை அடங்கிய மகஜரை யாழ்.அரச அதிபர் ஊடாக பிரதமர் மற்றும் கல்வி அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ளோம்.

இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் வடமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து எதிர்வரும் 19ஆம் திகதி முதல் யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் தொடர் மறியல் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஓ-5-9-10-86)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வரும மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.00 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள பற்றிய விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டங்களில் -

**16 வயதுப் பிரிவு**

வேலணை சேர் வைத்திலிங்கம் வித்தியாலயம் எதிர் யாழ். மத்திய கல்லூரி.

(ஓ-5-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்12

உரும்பிராய் வடக்கு றோ.க. வித்தியாசாலை வருடாந்த மெய்வன்மை போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (ஓ-5-72)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்12

நாரந்தனை றோ.க.மகா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் த.சத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொள்வார். (ஓ-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்12

பெரியபுலம் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவின் விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் செல்வி அகந்தையா தலைமையில் நடைபெறும்.

இதில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஓ-6)

பேராதனை பல்கலைக்கழக பகிடிவதை:

## 10 மாணவர்கள் பொலீஸில் சரண் 19ஆம் திகதி வரை விளக்கமறியல்

கொழும்பு,மார்ச்12

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் நடைபெற்ற பகிடிவதை தொடர்பாக பத்து சிரேஷ்ட மாணவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். கண்டி பிரதம நீதிவான் லியோன் செனவிரத்ன இம் மாணவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருக்கிறார்.

மேலும் இரு மாணவர்களை கைது செய்யுமாறு பிடிவிறாந்தும் பிறப்பிக்கப்பட்டது.

இரண்டு மாணவர்களும் நான்கு மாணவிகளும் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டு காயமடைந்த சம்பவம் தொடர்பாக பேராதனை பொலீஸார் விசாரணை மேற்கொண்டதையடுத்து நேற்றுமுன்தினம் சந்தேகத்துக்குரிய 10 மாணவர்கள் பொலீஸில் சரணடைந்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்களை 19ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ)

## புலிகள் இயக்கத்தில் இணையவந்த மாணவி பெற்றோரிடம் ஒப்படைப்பு

சாவகச்சேரி,மார்ச்12

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையவிரும்பி தென்மராட்சி கோட்ட அரசியல் துறைச் செயலகத்திற்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை வந்திருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த 14 வயது மாணவியை அவரது வயதின் காரணமாக பெற்றோரிடம் விடுதலைப் புலிகள் மீள ஒப்படைத்தனர்.

மாணவியின் பெற்றோரையும் அவர் கல்வி கற்கும் பாடசாலையின் வகுப்பாசிரியையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் மாணவிக்கு கல்வியின் அவசியம் குறித்து விளக்கமளித்த தென்மராட்சி கோட்ட அரசியல்துறைக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் ஸ்ரீநாத் மாணவியை பெற்றோருடன் அனுப்பி வைத்தார்.

(ஓ-31)

## கடற்படையின் பலத்த பலப்பிரயோகம் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு இசைவானதல்ல

### கண்காணிப்புக்குழு கருத்து; சர்வதேசக் கடல் சட்டம் குறித்து ஆய்வு

கிழக்குக் கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல் மீது தாக்குதல் நடத்துவதற்கு கடற்படை தனது ஆகக்கூடிய பலத்தைப் பிரயோகித்திருப்பதாகவும் அது போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு இசைவானதல்ல எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கருத்துக் கூறியிருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

அக்கப்பலில் புலிகள் ஆயுதங்களைக் கொண்டுவந்திருந்தால் அது போர்நிறுத்த மீறலாகும் எனவும் தெரிவித்திருக்கும் கண்காணிப்புக் குழுவினர் எவ்வாறாயினும் அது குறித்து இன்னமும் தெளிவான ஒரு கருத்தைக கூறமுடியாதிருப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

அதனால், இச்சம்பவம் குறித்து விரிவான ஆய்வொன்றை மேற்கொண்டிருப்பதாகவும் தாக்கப்பட்ட கப்பல் சர்வதேசக் கடல் எல்லைக்குள்தான் இருந்ததா என்பதை நிச்சயித்துக்கொள்வதற்காக கண்காணிப்புக்குழுவின் சட்ட ஆலோசகர்கள் சர்வதேசக் கடல சட்டங்கள் தொடர்பான ஆராய்வில் ஈடுபட்டிருக்கின்றனர் எனவும் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

திருகோணமலையிலிருக்கும் தமது பிரதிநிதிகள், புலிகளின் கப்பலைத் தாக்குவதில் ஈடுபட்ட கடற்படைக் கப்பலைப் பரிசோதிப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர் எனவும் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இதற்கிடையே கண்காணிப்புக் குழுவின் தலைவர் டெலிவ்சன் நேற்று இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சந்தகிரி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருந்தார்.

புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்த அவர் இன்று கிளிநொச்சி செல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. (ஐ)

## சமாதானம் என்ற பெயரில் எங்களை....

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

**அதிகாரம் இல்லாத அரசு என்ன செய்யும்?**

கொழும்பு அரசு என்று கூறும் போது அது எதைக் குறிக்கிறது. அங்கு ஆட்சி அதிகார மையம் இரண்டு உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் கீழ் ஒன்று, அங்கு அவருக்கு பெரிய அதிகாரம் இல்லை. அவருக்கு நல்ல மனம் இருக்கிறது. அவர் நல்ல மனிதர். அவரோடு பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட என்ற அருமையான ஆள்கள் இருக்கின்றனர். அவர்களோடு பேசலாம். ஆனால், அவர்களிடம் அதிகாரம் இல்லை.

கடற்படைப் பிரச்சினையை அவர்களோடு எடுத்தால் ஒன்றும் நடக்காது. கடற்படைக்கு கட்டளை இடுவது அம்மாதான். நேற்றுத்தீவில் என்ன நடந்தது?

நாங்கள் வன்னியில் இருந்து பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுக்க அம்மா எதிராக நின்றார். புலிகளின் மீன்பிடிப் படகை கட்டி எடுத்துப்போகும்படி அம்மா உத்தரவிட்டார்.

பாதுகாப்புச் செயலருடன் பேசிக்கொண்டிருந்தோம். அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. கடற்படை அதிகாரி அம்மா சொன்னதைச் செய்கிறார். கடற்படைத் தளபதி சந்தகிரி அம்மாவின் ஆள். அப்படி எப்படி நாங்கள் பேசுவது?

திருமலைக்கு அப்பால் நேற்று நடந்த சம்பவத்தை ரணில் விக்கிரமசிங்கவினால் தீர்க்கமுடியாது கடற்படை 200 மைல்களுக்கு அப்பால் போய் தான்தோன்றித்தனமாக நடக்கின்றது. அதை இவரால் தடுக்க முடியாது. அம்மாவால்தான் முடியும்.

அம்மாவுக்கு கீழ்தான் ஆயுதப் படைகள். கொழும்போடு நாங்கள் பேசும்போது அவர்களை அரசாங்கம் என்று கூற முடியாது. அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

சட்டவாக்க அதிகாரம் பெற்ற ஓர் அரச அலகோடு பேசுகிறோம். நிர்வாக அதிகாரம் கொண்ட அரசு அங்கே இருக்கிறது. எனவே, எவ்வளவு தூரம் நாம் போவது? கனதூரம் ஓடமுடியாது.

சமஷ்டி அரசமைப்பை கேட்கிறோம் என்று வைப்போம். அந்த அரசமைப்பை இந்த அரசால் கொண்டு வரமுடியுமா? அது முடியாது. பெரும்பான்மை இல்லாத அரசு, முஸ்லிம் எம்.பிக்களில் தொங்கிக்கொண்டிருக்கிறது. எங்களது தமிழ் எம்.பிக்களின் நிலை அரசுக்குத் தெரியும். அந்த நிலையில் புதிய அரசமைப்பைக் கொண்டுவந்து எப்படித் தமிழ்மக்களின் நீதியான, நியாயமான கோரிக்கையை ரணில் நிறைவேற்றப்போகிறார்? அவரால் அது முடியாது; நாங்கள் தொடர்ந்து கேட்போம்; தொடர்ந்து வாதாடுவோம். புதிய அரசமைப்பைக் கொண்டுவரும்படி தொடர்ந்து கோருவோம்.

அம்மாவும் எதற்கும் விடமாட்டார். அவாவுக்கு 2 வருடங்கள் இன்னும் இருக்கிறது. 2 வருடத்தில் அவர் ஆடாதகூத்து எல்லாம் ஆடப்போகிறார். அவர் லேசான ஆள் இல்லை. தனது அரசியல் கட்சிகளான சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி மற்றைய சிங்கள இனவாத சக்திகளையும் ஒன்று திரட்டி அரசுக்கு எதிராக பெரிய தேசிய எழுச்சியை நடத்தி வருகிறார். கொழும்பில் ஒருலட்சம் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஏன்? சமாதானத்துக்கு எதிராக எழுந்தனர்.

புலிகளுக்கு ஓர் அதிகாரம் தரவில்லை. கடந்த ஒருவருடமாக என்ன நடந்தது? தமிழ் மக்களுக்கு முக்கியமாக ஒரு நன்மையும் கிடைக்கவில்லை. பொருளாதாரத் தடை மட்டும் நீக்கப்பட்டுள்ளது. அது ஒரு நல்ல விஷயம். பத்துப் பதினைந்து ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருள்கள், உணவு வகைகளை இப்போதுதான் எமது மக்கள் பெறக்கூடியதாக உள்ளது. இப்பதான் சீமெந்து வருகின்றது. அழிந்த வீடுகளை கட்டுகின்றோம்.

என்றாலும், இடம்பெயர்ந்த 10 லட்சம் மக்கள் தங்கள் கிராமங்களுக்கு சென்று குடியமரமுடியாத அவலநிலை தொடர்கிறது. இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறித் தங்களின் இடங்களை விட்டு வெளியேறத் தயாராக இல்லை. ஏன்? அம்மா விடமாட்டா. இராணுவம் விலக விரும்பினாலும் அம்மா போக வேண்டாம் என்று சொல்வார்.

கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இடங்களில் இருந்து வெளியேறாதே என்று அம்மா சொல்கிறா.

தமிழ்மக்களுடன் செறிந்து வாழ வேண்டும். மக்கள் இராணுவத்துக்கு ஒரு பாதுகாப்புக் கேடயம். அதனால் மக்களிடம் இருந்து விலகிப் போக மாட்டார்கள். ஆனால், எங்கள் மக்கள் தங்கள் வீட்டுக்கு, தங்கள் பாடசாலைக்கு, தங்கள் கோயிலுக்குப் போகமுடியாமல் இருக்கிறார்கள்.

போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்து ஒருவருடமாகியும் இந்த நிலை மாறவில்லை. மாறும் என்று நாங்கள் எதிர்பார்க்கவுமில்லை. எங்களால் முடிந்தளவு இழுத்துப் பார்ப்பம். உலகிற்கும் சொல்லிப் பார்ப்பம். அகதியான மக்கள் தங்கள் தாயகத்துக்கு - சொந்தக் கிராமத்துக்கு - போக வேண்டும் என்பது சர்வதேச ஐ.நா. நியமங்களில் உள்ள அடிப்படை உரிமை. அந்த உரிமையும் மறுக்கப்படுகின்றது.

கடைசியாக நம்பியார் என்ற ஒருவரிடம் பொறுப்பைக் கொடுத்து இருக்கிறார். நம்பியாரின் அறிக்கையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு பூரந்தி ஒரு நம்பியாரைத் தெரியும். வில்லன் நம்பியார். இவர் என்ன மாதிரி வில்லன் விளையாட்டு விடுகிறார் என்று பார்ப்பம்.

எவ்வளவு நெருக்கடிகளின் மத்தியிலும், எவ்வளவு ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியிலும், எவ்வளவு ஆபத்தான சூழ்நிலைகளின் மத்தியிலும் நாங்கள் இந்த சமாதான முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண புத்திஜீவிகளான நடுத்தர வர்க்கத்தாரான நீங்கள்தான் புரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் அங்கிருந்துதான் அதிக விமர்சனம் வருகிறது.

எங்களால் யாழ்ப்பாணம் வரமுடியாது. சுகவீனத்துடன் இரவல் கிட்னியைப் பொருத்திக்கொண்டு உலகம் முழுவதும் திரிகிறோம். எப்ப விழுந்துவிடுகிறோமோ தெரியாது. இங்கு வருவதுகூட எமக்கு ஆபத்து. இங்கு மலேரியா பிடித்தால் நான் சரி. அப்படியிருக்க ஏறன். பதவி எடுக்கவா வருகிறேன்? பட்டம் பதவி எங்களுக்கு இல்லையா? உங்கள் நலனுக்காக வருகின்றோம். மக்களுக்கு சமாதானம் வேண்டும். நீதியான தீர்வு வேண்டும்.

கடந்த 56 வருடமாக எமது மக்கள் ஏமாற்றப்பட்டு உள்ளனர். இப்போது நாங்கள் ஒரு பலத்தோடு இணைந்து நியாயமான கோரிக்கையை முன்வைத்து அரசுடன் பேசுகின்றோம். இப்போதும் எமக்கு புற நிலை சரியில்லை.

தமிழ் எம்.பிக்கள் ஒன்று திரண்டு புலிகளுக்குப் பின்னால் அணிதிரண்டு ஒரே குரலாக - ஒரே இயக்கமாக - ஒருவரின் தலைமைத்துவத்தை ஏற்றிருக்கும் சூழ்நிலை இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. அப்படித் தமிழ் இனம் ஒரு சக்தியாகத் திரண்டு நிற்க சிங்கள தேசம் உடைபட்டு நிற்கின்றது. முரண்பாடுகள் தலைதூக்கி நிற்கின்றன. அரசே இரண்டாகப் பிளந்து கிடக்கின்றது. அப்ப நாங்கள் என்ன செய்ய? எங்கள் மீது பழியைப் போடாதீர்கள்.

நேற்று நடந்த சம்பவத்தில் இருந்தே நாங்கள் யுத்தத்தைத் தொடங்கி இருக்கவேண்டும். ஆனால், நாங்கள் தொடக்கவில்லை; தொடக்கப்போவதும் இல்லை; ஏன்? அமைதியை நாங்கள் குலைக்கமாட்டோம். அமைதியைக் காக்க, அமைதியைப் பேண எங்களால் முடிந்த அளவு பொறுமையைப் பேணுவோம். ஆனாலும் பொறுமைகளுக்கும் ஓர் எல்லை உண்டு. குட்டக்குட்டக் குனிபவனும் மடையன் என்பார்கள். ஆகவே நாங்களும் நிலைமையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

உலகுக்கு எமது நிலைமையை விளக்க வேண்டும். சிங்கள தேசம் கடும் பிரசாரம் செய்கின்றது. நேற்று நடந்த சம்பவத்தையும் ஆயுதக் கடத்தல் என்று எம்மீது பழியைப் போடுகின்றது. சரி ஆயுதத்தையே கடத்தினோம். என்றாலும் என்ன? நீ ஆயுதம் கொண்டுவரவில்லையா?

நீ என்ன கேட்கிறாய். சண்டையைத் தொடங்கி நீ கொண்டுவாற ஆயுதத்தை அடித்துப் பறிக்கச் சொல்கிறாயா? அதை நாங்கள் இலகுவாகச் செய்யலாம்.

பேச்சு என்பது யுத்தத்தை விடக் கஷ்டம். தலைவர் பிரபாகரனிடம் நேற்றுக் கேட்டேன். "எனக்கு ஒரு ஓய்வு தாடாபா. இவ்வளவு காலமும் உழைத்தது போதும். 25வருடமாக உன்னுடன் சேர்ந்து இழுபடுகின்றேன். இனியாவது ஓய்வைத் தா. யாழ்ப்பாணத்தில் போய்ப் படுத்து ஆறுதல் எடுப்போம்" என்று கேட்டேன். "புலிகள் இயக்கத்தில் இருப்பவர்களுக்கு ஓய்வு என்றால் மரணம்" என்று அவர் பதில் அளித்தார். அதோடு வாயை மூடிக் கொண்டு வந்துவிட்டேன்.

அப்படியிருக்கு எமது நிலைப்பாடு.

நேர்மையாக, உறுதியாக, நிதானமாக இந்த அமைதியைப் பேணி சமாதான வழி மூலம் எமது மக்களுக்கு ஓர் இறுதியான, நிம்மதியான, கௌரவமான தீர்வைப் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்வோம் - இப்படி பாலசிங்கம் கூறினார். (ம-3)

## தொழில்திறன் பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ்.கல்விவலயப் பாடசாலைகளில் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற முறைசாராக் கல்வித் தொழிற்றிறன் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர் விவரங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்விவலய முறைசாராப் பிரிவு அறிவித்துள்ளது.

சித்தியடைந்த மாணவர்களின் சான்றிதழ்கள் யாழ்.மத்திய கல்லூரியில் வைத்து வெகுவிரைவில் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-8-51)

## சந்நிதியான் ஆசிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி,மார்ச்12

தொண்டைமானாறு சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆசிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாணவர்களின் உரைகள் இடம்பெறவுள்ளன.

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மாணவர்களான த.நிதர்சன் "மானுட ராதல் அரிது" என்ற தலைப்பிலும், சி.கோபிகிருஷ்ணா 'விழுப்பொருள்" என்ற தலைப்பிலும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் பா.சக்திநாதன் "தமிழ் முருகன்" என்ற தலைப்பிலும் உரையாற்றுவார்கள்.

நிகழ்வுக்கான அறிமுகவுரையை வசாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் செ.பரமேஸ்வரன் நிகழ்த்துவார்.

(ஒ-173)

## மந்திகையில் கோழிகளுக்கு தடுப்பூசி

வடமராட்சி,மார்ச்12

மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் வளர்ப்புக் கோழிகளுக்கு அம்மைநோய்த் தடுப்பு ஊசிமருந்து ஏற்றப்படவுள்ளது.

வடமராட்சிப்பகுதியில் கோழிகள் வளர்ப்போர், கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றி கோழிகளுக்கு நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ளுமாறு பருத்தித்துறை கால்நடை வைத்திய நிலையம் அறிவித்துள்ளது.

(ஒ-173)

## உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளருக்கு நிரந்தர நியமனம்

வலி.வடக்கு,மார்ச்12

வடக்கு - கிழக்கில் உள்ள கூட்டுறவுத் திணைக்களத்தில் உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்களாக கடமையாற்றிவருபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக இந்த உத்தியோகத்தர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-86)

## மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்12

அகில இலங்கை கரபந்தாட்டச் சங்கமும், யாழ். மாவட்ட கரபந்தாட்டச சங்கமும் இணைந்து நடத்தும் கரபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் கரபந்தாட்டச்சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளன.

அகில இலங்கை கரபந்தாட்டச் சங்கத்தைச் சேர்ந்த வி.வி.குணரத்தின, எம்.ஏ.பி. செனவிரட்ன மற்றும் டபிள்யு. அமரசிங்க ஆகியோர் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குவர்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோரை யாழ். மாவட்டக் கரபந்தாட்டச் செயலாளர் கே.மனோகரனுடன் தொடர்புகொண்டு தமது பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-5)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

12.03.2003

HAPPY BIRTHDAY



82, மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த
சதீஸ்குமார் - சியாமளா தம்பதிகளின்

### செல்வப் புதல்வன் ச. கபினாஸ்

அவர்கள் இன்று (12.03.2003) புதன்கிழமை 4 மணிக்கு யாழ். ரசிகரஞ்சன சபா மண்டபத்தில் (விநாயகர் மண்டபம்) தனது முதலாவது பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், பாட்டன், அம்மப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், மாமாமார், பூட்டி, பிரான்ஸில் வசிக்கும் அப்பப்பாமார்கள், அப்பம்மா, இத்தாலியில் வசிக்கும் தாத்தா குடும்பத்தினர் மற்றும் யாவரும் அரசடி விநாயகர் அருளால் சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழவேண்டும் என உளமார வாழ்த்துகின்றார்கள்.

82, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T,P.: 0777 146844

தகவல்:
திரு.திருமதி சதீஸ்குமார்
*(முகாமையாளர் மலாயன் கபே).*

(15443)


## விற்பனையாகின்றன

விவசாயத்திற்கேற்ற அமோனியா, யூரியா போன்ற சகல உர வகைகளும் விற்பனையாகின்றன.

தொடர்பு: M.L. & CO.
No.235, 237, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2506

(15435)


## பெருமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆவரங்கால் கிழக்குப் பகுதியில்
தன்னிகரற்ற சேவையாற்றி
மக்கள் மத்தியில்
மங்காப் புகழ் பெற்ற

**ஆறுமுகம் குலேந்திரநாயகம்**

அவர்கள் கிராம அலுவலர் தரம்I இற்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டு பெருமகிழ்வுடன் பாராட்டி, அவர் மேலும் பல பதவிகளைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(15434)     மணற்பகுதி வாழ்.மக்கள்.

---


## CBF, ACBF, DBF

### மாணவர் கவனத்திற்கு!

- CBF, ACBF, DBF ஆகிய பரீட்சைகளுக்கு யாழ்.மாவட்டத்தில் தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் கல்லூரிக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றை இன்று (12.03.2003) முதல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட மாட்டாது)
- CBF மாணவர்களுக்கான சந்தைப்படுத்தல் கருத்தரங்கு (Marketing Seminar) 16.03.2003 (3.00மணி), 17.03.2003 (9.00மணி), 18.03.2003 (9.00மணி) போன்ற தினங்களில் இடம் பெறும்.
- புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி: 30.03.2003

INQUIRIES / REGISTRATION
**DIRECTOR**
***JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.***
464, Hospital Road,
Jaffna.

(சி-26903)


## கண்ணீர் அஞ்சலி

### டாக்டர் சிவா வேலாயுதம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சித்த மருத்துவப் பகுதியினர். யாழ்.மாநகரசபை.

(15446)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி T.விக்டோரியா அன்னரட்ணம்

இருபாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி T. விக்டோரியா அன்னரட்ணம் அவர்கள் நேற்றுமுன்தினம்(10.03.2003) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் ஜஸ்மினின் அன்புத் தாயாரும் பாலகிருஷ்ணராஜாவின் (BALI-நில அளவையாளர்) மாமியாரும் ஜெவ்றி, ஜெரால்ட் ஆகியோரின் பாட்டியும் அல்பேட் ஜெபநாயகம் (கானான் ஜெப ஆலய வண. பிரதம போதகர்) அவர்களின் சிறியதாயாரும் வண.பிதா போதகர் ஏபிரகாமின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான ரோசலின் வல்லிபுரம், அருட்திரு. சகோதரி செபபாக்கியம் தம்பு(C.P.M.), திரவியம் சுப்பிரமணியம், தங்கரெட்ணம் தம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (12.03.2003) புதன்கிழமை மூன்று மணிக்கு கானான் ஜெப ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு இராசவீதி, கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்வமஹால்,*
*இருபாலை, கோப்பாய்.*     (15429)

தகவல்:
போதகர் ஏபிரகாம்.

### கிட்டிணர் சின்னத்துரை (நடராசா)

*(முன்னாள் ஹாட்லி கல்லூரி அலுவலக உதவியாளர்)*

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் துன்னாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணர் சின்னத்துரை அவர்கள் நேற்று (11.03.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுசிலாதேவி, சாந்தாதேவி (லண்டன்), சித்திராதேவி (கனடா), உமாகாந்தன் (சுவிஸ்) மனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரராஜ், ராதாகிருஸ்ணன் (லண்டன்), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

மகள் சுந்தராஜ் சுசிலாதேவி, இமையாணன் கிழக்கு, இமையாணன் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன் கிழக்கு,*
*இமையாணன்.*     (C/26904)

தகவல்:
சுந்தரராஜ்

---


## யாழ் நகரில் IBM கணனிகள் விற்பனை / பராமரித்தல் / பழுதுபார்த்தல்



யாழ் நகரில் IBM கணனிகளுக்கு விற்பனை/பராமரிப்பு/பழுதுபார்த்தல் சேவைக்காக அதிகாரமளிக்கப்பட்ட (Authorised) நிறுவனம் MICRO PC SYSTEMS என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

● Pentium 4 Personal Computers ● Laptop / Think Pads ● Servers



குறிப்பு : தற்பொழுது IBM கணனிகளை யாழ் நகரில் பாவனை செய்பவர்கள் இலங்கையில் எவரிடம் கொள்வனவு செய்திருந்தாலும் MICRO PC SYSTEMSல் பதிவு செய்வதன் மூலம் இலவசமாக 3 வருட உத்தரவாதத்தை (Parts Replacement for 3 years) யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

IBM கணனியில்
- உதிரிப்பாகங்கள் 100% பரீட்சிக்கப்பட்டவை (100% Tested)
- 3 வருடங்கள் உதிரிப்பாகங்களுக்கு உத்தரவாதம் (3 Years Warranty for Parts)
- 3 வருட பராமரிப்பு சேவை யாழ் நகரிலேயே வழங்கப்படும் (3 Years Service)

MICRO PC SYSTEMS
தலைமை காரியாலயம் வெள்ளவத்தை 15, 36th Lane,Col- 6. : 074-516764,074-513235
கிளை யாழ்ப்பாணம் 175/3, Kasthuriyar Rd, Jaffna. Tel : 0777-308417